ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# ஷ்ணுஸ்தல மஞ்சரி.

19579

இது

திருமயிலை ஸ்ரீ பேயாழ்வார் பக்தஜன சபையின்

காரியதரிசியும்,

ஸ்ரீமத் உபய வேதாந்தாசார்ய,

ஸ்ரீமான் ஆசூரி - வேங்கடாசாரிய சுவாமிகள்

திருவடிசம்பந்தியும்,

ஸ்ரீவைஷ்ணவ பாதரேணுவாகிய

டாக்டர், ம. கோ. இராமசாமி முதலியார்

குமாரருமாகிய

மயிலை - கோ. பட்டாபிராம முதலியாரால்

இயற்றப்பட்டு,

சென்னை:

ரிச்சினீர் அச்சுயந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

1915.

Copy Right Registered.] [விலை அணா 8.

PRINTED BY
READ & CO., AT THE "KITCHENER" PRESS,
152, MINT STREET, MADRAS.

---

Printed Pages 1 to 60 at The M. L. V. Press, others at
The "Kitchener" Press, Madras.



திருமணம்

செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ.

1864 - 1921

442

ஸ்ரீ:

# முகவுரை.

---

ஸ்ரீய:பதியாய் ஸ்ரீவைகுண்ட நிகேதனனாய் அவாப்த ஸமஸ்த காமனாய் அகில கல்யாணகுணகண நிதியான, ஸ்ரீமந்நாராயணன் தனது பரம க்ருபையாலே சேதனோஜ்ஜீவனார்த்தம் இவ்விருள் தருமாஞாலத்தில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவுள. அவற்றுள் மயர்வறமதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களின் மங்களாசாஸனம் வாய்ந்த திருப்பதிகள் அரங்கமுதல் வைகுந்த நாடளவும் நூற்றெட்டாம். இவற்றைக்கு முன்னரே ஆன்றோரால் பிரபாவங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றோடு புராண பிரசித்தமாயிருப்பனவும் ஆழ்வார், ஆசாரியர்கள், அவதரித்தனவுமான மற்ற ஸ்தலங்கள், ஐம்பது ஸ்தலங்களின், ஸ்தானீகர்களை விசாரித்தும் ஸ்தல புராணங்களை ஆராய்ந்தும் அறிந்த, பிரபாவங்களும், இந்நூலில் எழுதிச் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இத்தலங்களுக்கு யாத்திரை செய்வோர், ஏறவேண்டிய ரெயில்வே, இறங்கவேண்டிய ரெயில்வே ஸ்டேஷன், ஸ்டேஷனுக்கும் பிரதி ஸ்தலத்துக்கு முள்ள தூரம், திசை, மார்க்கம், தங்கவேண்டிய இடங்கள், சத்திரம், போஜன சாலை, முதலிய சகல சௌகரியங்களும், இதில் விசாலமாய் விவரிக்கப்பட்டுள்ளன.

இச்சிறு புத்தகம் இயற்றுதற்குக் காரணம் வருமாறு: சில வருஷங்களுக்கு முன்னர், திவ்ய தேசங்களில் அருளுருக் கொண்டுறையும் எம்பெருமான்களை சேவிக்கவேண்டுமென்று அடியேனுக்கு ஒரு ஸங்கல்பமுண்டாயது. ஐந்து (1908-1913) வருஷங்களுக்குள், அடியேனுக்குக் கிடைத்த உத்யோக விடுமுறைகளில் அவ்வியாத்திரை சித்தித்தது. வடநாட்டில் சில திருப்பதிகள் தவிர மற்றெல்லாத் திருப்பதிகளையும் ஒருமுறை சேவித்துக் கலி தீர்ந்தேன். உசாத்துணை முதலிய சௌகரியங்கள் வாய்க்கப் பெறாமையால், மென்மேலும் யாத்திரை செய்வதற்கு ஏலாதாயிற்று. அடியேன் புரிந்த யாத்திரையில் கண்ட, கேட்ட, விஷயங்களை அடியேன் [illegible] நியமனப்படி அப்போதைக்கப்போது எழுதிவைத்தேன். அவ்விஷயக் குறிப்புகளைக் கண்ணுற்ற சில பாகவதர்கள்

அவற்றை யோர் புத்தக ரூபமாய், அச்சியற்றல் லோகோபகாரமாயிருக்கு மென்றனர். அது கருதி அடியேன் பிரதி தலத்தின் புராணவரலாறு, உற்சவகாலங்கள், அதன் மார்க்கம், வசதிகள், விநோத இயற்கை செயற்கை காக்ஷிகளாகிய குறிப்புகளோடு சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு ஆங்காங்கு ஸம்ப்ரதாய விஷயங்களும், பூகோள விஷயங்களும், அவ்வத்தேச சரித்திரங்களும், யாத்ரிகர் அறியவேண்டிய மற்றும் சில விஷயங்களும் அதில் சேர்த்து எழுதப்பட்டன. இவ்விஷயத்திரட்டைக் கடைக் கணித்த அடியேனது தமையனார், ஸ்ரீமான், ம. கொ. விஜயராகவ முதலியாரவர்கள் அதற்கு "திவ்யதேச யாத்திராநுகூலன்" என்று பெயரிட்டு, அதை அச்சியிற்றவெண்ணியிருந்தனர். அவர் அடியேன் துர்ப்பாக்கியத்தால் (12-1-14) பரமபத மடைந்தனர். அவர் ஞாபகார்த்தமாக அந்நூலினின்றும் பிரபாவம், மார்க்கம், வசதிகள் என்ற மூன்று விஷயங்களை மட்டும் மெடுத்து "விஷ்ணுஸ்தல மஞ்சரி" என்று பெயர் புனைந்து இப்புத்தகம் வெளியிடலானேன். இவ்வரிய பெரிய காரியஞ் செய்ய வல்லே னல்லேனாயினும் பெரியோர் நியமனம் பற்றி அடியேன் இப்பணியைக் கைக்கொண்டேன். "ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின், பெருக நூலிற் பிழைபாடிலனே, முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்." என்றபடி மும்முறை செய்யாது ஒருமுறையே யாத்திரைசெய்து எழுதப்பட்டதொன்றாகையால், இதிற் சில பல வழூஉக்களிருக்கலாம். குற்றங்குறைகளைப் பாராட்டாது குணத்தையே கொள்ளவேண்டு மென்று பெரியோர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். குற்றங்களையும் குறைகளையும் எவரேனும் தயைகூர்ந்து அடியேனுக்குத் தெரிவித்தாராகில் வந்தனத்துடன் அவற்றைப் பெற்றுக்கொள்வேனாகவும். இந்நூலின் மறுபதிப்பும் அச்சிடவிருக்கும் தெலுங்கு மொழிபெயர்ப்பும் சுத்தப்ரதியாக வருவதற்கும் அவை யுதவு மென்றும் அறியற்பாலது.

இங்ஙனம்,

மயிலாப்பூர்
15—10—15.

தொண்டரடிப்பொடி,
மயிலை, கொ, பட்டாபிராமன்.

ஸ்ரீ

# விஷ்ணுஸ்தல மஞ்சரி

## அட்டவணை.


| ஸ்தலம். | பக்கம். | ஸ்தலம். | பக்கம். |
|---|---|---|---|
| அகோபிலம் | 41 | காஞ்சிபுரம் | 28 |
| அட்டபுயகரம் | 29 | காட்டுமன்னார் கோயில் | 51 |
| அத்திகிரி | 28 | காரகம் | 31 |
| அனந்தசயனம் | 23 | கார்வானம் | 32 |
| அயோத்தி | 41 | காவளம்பாடி | 15 |
| அரிமேயவிண்ணகரம் | 14 | காழிச்சீராமவிண்ணகரம் | 11 |
| அரித்துவாரம் | 55 | கிஷ்கிந்தை | 67 |
| அவந்தி | 55 | கும்பகோணம் | 7 |
| அழகர்கோயில் | 16 | குணசேகரம் | 67 |
| அன்பில் | 3 | குருக்ஷேத்திரம் | 60 |
| ஆதனூர் | 5 | குருகைக்காவலப்பன் கோயில் | 64 |
| ஆடுதுறைபெருமாள்கோயி | 11 | குறையலூர் | 62 |
| ஆழ்வார்திருநகரி | 20 | கூடலூர் | 11 |
| இந்தளூர் | 10 | கூரம் | 63 |
| இராஜமன்னார்கோயில | 50 | சாளக்கிராமம் | 43 |
| இராமேச்வரம் | 71 | சிங்கவேழ்குன்றம் | 41 |
| இராமக்ஷேத்திரம் | 59 | சிம்மாசலம் | 53 |
| உலகளந்தபெருமாள் கோயில் | 31 | சிங்கபெருமாள்கோயில் | 65 |
| உறையூர் | 2 | சித்திரகூடபர்வதம் | 58 |
| உத்தமர்கோயில் | 3 | சிதம்பரம் | 10 |
| உப்பிலியப்பன் சந்நிதி | 8 | சிறுபுலியூர் | 6 |
| உஜ்ஜினி | 55 | சிதாப்பூர் | 58 |
| உடுப்பி | 72 | செங்கநல்லூர் | 62 |
| ஊரகம் | 31 | செம்பொன்செய்கோயில் | 14 |
| கண்டமென்னுங்கடிநகர் | 45 | சேதுமாதவம் | 71 |
| கண்டியூர் | 7 | சோழசிங்கபுரம் | 35 |
| கயா | 56 | சோநேபூர் | 60 |
| கரம்பனூர் | 3 | ஜகந்நாதம் | 52 |
| கவித்தலம் | 12 | ஜனார்த்தனம் | 53 |
| கள்வனூர் | 32 | ஜோசிமடம் | 45 |
| காசி | 68 | ஸ்ரீகூர்மம் | 52 |

| ஸ்தலம். | பக்கம். | ஸ்தலம். | பக்கம். |
|---|---|---|---|
| ஸ்ரீபுருஷோத்தமம் | 52 | திருநாகை | 9 |
| ஸ்ரீபெரும்பூதூர் | 50 | திருநாங்கூர் | 13 |
| ஸ்ரீமுஷ்ணம் | 49 | திருநாராயணபுரம் | 49 |
| ஸ்ரீவரமங்கை | 21 | திருநாவாய் | 25 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | 20 | திருநின்றவூர் | 33 |
| ஸ்ரீரங்கம் | 1 | திருநீர்மலை | 34 |
| ஸ்ரீவைகுண்டம் | 22 | திருப்பதி | 36 |
| தஞ்சைமாமணிக்கோயில் | 2 | திருப்பிரிதி | 45 |
| தர்ப்பசயனம் | 18 | திருப்புட்குழி | 33 |
| தலைச்சங்கநாண்மதியம் | 6 | திருப்புலியூர் | 25 |
| தாடாளன்சந்நிதி | 11 | திருப்புல்லாணி | 18 |
| திருவிந்தளூர் | 10 | திருப்புளிங்குடி | 21 |
| திருக்கடன்மல்லை | 34 | திருப்பாற்கடல் | 47 |
| திருக்கடிகை | 35 | திருப்பேர்நகர் | 5 |
| திருக்கடித்தானம் | 27 | திருப்பேரை | 21 |
| திருக்கண்ணங்குடி | 11 | திருமணிக்கூடம் | 15 |
| திருக்கண்ணபுரம் | 8 | திருமழிசை | 61 |
| திருக்கண்ணமங்கை | 11 | திருமாலிருஞ்சோலைமலை | 16 |
| திருக்காட்கரை | 24 | திருமுக்கூடல் | 65 |
| திருக்குடந்தை | 7 | திருமூழிக்களம் | 24 |
| திருக்குருகூர் | 20 | திருமெய்யம் | 18 |
| திருக்குளந்தை | 22 | திருமோகூர் | 19 |
| திருக்குறுங்குடி | 22 | திருவஞ்சிக்களம் | 62 |
| திருக்கூடல் | 19 | திருவண்பரிசாரம் | 24 |
| திருக்கோட்டியூர் | 17 | திருவண்புருஷோத்தமம் | 14 |
| திருக்கோவலூர் | 28 | திருவண்வண்டூர் | 26 |
| திருக்கோளூர் | 23 | திருவயிந்திரபுரம் | 28 |
| திருச்சானூர் | 66 | திருவல்லவாழ் | 29 |
| திருச்சித்திரகூடம் | 10 | திருவல்லிக்கேணி | 35 |
| திருச்செங்குன்றூர் | 25 | திருவனந்தபுரம் | 23 |
| திருச்சேறை | 6 | திருவழுந்தூர் (குற்றாலம்) | 6,10 |
| திருத்தண்காலூர் | 19 | திருவாட்டாறு | 26 |
| திருத்தண்கா | 29 | திருவாய்ப்பாடி | 47 |
| திருத்தெற்றியம்பலம் | 14 | திருவாலிதிருநகரி | 8 |
| திருத்தேவனார்தொகை | 14 | திருவாரன்விளை | 27 |
| திருநறையூர் | 9 | திருவிடவெந்தை | 34 |

| ஸ்தலம். | பக்கம். | ஸ்தலம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவிண்ணகர் | 8 | பார்த்தன்பள்ளி | 1 |
| திருவெஃகா | 31 | பாபவிநாசம் | 5 |
| திருவெள்ளக்குளம் | 15 | பிருந்தாவனம் | 4 |
| திருவெள்ளறை | 4 | பிரயாகை | 57 |
| திருவெள்ளியங்குடி | 12 | பிரமதேசமன்னார்கோயில் | 51 |
| திருவள்ளூர் | 33 | பிந்துமாதவம் | 68 |
| திருவேங்கடம் | 36 | புள்ளம்பூதங்குடி | 4 |
| தின்னனூர் | 33 | புஷ்கரம் | 54 |
| தில்லைத்திருச்சித்திரகூடம் | 10 | பூவிருந்தவல்லி | 63 |
| தென்மதுரை | 19 | பெருங்குளம் | 22 |
| தேரழுந்தூர் | 6 | பொன்னேரி | 66 |
| தேவப்பிரயாகை | 45 | மணிமாடக்கோயில் | 13 |
| துவாரகை | 46 | மண்டங்குடி | 62 |
| தொலைவில்லிமங்கலம் | 20 | மதுரமங்கலம் | 63 |
| தொண்டனூர் | 64 | மதுராந்தகம் | 66 |
| நந்திபுரவிண்ணகரம் | 10 | மதுரை | 19 |
| நாகப்பட்டணம் | 9 | மயிலாப்பூர் | 61 |
| நாசிகை | 58 | மகாபலிபுரம் | 34 |
| நாச்சியார்கோயில் | 9 | மன்னார்கோயில் | 50 |
| நாதத்துவாரம் | 60 | மிதுனசாலக்கிராமம் | 64 |
| நாதன்கோயில் | 10 | மேல்கோட்டை | 49 |
| நாராயணவனம் | 67 | யதோத்காரிசந்நிதி | 31 |
| நிலாத்திங்கள்துண்டம் | 31 | ராஜமன்னார்கோயில் | 50 |
| நிரகம் | 30 | வடமதுரை | 46 |
| நைமிசாரணியம் | 42 | வண்புருஷோத்தமம் | 14 |
| பண்டரிபுரம் | 53 | வதரியாச்சிரமம் | 43 |
| பஞ்சவடி | 58 | வரகுணமங்கை | 22 |
| பச்சைப்பெருமாள்கோயில் | 63 | வானமாமலை | 21 |
| பச்சைவண்ணர்கோயில் | 65 | வித்துவக்கோடு | 27 |
| பரமபதம் | 48 | விளக்கொளிகோயில் | 29 |
| பரமேச்சுரவிண்ணகரம் | 32 | வேளுக்கை | 30 |
| பவளவண்ணம்சந்நிதி | 32 | வேளுக்கைசிங்கப்பெருமாள் கோயில் | 65 |
| பதரிகாச்ரமம் | 43 | வைகுந்தவிண்ணகரம் | 13 |
| பத்திராசலம் | 54 | வைகுந்தப்பெருமாள்கோ | 32 |
| பாடகம் | 30 | ஹரித்துவாரம் | 55 |
| பாண்டவதூதர்கோயில் | 30 | | |

ஸ்ரீ

# ஸ்ரீ பேயாழ்வார் புத்தகசாலை.

17, சோலையப்பமுதலி தெரு, மயிலாப்பூர்.

---

## ஸ்ரீபெரும்பூதூர் மான்மியம். 0-2-0

சிவபிரானால் சபிக்கப்பட்ட பூதகணங்கள் தவஞ்செய்து ஸ்ரீ ஆதிகேசவனருளால் சாபம் நீங்கி பேறுபெற்றது முதலான அழகிய சரித்திரங்களை உடையது.

## திருச்சித்திரகூட மான்மியம். 0-4-0

இது சிதம்பர க்ஷேத்திரத்தின் வைணவ சார்பான புராணம். வைஷ்ணவர்கள் அவசியம் வாசிக்கத்தக்கது.

## விஷ்ணுஸ்தல மஞ்சரி. 0-8-0

108 - திருப்பதிகளுடன் புராணஸ்தலங்களில் 50-க்கு ப்ரபாவங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தலயாத்திரை செய்வோர்க்கு இன்றியமையாத வழித்துணைவன் போன்றதோர் நூல்.

## சுந்தரகாண்டம். 7-0-0

கிரந்த லிபியில் ச்லோகம், தமிழில் பிரதிபதம், தாத்பர்யம், விசேஷார்த்தம், பலவியாக்கியானங்களின் அபிப்ராயம், முன்னோர் கருத்து, தனிச்லோகி இவைகளைத்தழுவி, இருமுறை பதிப்பிக்கப்பட்டது.

## தமிழ் லிபி ஸ்ரீபகவத்விஷயம் 1-0-0

முதற்பத்து - திருவாய்மொழி, மூலமும் இதற்கு வியாக்கியானங்களாயுள்ள, ஆறாயிரப்படி, பன்னீராயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி, ஜீயர் அரும்பதம், த்ரமிடோபநிஷத்ஸங்கதி, த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி, அதன் வ்யாக்கியானம், திருவாய்மொழி நூற்றந்தாதி, அதன் வியாக்கியானம், ப்ரமாணத்திரட்டு, அதன் ஆகரம், இவைகளுடன்.

## ஸ்ரீமத் பகவத்கீதை. 13-0-0

இக்கீதையில் பதவுரையும், கீதாபாஷ்யம், தாத்பய சந்திரிகை, கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, இவைகளுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பும், கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு வ்யாக்கியானமும் அடங்கியுள்ளன. 3-வால்யம்.

## ஆசார்யஹ்ருதய வியாக்கியானம் 1-0-0

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



# விஷ்ணுஸ்தல மஞ்சரி.

காப்பு.

நம்மாழ்வார்.

வேதமாஞ்செழுங்கனியினிரதமெனத்தமிழ்மறையைவிளம்பினானை
ஏதமார்பெரும்பிறவித்துயர்நீங்கவிழித்தருளுமிருகண்ணானை
நாதனுரணனெனச்சொல்ஞானமுத்திரையானைநளினபீடப்
பாததாமரையானையெம்மானைப்பராங்குசனைப்பராவிவாழ்வாம்.

சக்ரவர்த்தித் திருமகன்.

விண்ணவர்முனிவர்மண்ணோர்துயர்கெடவில்லொன்றேந்தி
துண்ணெனுஞ்செய்கைத்தீயோர்த்தொலைத்துமைதிலியிரண்டு
கண்ணெனும்வண்டலர்வுங்கமலநேரினைகண்ணனைப்
பண்ணெனுமறைகளேத்தும்பரமனைப்பணிந்துய்வாமால்.

ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள்.

பார்த்தனூர்மையறிரப்பரமமாம்பொருள்பகர்ந்து
கூர்த்தவன்புடையாரேத்தக்கோலமேகொண்டுநின்று
சீர்த்தசெங்கமலையோடுதிருவல்லிக்கேணிமேவும்
பார்த்தசாரதியாந்தேவைப்பணிந்தியாமுய்திட்டோமே.

ஸ்ரீரங்கநாதன்.

ஆஸ்தாந்தேகுணராசிவத்குணபரீவாஹாத்மநாம்ஜந்மநாம்ஸங்க்யா
பௌமநிகேதநேஷ்வபிகுடீகுஞ்சேஷுரங்கேச்வர
அர்ச்ய:ஸர்வஸஹிஷ்ணு:அர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி:
ப்ரீணீஷேஹ்ருதயாலுபி:தவததச்சீலாஜ்ஜடீபூயதே.

# பரத்வாதி பஞ்சகஸ்துதி.

## పరత్వాది పంచకస్తుతిః

---

ఉద్యద్భానుసహస్రభాస్వరపరవ్యోమాస్పదన్నిర్మలం।
జ్ఞానానందఘనస్వరూపమమలం జ్ఞానాదిభిష్షడ్గుణైః॥
జుష్టం శ్యామలవిగ్రహం ధృతరథాంగాబ్జాదిభూషోజ్జ్వలం।
శ్రీభూనీళమనంతభోగినిలయం శ్రీవాసుదేవం భజే॥ (౧)

ఆమోదే భువనే ప్రమోద ఉత సమ్మోదేపి సంకర్షణం।
ప్రద్యుమ్నం చ తథానిరుద్ధమపి తాన్ సంహారసృష్టిస్థితీః॥
కుర్వాణాన్మతిముఖ్యషడ్గుణవరైర్యుక్తాంస్త్రియుగ్మాత్మకాన్।
వ్యూహాధిష్ఠితవాసుదేవమపి తం వైకుణ్ఠనాథం భజే॥ (౨)

వేదాన్వేషణమందరాద్రిభరణక్ష్మోద్ధారణస్వాశ్రిత।
ప్రహ్లాదావనభూమిభిక్షణజగద్విక్రాంతయో యత్క్రియాః॥
దుష్టక్షత్రనిబర్హణం దశముఖాద్యున్మూలనం కర్షణం।
కాళింద్యా అతిపాపకంసనిరసో యత్క్రీడితం తన్నుమః॥ (౩)

శ్రీరంగస్థలవేంకటాద్రికరిగిర్యాదౌ శతేష్టోత్తరే।
స్థానే గ్రామనికేతనేషు చ సదా సాన్నిధ్యమాసేదుషే॥
అర్చారూపిణమర్చకాద్యభిమతాన్ స్వీకుర్వతే విగ్రహాన్।
పూజాం చాఖిలవాంఛితాన్ వితరతే శ్రీశాయ తస్మై నమః॥ (౪)

యో దేవాదిచతుర్విధేషు జనిషు బ్రహ్మాండకోశాంతరా।
సంభూతేషు చరాచరేషు నివసన్నాస్తే సదాంతర్బహిః॥
విష్ణుం తన్నిఖిలేష్వణుష్వణుతరం భూయస్సు భూయస్తరం।
స్వాంగుష్ఠప్రమితం చ యోగిహృదయేష్వాసీనమీశం భజే॥ (౫)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# விஷ்ணுஸ்தல மஞ்சரி.

## ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்தருளின

## நூற்றெட்டுத் திருப்பதிகள்.

ஈரிருபதாஞ்சோழ மீரொன்பதாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம்-சீர்நடுநா
டாறோடீ ரெட்டுத்தொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்.

## சோழநாட்டுத் திருப்பதிகள்-௪௰.

### 1-திருவரங்கம். (ஸ்ரீரங்கம்)

ப்ரபாவம் – ஸ்ரீரங்கநாதன் - நம்பெருமாள், ஸ்ரீரங்கநாச்சியார் ப்ரணவாக்ருதி விமானம், வேதச்ருங்கம், காவேரிநதி, சந்திரபுஷ்கரணி புன்னைவிருக்ஷம், புஜங்கசயநம், தெற்கேதிருமுகமண்டலம். தருமவர்மாவுக்கும் ரவிதர்மனுக்கும் ப்ரத்யக்ஷம். பொய்கையார், பூதத்தார் பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார் பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார், ஆண்டாள் மங்களாசாஸநம்.

பெரியநம்பி பட்டர் வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாச்சாரியார் அவதார ஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்-திருச்சிறாப்பள்ளி கோட்டை ஸ்டேஷனுக்கு வடக்கே கற்சாலைமார்க்கமாய் 3-மைலிலும் ஜங்ஷன் ஸ்டேஷனுக்கு 6-மைலிலுமிருக்கிறது.

ஸ்ரீரங்கத்திற்கு தென்கிழக்கில் ஒருமைலில் ஜம்புகேசுவரமும் (சி. த.) வடகிழக்கில்கொள்ளிடம் வடகரையில் 13-மைலில் (4) அன்பிலும், தென்கிழக்கில் காவேரியின் வடகரையில் 14-மைலில் (8) திருப்பேர்நகரும், வடக்கில் 3-மைலில்(5) கரம்பனூரும், வடமேற்கே 10-மைலில்(6) திருவெள்ளறையும், மேற்கில் காவேரிக்குவடகரையில் 9-மைலில் குணசேகரமும், தெற்கில் 3-மைலில் (2)உறையூரும், இருக்கின்றன. கோட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே 1-மைலில்(2) உறையூரும்கிழக்கே ½-மைலில் தாயுமானசுவாமிமலையும்(சி. த.)இருக்கின்றன.

இது பெரியஅழகானபட்டணம். வண்டிகளுண்டு. யாத்திரைவாசிகளுக்குச்சத்திரங்கள் கிடையா, வீடுகளில் குடிக்கூலிக்கு இடம்விடுகிறார்கள். வைஷ்ணவர்களுக்கு மட்டும் இரண்டு ராமாநுஜகூடங்களி

ருக்கின்றன. 3-ஹோட்டல்களும், 4-காபிகிளப்புகளு மிருக்கின்றன. கோட்டை ஸ்டேஷனுக்கு ¾-மைலில் காவேரியாற்றுக்கு சமீபத்தில் யாத்திரைவாசிகளுக்கு 4-சத்திரங்களிருக்கின்றன. 2-பிராமணர்கள் ஹோட்டல்களும் 18-சைவர்கள் ஹோட்டல்களு மிருக்கின்றன. சந்நிதியில் பற்றுக்கடை விசேஷம்.

## 2-கோழியூர், (உறையூர்.)

ப்ரபாவம்-நிசுளாபுரி -- அழகியமணவாளப் பெருமாள், வாஸலக்ஷ்மி, உறையூர் வல்லிநாச்சியார், கல்யாணவிமாநம், கல்யாணதீர்த்தம், காவேரிநதி, வடக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும ரவிதர்மராஜாவுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.
திருப்பாணாழ்வார் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்-திருச்சிறுப்பள்ளி கோட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே கற்சாலை மார்க்கமாய் 1-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திரமில்லை வீடுகளில் இடம் விடுவார்கள். ஹோட்டல் கிடையாது. காபி கிளப்புகள மட்டும் இருக்கின்றன.

குறிப்பு-இங்குத்திருமூக்கீச்சுரம்என்னும் சிவஸ்தலமிருக்கிறது. உறையூர் பெரியதிருமொழியிலும் பெருமாள் திருமொழியிலும் மற்ற சிலப்பதிகாரம் முதலானநூல்களிலும் கோழியென சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு ஒருகாலத்தில் இவ்வூரில் ஒருகோழி ஒருயானையைப் போரில் வென்றமையால் இதற்கு இப்பெயர் வந்ததாம்.

## 3-தஞ்சைமாமணிக் கோயில் (தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரை.)

ப்ரபாவம்-நீலமேகப்பெருமாள், செங்கமலவல்லி, சௌந்தர்ய விமாநம், கன்னிகாபுஷ்கரணி, அமுததீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், பராசரமுனிக்கு ப்ரத்யக்ஷம். பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

தஞ்சையாளிநகர்-நரசிங்கப்பெருமாள், தஞ்சைநாயகி, வேதசுந்தரவிமாநம், சூரியபுஷ்கரணி, ராமதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், மார்க்கண்டேய மகாமுனிக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்-தஞ்சாவூர் ஸ்டேஷனுக்கு வடக்கேதிருவையாறு கற்சாலைமார்க்கத்தில் 2½-மைலில் வெண்ணாற்றின் கரைமேலிருக்கிறது. தஞ்சாவூருக்கும் இத்தலத்திற்கும் இரண்டுமைல் தூரமுண்டு. வண்டிகளுண்டு சத்திரங்களுண்டு. ஹோட்டலில்லை. சந்நிதியில்பிரசாதம் கிடைக்கும். தஞ்சாவூரில் 4 சத்திரங்களும் 30 ஹோட்டல்களும் இருக்கின்றன.

தஞ்சாவூரிலிருந்து வடகிழக்காக கும்பகோணத்திற்கு 29-மைல் தூரம் ரோட்டு மார்க்கமாய்ப் வண்டியிலாவது கால் நடையிலாவது சென்றால் பின்வரும் 9 திருப்பதிகளையும் சுலபமாய்ச் சேவிக்கலாம்.

தஞ்சாவூர் ஸ்டேஷனுக்கு வடக்கே 2½-மைலில் (3) தஞ்சைமா மணிக்கோயிலும் இதற்கு வடக்கே 3-மைலில் (15) கண்டியூரும இதற்கு வடக்கே 1-மைலில் பிரபல சி. த. மாகிய திருவையாறும் இதற்குக் கிழக்கே 7½-மைலில் (25) கூடலூரும் இதற்குக்கிழக்கே 4½-மைலில் 28 கவித்தலமும் (இதற்குத்தெற்கில் 1-மைலில்பாபநாசமும்) இதற்குவடகிழக்கே 3½-மைலில் மண்டங்குடியும் (ஆ. அ. து.) இதற்குக் கிழக்கே ½-மைலில் (7) புள்ளம பூதங்குடியும் இதற்கு வடகிழக்கே 1-மைலில் (9) ஆதனூரும் இதற்குதெற்கே 1-மைலில் சுவாமிமலையும் (சு-த) இதற்குக்கிழக்கே 4-மைலில் (14) திருக்குடந்தையும் இருக்கின்றன.

## 4—அன்பில்.

ப்ரபாவம்—திருவடிவழகியநம்பி, அழகியவல்லி நாச்சியார், தாரக விமானம், மண்டூகபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம், ப்ரம்மாவுக்கும், வால்மீகருக்கும ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—தஞ்சாவூருக்கு மேற்கே 11-மைல் தூரமுள்ள பூதலூர் ஸ்டேஷனிலிறங்கி வடக்கே 5-மைல் தூரம் சென்று திருக்காட்டுப்பள்ளி (சி-த) யைச்சேர்ந்து அங்கிருந்து மேற்கேகாவேரி வடகரை மட்சாலையே 5-மைல்தூரஞ்சென்று கோவிலடி (8) (திருப்பேர்நகர்) யை அடைந்து வடக்கேதிரும்பி இரண்டுமைல் தூரம் சென்றால் இத்தலத்தையடையலாம். இத்தலம கொள்ளிடம் வடகரையிலுள்ளதால் ஆற்றையும் மழைகாலங்களில் இரண்டு சிறுகால்வாய்களையும் பரிசலாற்கடக்கவேண்டும். அனேகமாய்ஜலமிராது அப்படியிருந்தாலும் இரண்டடி ஜலமிருக்கும். இந்த இரண்டு மைலுக்கும பாதையில்லாமையால் பண்டிகள் கிடையாது. சத்திரமில்லை ஹோட்டலில்லை சந்நிதியில் சொல்லிவைத்தால் ப்ரசாதம் கிடைக்கும்.

இத்தலத்திற்கு மேற்கே 10-மைலில் (5) கரம்பனூரும் தென்மேற்கே 13-மைலில (1) ஸ்ரீரங்கமும், தெற்கே 2-மைலில் (8) திருப்பேர்நகரும் இருக்கின்றன.

## 5—கரம்பனூர் (உத்தமர்கோயில்.)

ப்ரபாவம்—புருஷோத்தமன், பூர்வாதேவி, உத்யோக விமானம், கதம்பதீர்த்தம், வாழைமரம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்க சயநம், கதம்பமகர்ஷிக்கும், திருமங்கையாழ்வாருக்கும், உபரிசரவஸுவுக்கும், ஸநகஸநந்தந ஸநத்குமாரர்களுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

இந்தச்சந்நிதியில் சிவாலயமும் பிரமாலயமும் புராதனங்களான வாழைமரங்களும் இருக்கின்றன.

மார்க்கமும் வசதிகளும்-ஸ்ரீரங்கத்திற்கு வடக்கே திருவெள்ளறைக்குப்போகும் கற்சாலை மார்க்கத்தில் 3-மைலிலிருக்கிறது. கால் நடையாய் கொள்ளிடத்தைக் கடந்துசென்றால் 1½-மைலிருக்கும். வண்டிகளுண்டு. சத்திரமில்லை. ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

இதற்குக் கிழக்கே 10-மைலில (4) அன்பிலும் வடமேற்கே 7-மைலில் (6) திருவெள்ளறையும் இருக்கின்றன.

## 6-திரு வெள்ளறை.

ப்ரபாவம்-புண்டரீகாக்ஷன், பங்கயச்செல்வி நாச்சியார், செண்பகவல்லிநாச்சியார், சுவேதகிரி, விமலாக்ருதிவிமானம், குசதீர்த்தம் மணிகர்ணிகாதீர்த்தம், சக்ரதீர்த்தம், திவ்யபுஷ்கரணி, புஷ்கல தீர்த்தம், பத்மதீர்த்தம், கந்தபுஷ்கரணி, க்ஷீரபுஷ்கரணி, வராஹதீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பெரியதிருவடிக்கும் சிபிசக்ரவர்த்திக்கும் பூதேவிக்கும் மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். உய்யக்கொண்டார் அவதார ஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்-இது ஸ்ரீரங்கத்திற்கு வடக்கேமண்ணச்சநல்லூர் கற்சாலை மார்க்கமாய் 10-மைலில்உள்ளது. உத்தமர்கோயிலிருந்து 7-மைலிலிருக்கிறது. வண்டிகள் அகப்படும். சத்திரமில்லை வசதிகள் உண்டு. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்

## 7-புள்ளம் பூதங்குடி.

ப்ரபாவம்-வல்விலிராமன், பொற்றாமரையாள், சோபனவிமானம் க்ருத்ரதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம், சக்ரவர்த்தித்திருமகனுக்கும், க்ருத்ர ராஜனுக்கும் ப்ரத்யக்ஷமாய் மோக்ஷங் கொடுத்தவிடம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-சுந்தரபெருமாள்கோவில் ஸ்டேஷனுக்கு வடக்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலிலுள்ள கண்ணஞ்சேரியை அடைந்து ¾-மைல்தூரம் கிழக்கே சென்றால் இத்தலத்தையடையலாம். இரண்டு ஆறுகளைக் கடக்கவேண்டும்.

ஒருசிறியஆலயம் ப்ரபலமில்லை. இத்தலத்திற்குத்தென்கிழக்கே 2-மைலில்சுவாமிமலையும், (சு-த) கிழக்கே 6-மைலில் (14) திருக்குடந்தையும் மேற்கே 1-மைலில் மண்டங்குடியும் (ஆ.அ.ஆ.) வடகிழக்கே ½-மைலில் (9) ஆதனூரும் இருக்கின்றன.

வண்டிகள் அகப்படா. சத்திரமில்லை சந்நிதியிலும் பிரசாதம் கிடைக்காது.

## 8—திருப்பேர்நகர். (கோவிலடி)

ப்ரபாவம்—அப்பக்குடத்தான், கமலவல்லித்தாயார், இந்திரகிரி இந்திரவிமானம், இந்திரதீர்த்தம், காவேரிநதி, மேற்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம், வலது அஸ்தத்தின் கீழே குடம், உபமந்யுவுக்கும் பராசருக்கும் ப்ரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—தஞ்சாவூருக்குமேற்கே 11-மைல் தூரத்திலுள்ள பூதலூர் ஸ்டேஷனிலிறங்கி வடக்கே கற்சாலை மார்க்கமாய் 5-மைலிலிருக்கும் திருக்காட்டுபள்ளி (சி. த.) யை அடைந்து அங்கிருந்து மேற்கே காவேரியின் வடகரையே மட்சாலை மார்க்கமாய் 5-மைல் தூரம் சென்றால் இத்தலம் வரலாம்.

வண்டிகளுண்டு சத்திரமுண்டு ஹோட்டலில்லை சந்நிதியில் தேசாந்திரிகளுக்கு பிரசாதம் கிடைக்கும். இத்தலத்திற்கு மேற்கே 5-மைலில் காவேரியின் மத்தியஅணைக்கட்டு (GrandAnicut) பார்க்கத்தகுந்தது.

இங்கிருந்துமேற்கே 14-மைலிலும் கல்லணையிலிருந்து 9-மைலிலும் (1) ஸ்ரீரங்கமிருக்கிறது. வடக்கே 2-மைலில் (4) அன்பில் இருக்கிறது.

பூதலூர் ஸ்டேஷனுக்கு அடுத்த சோளகம்பட்டி ஸ்டேஷனிலிறங்கி வடக்கே 3-மைலிலுள்ள கச்சமங்கலம் சென்று அங்கிருந்து வரப்புமார்க்கமாய் 1-மைல்சென்று வெண்ணாற்றையும் காவேரியையும் கடந்தால் இத்தலத்தையடையலாம். வண்டிகள் கிடையா. ஆறுகளுக்குப்பரிசல்கள் உண்டு. நாட்டுஜனங்கள் தவிர மற்றையோர்கள் இம்மார்க்கம் போவதில்லை.

## 9—ஆதனூர்.

ப்ரபாவம்—ஆண்டளக்குமையன், ஸ்ரீரங்கநாயகியார், ப்ரணவவிமாநம், சூரியபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம் காமதேநுவுக்கும், திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும்வசதிகளும்—கும்பகோணத்திற்கு மேற்கே 4-மைலிலிருக்கும் சுவாமிமலையை (சு த.) அடைந்து அங்குநின்றும் வடக்கே திரும்பி வரப்புமார்க்கமாய் 1-மைல்தூரம் சென்றால் இத்தலத்தையடையலாம். கும்பகோணத்திற்கு மேற்கே 2-மைலிலுள்ள தாராசுரம் ஸ்டேஷனிலிறங்கி மேற்கேகற்சாலை மார்க்கத்திலுள்ள திருவலஞ்சுழி (சி.த.) யை அடைந்து வடக்கே திரும்பி 1-மைலுள்ள (ஆறுகளுக்குபரிசல்) சுவாமிமலையினின்றும் வடக்கே வரப்புமார்க்க

மாய் 1-மைல்தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம். வெகு சிறிய சந்நிதி, கிராமமும் சிறியது, ஒன்றுமகப்படாது.

## 10—திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

ப்ரபாவம்—ஆமருவியப்பன், செங்கமலவல்லித்தாயார், கருட விமாநம், தர்சநபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், உபரிசரவஸு ராஜாவுக்கும, காவேரிக்கும், தர்மதேவதைக்கும ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—மாயவரத்திற்குமேற்கே 5½-மைல்தூரத்திலிருக்கும் குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 3½-மைலிலும் மாயவரத்திலிருந்து தென்மேற்கே மட்சாலைமார்க்கமாய் 7-மைலிலுமிருக்கிறது.

வண்டிகளுண்டு சத்திரங்களும் ஹோட்டல்களும் கிடையா. சந்நிதியில் சர்வத்திரர்களுக்கும பிரசாதம் கிடைக்கும. குற்றாலத்தில் 2-சத்திரங்களுக்கும 3-ஹோட்டல்களும் இருக்கின்றன.

## 11—சிறுபுலியூர்

ப்ரபாவம்—அருமாகடல், திருமாமகள் நாச்சியார், நந்தவர்த்தந விமாநம், அநந்த ஸரஸ்ஸு, மாநஸபுஷ்கரணி, தெற்கே திருமுக மண்டலம், புஜங்கசயநம, வ்யாசமாமுனிக்கும, வியாக்கிரமருக்கும ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்

மார்க்கமும் வசதிகளும்—மாயவரம் திருவாரூர் பாதையிலுள்ள மங்கநல்லூர் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்காகவும் பேரளம ஸ்டேஷனுக்கு வடகிழக்காகவும் மட்சாலைமார்க்கமாய் 3-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு சத்திரமில்லை சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 12—திருச்சேறை.

ப்ரபாவம்—ஸாரக்ஷேத்திரம், ஸாரநாதன், ஸாரநாயகி, ஸார விமாநம், ஸாரபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம, நின்ற திருக்கோலம், காவேரிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்காய் குடவாசலுக்குச்செல்லும் கற்சாலை மார்க்கத்தில் 6-மைலில் இருக்கும் நாச்சியார் கோவிலை அடைந்து பின்னும் தெற்கே 3 மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம. வண்டிகளுண்டு. சத்திரமிருக்கிறது, ஹோட்டலில்லை சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்,

## 13—தலைச்சங்க நாண்மதியம். (தலைச்சங்காடு)

ப்ரபாவம்—நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள் தலைச்சங்க நாச்சியார், செங்கமலவல்லி, சந்திரவிமாநம், சந்திரபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், தேவர்களுக்கும்

களுக்கும் சந்திரனுக்கும்ப்ரத்யக்ஷம். பூதத்தாழ்வார், திருமங்கையாழ்
வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—சீகாழி ஸ்டேஷனிலிருந்து தென் கிழ
க்கே தரங்கம்பாடிக்குபோகும் கற்சாலைமார்க்கத்தில் 10-மைலி லிருக்
கிறது. மாயவரம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே தரங்கம்பாடிக்கு
போகும்கற்சாலைமார்க்கத்தில் 7-மைலிலிருக்கும் செம்பொனார்கோவி
லை (சி த.) அடைந்து அங்கிருந்து வடக்காகத்திரும்பி 5-மைல் தூரம்
மட்சாலைமார்க்கமாய்ச்சென்றாலும் இத்தலத்தையடையலாம். காவேரி
யாற்றின் தென்கரையிலிருக்கிறது. நாங்கூரிலிருந்து தெற்கே 4-மை
லில் இருக்கிறது. நாங்கூரிலிருந்து மணிகர்ணிகை யாற்றைகடந்து
வால்மார்க்கமாய்த்தெற்கேவந்தால் இத்தலத்தையடையலாம். சீகா
ழியிலிருந்தும் மாயவரத்திலிருந்தும் வண்டிகள் அகப்படும். சத்தம்
அதிகம். சத்திரமிருக்கிறது ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம்
கிடைக்கும். இச்சந்நிதிக்கு கிழக்கில் சிவக்ஷேத்திரமிருக்கிறது.

## 14—திருக்குடந்தை. (கும்பகோணம்)

ப்ரபாவம்—சார்ங்கபாணிப்பெருமாள், ஆராவமுது, கோமளவல்
லி, வைதிகவிமானம், ஹேமபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம்
உத்யோகசயநம், ஹேமமகர்ஷிக்கு ப்ரத்யக்ஷம். பூதத்தாழ்வார், பே
யாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திரு
மங்கையாழ்வார், மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—கும்பகோணம் ஸ்டேஷனுக்கு சன்னிதி
மேற்கே 1-மைலில் இருக்கிறது இது ஒருபெரிய பட்டணம். வண்டி
களுண்டு 13-சத்திரங்களும் 30-ஹோட்டல்களும் 40-கிளப்புகளும்
இருக்கின்றன. இத்தலத்திற்குமேற்கே 4-மைலில் சுவாமிமலையும்(9)
ஆதனூரும் (7) புள்ளம்பூதங்குடியும் தெற்கே 2-மைலில் (21) நந்தி
புரவிண்ணகரமும், கிழக்கே 4-மைலில் (16) திருவிண்ணகரும் தென்
க்கே 4-மைலில் (20) திருநறையூரும் இருக்கின்றன.

## 15—திருக்கண்டியூர்.

ப்ரபாவம்—அரன்சாபந்தீர்த்த பெருமாள், கமலவல்லி நாச்சி
யார், கமலாக்ருதி விமானம், கபால தீர்த்தம், கிழக்கே திருமுகமண்ட
லம், நின்ற திருக்கோலம், ருத்திரனுக்குக்கபால நிவர்த்திசெய்தவர்
அகஸ்த்யருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து வட
க்கே திருவையாற்றுக்குப்போகும் கற்சாலை மார்க்கத்தில் $2\frac{1}{4}$-மைலிலி
ருக்கும் தஞ்சையாமணிக் கோயிலையடைந்து வடக்கே $3\frac{1}{2}$-மைல் தூரம்
சென்றால் இத்தலத்தை யடையலாம். கும்பகோணத்திற்கு தென்

கிழக்கே 19-மைலிலுள்ள திட்டை ஸ்டேஷனிலிறங்கி $3\frac{1}{2}$-மைலில் தஞ்சாவூர் ரோட்டு கலக்குமிடமாகிய பள்ளி அக்கிரகாரத்தை அடைந்து வடக்கே திரும்பி திருவையாறு கற்சாலைமார்க்கமாய் $3\frac{1}{2}$-மைல் சென்றாலும் இத்தலத்தை யடையலாம். சத்திரமுண்டு ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 16–திரு விண்ணகர். (உப்பிலியப்பன் சந்நிதி)

ப்ரபாவம்–உப்பிலியப்பன், பூமிதேவிநாய்ச்சியார், விஷ்ணுவிமாநம், ஆர்த்திபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், மார்க்கண்டேயருக்கும், பெரியதிருவடிக்கும் காவேரிக்கும், தர்மதேவதைக்கும் பிரத்யக்ஷம். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாஸாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–கும்பகோணம் ஸ்டேஷனுக்கு கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலிலிருக்கிறது. சத்திரமுண்டு ஹோட்டலில்லை சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும். தஞ்சாவூர் ஜில்லாவுக்கு திருவேங்கடம் என்னும் திருப்பதி போல் விளங்குகிறது.

## 17–திருக்கண்ணபுரம்.

ப்ரபாவம்–சௌரிராஜப்பெருமாள், கண்ணபுரநாயகி, உற்பலாவர்த்தகவிமாநம், நித்யபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், கண்வமாமுனிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் குலசேகராழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாஸாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே $3\frac{3}{4}$-மைலிலிருக்கும் திருப்புகலூரையடைந்து தெற்கே திரும்பி ஆற்றைக்கடந்து (கட்டுப்பாலம் உண்டு) ஒருமைல்தூரம் சென்றால் இத்தலத்தையடையலாம். சத்திரமுண்டு ஹோட்டலில்லை சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 18–திருவாலி திருநகரி.

ப்ரபாவம்–வயலாலிமணவாளன், அம்ருதகடவல்லி நாச்சியார் அஷ்டாக்ஷர விமாநம், இலாக்ஷணி புஷ்கரணி, அலாதநிபுஷ்கரணி தெற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அலாதநிகஞ்மப்ரஜாபதிக்கும், திருமங்கை யாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–இது சீகாழி ஸ்டேஷனிலிருந்து மட்சாலைமார்க்கமாய் தென்கிழக்கே 6-மைலிலிருக்கிறது. பண்டிகளுண்டு. சத்திரமில்லை. ஹோட்டலில்லை. இராமநுஜ கூடமிருக்கிறது. சந்நிதியில் பிரசாதம்கிடைக்கும். திருவாலிதிருநகரி என்பது திருவாலிஎன்றும் திருநகரி என்றும் இரண்டுதிருப்பதிகள் இருக்கின்றன. திருவாலிக்கும் திருநகரிக்கும் 2-மைல்தூரமிருக்கிறது. திருநகரியில் மண

வானன் சந்நிதியும் திருமங்கையாழ்வார் சந்நிதியும் இருக்கின்றன. திருவாலியில் நரசிம்மசுவாமி சந்நிதியிருக்கிறது. திருநகரிக்கு 2-மை லில் தென்மேற்கில் திருவாலியும்இங்கிருந்து தெற்கே 2-மைலில் (30) நாங்கூரும்இருக்கின்றன. இதற்குதெற்கே 2-மைலில் (13)தலைச்சங்க நாண்மதியம் இருக்கிறது.

## 19-திரு நாகை. (நாகப்பட்டணம்)

ப்ரபாவம்-சௌந்தர்ய ராஜப்பெருமாள், சௌந்தர்ய வல்லித்தாயார், சௌந்தர்ய விமாநம், ஸாரபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், நாகராஜனுக்கும் திருமங்கை யாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-நாகப்பட்டணம் ஸ்டேஷனுக்கு வட மேற்கே 1-மைலிலிருக்கிறது. 2 சத்திரங்களும் 4 ஹோட்டல்களும் இருக்கின்றன. இங்கு இரண்டு பெரிய சிவஸ்தலங்களிருக்கின்றன. இங்கிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் 5-மைலிலிருக்கும் ஆழியூர் வந்து தெற்கே திரும்பி 1-மைல்தூரம் சென்றால்(26)திருக்கண்ணங் குடியை யடையலாம்.

## 20-திரு நறையூர். (நாச்சியார் கோயில்)

ப்ரபாவம்-நம்பி, நம்பிக்கைநாச்சியார், ஸ்ரீநிவாசவிமாநம், மணி முக்தாநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், மேதவ முனியின் கன்னிகையைப் பலிமி பிடித்துக்கொண்டுபோக அவனைச் சபித்து மேதவமுனிக்கு அருள்செய்தவர். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். திருமங்கையாழ்வார் சமாஸ்ரயணம் செய்துகொண்ட தலம்.

மார்க்கமும் வசதிகளும்-கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்துதென் கிழக்காய்க் குடவாசலுக்குச்செல்லும் கற்சாலைமார்க்கத்தில் 6-மை லிலிருக்கிறது. இத்தலத்திற்கு தெற்கே 3-மைலில் (12) திருச்சேறை இருக்கிறது. சத்திரமுண்டு. ஹோட்டலுமிருக்கிறது. இங்குஒரு சிவஸ்தலமுமிருக்கிறது.

குறிப்பு:-இச்சந்நிதியில் வாகனரூபமாகசிலாகருடன் ஒன்று இருக்கிறது. பிரார்த்தனை முதலானவைகள் செலுத்துகிறார்கள் வரப்பிர சாதியாம். இதைஆஸ்தானத்திலிருந்து நான்குஅர்ச்சகர்கள் வெளிக் கொண்டுவந்தபிறகு 16-பிராமணர்களால் எடுத்துமண்டபத்தில் வைத்து 32-பிராமணர்களால் மஹாமண்டபத்திற்கு கொண்டுவந்து பெருமாள் ஆரோகணித்தபிறகு 200 ஸ்ரீபாதந்தாங்கிகளால் திருவீதிஉற்சவம் செய்யப்படுகிற மாஹாத்மியமுள்ளதாம். மார்கழி முக்கோடித் துவாதசி காலையில் ஒருதடவையும் மாசி பிரமோற்சவத்தில் இரவு ஒருதடவையும் வெளியேவருகிறது.

## 21-நந்திபுரவிண்ணகரம் (நாதன் கோயில்)

ப்ரபாவம்-விண்ணகரப்பெருமாள், ஜகந்நாதர், நாதநாதப்பெருமாள், சண்பகவல்லி நாச்சியார், மந்தார விமாநம், நந்தி தீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், நந்திக்கும் சிபிசக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்,

மார்க்கமும் வசதிகளும்-இது கும்பகோணத்திலிருந்து தெற்கே மட்சாலைமார்க்கமாய் 3-மைலிலும் நாச்சியார்குடியிலிருந்து மேற்கே 3-மைலிலும் இருக்கிறது. இத்திருப்பதிக்குகிழக்கே 1-மைலில் நந்திவனமென்னும் பெருமாள் கோயில் கிலமடைந்திருக்கிறது. இது நந்தி தபசு செய்தஇடமாம்.

## 22-இந்தளூர் (திருவழுந்தூர்)

ப்ரபாவம்-சுகந்தவந நாதன், மருவினிய மைந்தன், சந்திரசாப விமோசநநாச்சியார், புண்டரீகவல்லி நாச்சியார். வேதசக்ரவிமாநம் இந்துபுஷ்கரணி, காவேரிநதி கிழக்கேதிருமுகமண்டலம், வீரசயநம் சந்திரனுக்கு ப்ரத்யக்ஷம். குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-மாயவரம் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே மட்சாலைமார்க்கமாய் 3-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு சத்திரங்களும்ஹோட்டல்களும் இருக்கின்றன. மாயவரத்தில் 2சத்திரங்களும் 6-ஹோட்டல்களும் காபிகிளப்புகளுமிருக்கின்றன. மாயவரம் ஸ்டேஷனுக்குகிழக்கில் 2-மயிலில்மயிலாடுதுறை சிவஸ்தலமிருக்கிறது.

## 23-தில்லைத்திருச்சித்திரகூடம் (சிதம்பரம்)

ப்ரபாவம்-கோவிந்தராஜப் பெருமாள், புண்டரீகவல்லி நாச்சியார், ஸாத்விகவிமாநம், புண்டரீகஸரஸ்ஸு, கிழக்கே திருமுகமண்டலம், போகசயநம்சிவன்முதலிய தில்லைமூவாயிரவர்க்கும்கண்வர்க்கும ப்ரத்யக்ஷம்; தேவர்கள் கொலுவீற்றிருந்தஇடம். குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது சிதம்பரம் ஸ்டேஷனுக்கு வடமேற்கே கற்சாலைமார்க்கமாய் 1-மைலிலிருக்கிற சிதம்பர ஆலயத்திற்குள் இருக்கிறது. வண்டிகள் உண்டு 50-சத்திரங்களும் 5-ஹோட்டல்களும் இருக்கின்றன.

இதற்கு மேற்கே 24-மைலில் ஸ்ரீ முஷ்ணமும் தென்மேற்கே 16-மைலில் காட்டுமன்னார்குடியும் இருக்கின்றன. இவ்விடங்களுக்கு செல்லுவதற்கு தபால்வண்டிகளுண்டு.

## 24-காழிச்சீராம விண்ணகரம். (தாடாளன் சந்நிதி)

ப்ரபாவம்-தாடாளன், திருவிக்கிரமமூர்த்தி, மட்டவிழுங்குழலீ நாச்சியார், புஷ்கலாவர்த்தகவிமானம், சக்ரதீர்த்தம், சங்கபுஷ்கரணி கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், அஷ்டகோணமகர்ஷிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது சீகாழி ஸ்டேஷனுக்கு கிழக்கே ½-மைலில்இருக்கிறது. 2-சத்திரங்களும் 4-ஹோட்டல்களுமிருக்கின்றன. சந்நிதியிலும் பிரசாதம்கிடைக்கும்.

## 25-கூடலூர் (ஆடுதுறை பெருமாள்கோயில்)

ப்ரபாவம்- வையங்காத்தபெருமாள், பத்மாசனவல்லிநாச்சியார், சுத்தசத்வவிமானம், சக்ரதீர்த்தம், காவேரிநதி கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், நந்தகமாமுனிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-கும்பகோணத்திற்குமேற்கே 13-மைல் தூரத்திலுள்ள ஐயம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து ¾-மைலிலிருக்கும் சக்ரப்பள்ளி (சி-த)யை அடைந்து வடக்கேமட்சாலை மார்க்கமாய் 2½-மைல் தூரம்சென்றால் இத்தலத்தை யடையலாம். குடமுருட்டி காவேரி நதிகளுக்கு பரிசல்களுண்டு, கண்டியூரிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கத்தில் 1-மைலிலிருக்கும் திருவையாற்றை யடைந்து அங்கிருந்து கிழக்கே 7-மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். (திருக்கண்டியூரைப் பார்க்க) வண்டிகள் கிடையா. சத்திரமில்லை ஹோட்டலுமில்லை, சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 26-திருக்கண்ணங்குடி.

ப்ரபாவம்-ஸ்யாமளமேனிப் பெருமாள், அரவிந்தவல்லி நாச்சியார், உத்பலவிமானம், ராவணபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம் நின்றதிருச்கோலம், ப்ருகுசைத்யருக்கும், கௌதமருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருவாரூருக்கு கிழக்கே 7-மைலிலுள்ள கீழ்வேளூர்ஸ்டேஷனிலிருந்து கிழக்கேமட்சாலை மார்க்கமாய் 2-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு சத்திரமில்லை; ஹோட்டலுமில்லை, முன்சொல்லிவைத்தால் சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 27-திருக்கண்ணமங்கை.

ப்ரபாவம்-பக்தவத்ஸலப் பெருமாள், அபிஷேகவல்லித்தாயார் உத்பலவிமானம், தர்சநபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், வருணனுக்கும், உரோமசனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்--திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 1-மைலிலுள்ள திருவாரூரை அடைந்து அங்குநின்றும் மேற்கேட்சாலைமார்க்கமாய் 4-மைல்சென்றால் இத்தலத்தையடையலாம் திருவாரூருக்கு மேற்கிலுள்ள குளிக்கரை ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 2-மைலிலுள்ள அம்மையப்பன் ஊரை அடைந்து அங்கு நின்றும்கிழக்கே $1\frac{1}{2}$-மைல்தூரம் சென்றால் இத்தலத்தையடையலாம். வண்டிகளுண்டு சத்திரமில்லை சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

சுவாமி சந்நிதியில் ஒருதேன்கூடு இருக்கிறது. ருஷிகள் தேனீக்கள்போல் உருவெடுத்து பூசித்ததாக சொல்லுகிறார்கள். இந்த தேன் கூட்டுக்கும் பூசை நடக்கிறது.

## 28-கவித்தலம்.

ப்ரபாவம்-கஜேந்திரவரதர், ரமாமணிவல்லி நாச்சியார், பொற்றாமரையாள் நாச்சியார், ககநாக்ருதிவிமாநம், கஜேந்திரபுஷ்கரணி, சபில தீர்த்தம், காவேரிநதி கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம் கஜேந்த்ரனுக்கும், ஆஞ்சநேயருக்கும் ப்ரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது கும்பகோணத்திற்குமேற்கே9-மைலிலுள்ள பாபநாசம் ஸ்டேஷனிலிருந்து வடக்கே 2-மைலிலிருக்கிறது. மார்க்கத்திலிருக்கும் குடமுருட்டி சிற்றாறு அரசலாறு காவேரியாகிய நான்கு ஆறுகளையும் மழைகாலங்களில் பரிசலால் கடக்கவேண்டும். (ஆடுதுறை பெருமாள் கோவிலிலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 4-மைலிலிருக்கிறது. இதற்கு வடகிழக்கே உமயாபுரம் மட்சாலைமார்க்கமாய் 4-மைலில் தொண்டரடிப் பொடியாழ்வார்அவதாரஸ்தலமாகிய திருமண்டங்குடி இருக்கிறது.
வண்டிகள் கிடையா. சத்திரங்களிருக்கின்றன. ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 29-திரு வெள்ளியங்குடி.

ப்ரபாவம்-கோலவில்லிராமன், மரகதவல்லி நாச்சியார், புஷ்பல வர்த்தகவிமாநம், சுக்கிரபுஷ்கரணி, ப்ரஹ்மதீர்த்தம், கிழக்கேதிருமுக மண்டலம், புஜங்கசயநம், சுக்கிரனுக்கும், பிரமனுக்கும் பராசருக்கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-திருவிடை மருதூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கேவேப்பந்தூர் கற்சாலைமார்க்கமாய் 5-மைலிலிருக்கும் ஆனைக்குடியை அடைந்து கிழக்கேதிரும்பி 1மைல்தூரம்சென்றால் இத்தலத்தையடையலாம், கும்பகோணத்திலிருந்து வடகிழக்கே காவேரியின்

வடகரை மட்சாலே மார்க்கமாய் 5-மைலிலிருக்கும் வேப்பத்தூரை யடைந்து வடக்கேதிரும்பி 2-மைலிலுள்ள ஆனைக்குடிக்குவந்துபின்னும் கிழக்கே 1-மைல் சென்றால் இத்தலத்தையடையலாம்.

இத்தலத்திற்கு வடக்கேவரப்பு மார்க்கமாய் 1-மைலில் பெரியவாச்சான்பிள்ளை அவதாரஸ்தலமாகிய செங்கநல்லூர் இருக்கிறது.

இரண்டு ஸ்டேஷன்களிலிருந்தும் ஆனைக்குடி வரையில் தான் வண்டிவரும். சத்திரமும் ஹோட்டலுமில்லை. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும். திருவிடைமருதூரில் 3-சத்திரங்களும் 2-பிராம்மணர்கள் ஹோட்டல்களுமிருக்கின்றன.

## 30-மணிமாடக்கோயில். (திருநாங்கூர்)

ப்ரபாவம்—நந்தாவிளக்குப்பெருமாள், நரநாராயணர், புண்டரீகவல்லி நாச்சியார், ப்ரணவவிமானம், இந்திரபுஷ்கரணி, ருத்ரபுஷ்கரணி கிழக்கேதிருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், ஏகாதசருத்திரருக்கும், இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-வைதீசுவரன் கோயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்காக 4-மைலிலிருக்கிறது. இது திருநாங்கூர் ஆறு ஸ்லதங்களில் முதலாவது. திருவாலியிலிருந்துதெற்கே 2-மைலிலிருக்கிறது. திருவாலி மார்க்கம் பார்க்க இங்கிருந்து 2-மைலில் காவளம்பாடி இருக்கிறது.

திருநாங்கூரிலுள்ள ஆறு திருப்பதிகளாவன. (30) மணிமாடக்கோயில் (31) வைகுந்தவிண்ணகரம் (32) அரிமேயவிண்ணகரம் (34) வண் புருஷோத்தமம் (35) செம்பொன் செய்கோயில் (36) திருதெற்றியம்பலம்.

வண்டிகளுண்டு இராமாநுஜ கூடமிருக்கின்றது. சத்திரமும் ஹோட்டலுமில்லை. சந்நிதியில் சொல்லிவைத்தால் தத்தியோதனம் கிடைக்கும். வைதீசுவரன் கோயிலில் 2-சத்திரங்களும் 13-ஹோட்டல்களு மிருக்கின்றன. இத்தலம் முன்பு பெரியபட்டணமாக இருந்திருக்கவேணும் இப்போது ஒருசிறிய கிராமமாயிருக்கிறது.

## 31-வைகுந்தவிண்ணகரம்.

ப்ரபாவம்-வைகுந்தநாதன், தாமரைக்கண்ணுடையபிரான், வைகுந்தவல்லி நாச்சியார், அநந்தஸத்திய வர்த்தகவிமாநம், லட்சுமிபுஷ்கரணி, உதங்கபுஷ்கரணி, விரஜை, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், உபரிஸரவசுராஜாவுக்கும், உதங்கமகர்ஷிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது திருநாங்கூர் ஆறு ஸ்தலங்களில் சேர்ந்தது.

## 32-அரிமேய விண்ணகரம்.

ப்ரபாவம்-குடமாடுகூத்தப்பெருமாள், அம்ருதகடவல்லி நாச்சியார், உச்சச்ருங்கவிமாநம், கோடிதீர்த்தம், அமுததீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், உதங்கமகருஷிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும் — இதுவும் திருநாங்கூர் ஆறு ஸ்தலங்களில் சேர்ந்தது.

## 33-திருத்தேவனார் தொகை. (கீழைச்சாலை)

ப்ரபாவம்-மாதவப்பெருமாள், தெய்வநாயகப்பெருமாள், கடல் மகள் நாச்சியார், சோபநவிமாநம், சோபநபுஷ்கரணி, தேவஸபாபுஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், வஸிஷ்டருக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும்வசதிகளும்-இது திருநாங்கூரிலிருந்து வடக்கேவரப்பு மார்க்கமாய் 2-மைலில் உள்ளது. அண்ணன்கோயிலுக்கு கிழக்கே ½-மைலிலிருக்கிறது.

## 34-வண்புருடோத்தமம்.

ப்ரபாவம்-புருஷோத்தமப் பெருமாள், புருஷோத்தம நாயகி சஞ்சீவிக்ரஹவிமாநம், திருப்பாற்கடல்தீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், உபமந்யுவுக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இதுவும் திருநாங்கூரில் உள்ளது.

## 35-செம்பொன்செய்கோயில்.

ப்ரபாவம்-பேரருளாளப் பெருமாள், அல்லிமாமலர் நாச்சியார் கநகவிமாநம், கநகதீர்த்தம், நித்யபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், ருத்திரனுக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இதுவும் திருநாங்கூரில் உள்ளது,

## 36-திருத்தெற்றியம்பலம்.

ப்ரபாவம்-செங்கண்மால், செங்கமலவல்லி நாச்சியார், வேதவிமாநம், சூர்யபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம், செங்கமலவல்லி நாச்சியாருக்கும் அநந்தனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இதுவும் திருநாங்கூரிலுள்ளது.

## 37-திருமணிக்கூடம்.

ப்ரபாவம்-மணிக்கூடநாயகன், திருமாமகள்நாச்சியார், கநகவிமாநம், சந்திரபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பெரியதிருவடிக்கும் சந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருநாங்கூருக்கு கிழக்கே 1-மைலிலிருக்கிறது. காவளம்பாடிக்கு தெற்கே 3-மைலிலிருக்கிறது. சந்நிதி தவிர வேறுவசதி கிடையாது.

## 38-திருக்காவளம்பாடி.

ப்ரபாவம்-கோபாலகிருஷ்ணன், மடவரல்மங்கைநாச்சியார், செங்கமலநாச்சியார், சுவயம்புவிமானம், தடமலர்ப்பொய்கை, கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், சேனைத்தலைவருக்கும் மித்திரதேவருக்கும் ருத்திரருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருநகரிலிருந்து தெற்கேதிருவெண்காடு மட்சாலைமார்க்கத்தில் 1½-மைலிலிருக்கிறது. வசதிகள் ஒன்றுமில்லை.

## 39-திருவெள்ளக்குளம், (அண்ணன் கோயில்)

ப்ரபாவம்-கண்ணன் நாராயணன், பூவார்திருமகள் நாச்சியார் தத்வதோதகவிமானம், வெள்ளக்குளதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், இக்ஷ்வாகு வம்சத்தில் ச்வேதராஜனுக்கும் ருத்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-திருத்தேவனூர் தொகையிலிருந்து மேற்கே ½-மைலில இருக்கிறது.

இது சீகாழியிலிருந்து தென்கிழக்காய் திருக்கடையூர்மட்சாலை மார்க்கத்தில் 5-மைலிலிருக்கிறது. வண்டிகள் அகப்படும். மற்றசௌகரியங்கள் ஒன்றுமில்லை. வைதீசுவரன் கோயிலுக்கு கிழக்கே 7-மைலிலிருக்கிறது.

## 40-பார்த்தன்பள்ளி.

ப்ரபாவம்-தாமரையாள் கேள்வன், தாமரைநாயகி, நாராயணவிமானம, சங்கஸரஸ்ஸு, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பார்த்தனுக்கும் வருணனுக்கும ஏகாதசருத்ரருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருநாங்கூரிலிருந்து தென்கிழக்கே சாலைமார்க்கமாய் 2-மைலிலிருக்கிறது. சௌகரியங்கள் கிடையா.

சோழநாட்டுத்திருப்பதிகள்
முற்றுப்பெற்றன.

## பாண்டியநாட்டுத் திருப்பதிகள் கஅ.

### 41–திருமாலிருஞ் சோலைமலை. (அழகர் கோயில்)

ப்ரபாவம்—அழகர், மாலலங்காரர், சுந்தரவல்லிநாச்சியார், சோம சுந்தரவிமாநம், சிலம்பாறு, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக் கோலம், வ்ருஷபகிரி, சந்தனவிருக்ஷம், மலயத்வஜபாண்டியனுக்கும் தர்மதேவதைக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் குலசேகராழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் ஆண்டாள் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இதுமதுரையிருந்து வடகிழக்கே கற். சாலை மார்க்கமாய் 12-மைலில் மலைஅடிவாரத்தில் இருக்கிறது. மலை மேலிருக்கும் நூபுரகங்கை சந்நிதிக்கு வடக்கே 3-மைலிலிருக்கிறது.

இதற்கு தெற்கே 10-மைல் தூரத்தில் (46) திருமோகூர் இருக் கிறது. அழகர் கோயிலுக்கு கிழக்கே 10-மைலிலிருக்கும் மேலூர் மார்க்கமாய் திருப்புத்தூரை யடைந்து. (42) திருக்கோட்டியூருக் கும், (43) திருமெய்யத்திற்கும் போகலாம்.

சந்நிதியைச்சுற்றி மூன்றுமைல் காடானதையால் சந்நிதியிலேயே தங்கவேண்டும். பசனம்முதலானது செய்துகொள்ளலாம். சந்நிதியில் ப்ரசாதம் கிடைக்கும். பண்டிகளுண்டு. திருக்கூடலைப்பார்க்க.

இந்தமலையின்மிசை 3-மைல்தூரத்தில் பாதைவழியாகப்பெருகி வரும்நூபுரகங்கை சிலவிடங்களில் வேகமாயும், சிலவிடங்களில்மெது வாயும், சிலவிடங்களில் இடறிவிழுவது போலவும்,சில விடங்களில் மிகுந்தநுரையோடும், மற்றுஞ்சில விடங்களில் அட்டகாசத்துடன் உயர்ந்த பாகத்திலிருந்து விழுந்துகொண்டும் வருவதைப் பார்த் தால் வெகுரமணியமாயிருக்கும். இந்த அருவி விழுமிடத்தில் திரு மஞ்சனமண்டபமொன்று கட்டப்பட்டிருக்கிறது. ஆழ்வார் பாசுரங் களிலும் ஆழ்வான் ஸ்தோத்திரத்திலும் அழகருடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் வைபவங்கள் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கின்றன. பெருமானை நேரில் சேவிப்பவர்களுக்கு தான் நன்குவிளங்கும்.

"அவ்வழிப் படரீ ராயி னிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டு.
விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி

விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள.
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்
பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவிர்
இட்ட சித்தி யெய்துவி ராயி
னிட்ட சித்தி யெய்துவிர் நீரே."

என்று சிலப்பதிகாரத்தில் சிலம்பாறு மஹிமை நன்கு வருணிக்கப்பட்டிருக்கின்றது. இந்தஸ்தலத்தையும் திருப்பதியையும் குமரன் குன்று தோருடலில் ஒன்றுஎன்று சொல்லுபவர்கள் காணுமாறு அந்தப்பாடலை இங்கு அமைத்துளேன்.

திருப்பதிவிஷயத்தை 96-திருவேங்கடத்தில் கண்டு கொள்ளலாகும்.

## 42-திருக்கோட்டியூர்.

ப்ரபாவம்—ஸௌம்யநாராயணன், திருமாமகள் நாச்சியார், அஷ்டாங்கவிமானம், தேவபுஷ்கரணி, கிழக்கேதிருமுகமண்டலம், நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் திருக்கோலம். கதம்ப மஹர்ஷிக்கும் இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். திருக்கோட்டியூர் நம்பி அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்—மதுரைக்கு 30-மைலில் கிழக்கேயுள்ள மானாமதுரை ஸ்டேஷனிலிறங்கி வடக்கே கற்சாலை மார்க்கமாய் 11-மைலிலிருக்கும் சிவகங்கையை அடைந்து பின்னும் 16-மைல் வடக்கேகற்சசாலைமார்க்கமாய்ச்சென்றால் இத்தலத்தையடையலாம். ஸ்டேஷனிலிருந்து சிவகங்கை வரையிலும் ஜட்கா வண்டிகள் உண்டு. சிவகங்கையிலிருந்து இரட்டைமாடு வண்டிகள் அகப்படும். இங்குச் சத்திரமும் ஹோட்டலும் இருக்கின்றன. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும். இங்கிருந்து வடமேற்கே 6-மைலிலிருக்கும் திருப்புத்தூரை (சி.த.) அடைந்து பின்னும் வடக்கே கற்சாலைமார்க்கமாய் 15-மைல் தூரம் சென்றால் (43) திருமெய்யம் அடையலாம். மதுரையிலிருந்து கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 7-மைலிலிருக்கும் (46) திருமோகூரை சேர்ந்து அங்கிருந்து கற்சாலைமார்க்கமாயே 11-மைலிலுள்ள மேலூரை அடைந்து பின்னும் வடகிழக்கே கற்சாலை மார்க்கமாய் 18-மைலிலுள்ள திருப்புத்தூருக்கு வரலாம். திரும்புத்தூருக்கு தெற்கே 6-மைலில் (42) திருக்கோட்டியூரும் வடக்கே 15-மைலில் (43) திருமெய்யமும் இருக்கின்றன. திருமெய்யத்திலிருந்து வடக்கே 12-மைலில் புதுக்கோட்டையிருக்கிறது. புதுக்கோட்டையிலிருந்து வடக்கே 33-

மைலில் திருச்சிறுப்பள்ளியிருக்கிறது. மதுரையிலிருந்து மேலூருக்கும்மேலூரிலிருந்து திருப்புத்தூருக்கும் இரட்டைமாட்டு வண்டிகள் அகப்படும். மானாமதுரையிலும் சிவகங்கையிலும் திருப்புத்தூரிலும் சத்திரங்களும் ஹோட்டல்களு மிருக்கின்றன.

## 43–திருமெய்யம்.

ப்ரபாவம்–சத்யகிரிநாதன், உய்யவந்தாள், சத்தியகிரிவிமானம், சத்தியகிரி, சத்தியதீர்த்தம், கதம்பபுஷ்கரணி, பலாவிருக்ஷம், தெற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், சத்திய தேவதைகளுக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–திருச்சிறுப்பள்ளி சங்ஷனி லிருந்து தெற்கே கற்சாலை மார்க்கமாய் 33-மைலிலுள்ள புதுக்கோட்டையை அடைந்துபின்னும் தெற்கே 12-மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். தஞ்சாவூரிலிருந்து தென் மேற்கே 35-மைலிலுள்ளபுதுக்கோட்டையை அடைந்தும் இங்குவரலாம். இங்குநாட்டுக்கோட்டையார் சத்திரம் ஒன்றுஉண்டு. இரண்டுபிராமணர்கள் ஹோட்டல்களும் இரண்டு சைவர்கள் ஹோட்டல்களும் இருக்கின்றன சந்நிதியில் பிரசாதம்கிடைக்கும். திருச்சிறுப்பள்ளிக்கும் புதுக்கோட்டைக்கும் மோடோர்வண்டி உண்டு. திருச்சிறுப்பள்ளியிலிருந்தும் தஞ்சாவூரிலிருந்தும் புதுக்கோட்டைக்கு ஜட்காவண்டிகள் பறக்கின்றன. புதுக்கோட்டையிலிருந்து இத்தலத்திற்கு ஜட்காவும் மாட்டுவண்டிகளும் அகப்படும். திருமெய்யத்திலிருந்து தெற்கே 15-மைலில் திருப்புத்தூர் (சி. த.) இருக்கிறது. இதற்கு தெற்கே 6-மைலில் (42) திருக்கோட்டியூர் இருக்கிறது.

## 44–திருப்புல்லாணி. (தர்ப்பசயநம்).

ப்ரபாவம்–கல்யாணஜகந்நாதன், தெய்வச்சிலையார், தெய்வச்சிலை நாச்சியார், கல்யாணவல்லி நாச்சியார், கல்யாணவிமானம், ஹேமதீர்த்தம், சக்கரதீர்த்தம், அசுவத்தவிருக்ஷம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், புல்லாரணியக்ஷேத்ரம், தர்ப்பசயநம், புல்லாரணிமகாரிஷிக்கும் அச்வத்த நாராயணனுக்கும் ப்ரத்யக்ஷம். சக்ரவர்த்திதிருமகன் சமுத்ரராஜனுக்கு வரங்கொடுத்தவிடம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–இது மதுரையிலிருந்து தனுஷ்கோடிக்குச்செல்லும் ரயில்பாதையில் 67-மைலிலுள்ள ராமநாதபுரம்ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலைமார்க்கமாய 5-மைலிலிருக்கிறது. இங்கிருந்து ஆதிசேது (சமுத்திர ஸ்நானகட்டம்) தெற்கில் 3-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு சத்திரங்களுண்டு.

## 45–திருத்தண்காலூர். (திருத்தங்கால்)

ப்ரபாவம்–அப்பன், தண்காலப்பன், அன்னநாயகி, அநந்தநாயகி நாச்சியார்நால்வர், தேவசந்திரவிமாநம், பாபவிநாசதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், சல்லிய பாண்டியனுக்கும். ஸ்ரீவல்லபனுக்கும் புலிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–மதுரைக்குத் தெற்கே 44-மைலிலுள்ள சாத்தூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 12-மைலிலுள்ள சிவகாசியை அடைந்துவடக்கே திரும்பி 2-மைல்தூரம் சென்றால் இத்தலத்தையடையலாம். துலுக்கப்பட்டி ஸ்டேஷனிலிருந்து மேற்கே 7-மைலிலிருக்கிறது. வழிவரப்பு மார்க்க மாகையால் நடப்பவர்களுக்கு மாத்திரம் சுலபம். சாத்தூரிலிருந்து சிவகாசிவரைக்கும் மாட்டுவண்டி கிடைக்கும். சிவகாசியிலிருந்து வேறுவண்டி. சத்திரமுண்டு ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும். சிவகாசியிலிருந்துபின்னும் மேற்கே 13-மைல்சென்றால் (48) ஸ்ரீவில்லிபுத்தூரையடையலாம்.

## 46–திருமோகூர்.

ப்ரபாவம் – காளமேகப்பெருமாள், மோகூர் வல்லிநாச்சியார் மேகவல்லிநாச்சியார், கேதகிவிமாநம், க்ஷீராப்திபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், அஜருத்ரேந்த்ராதிகளுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–இது மதுரையிலிருந்து வடகிழக்கே கற்சாலை மார்க்கமாய் 7-மைலிலிருக்கிறது. அழகர் மலையிலிருந்து தெற்கே 10-மைலிலிருக்கிறது. அழகரைச்சேவித்துக்கொண்டு இங்கு வந்து மதுரைக்கு வருவது ஜனங்களுக்கு வழக்கமாயிருக்கிறது. சத்திரமும் ஹோட்டலுமில்லை. வண்டிகள் அகப்படும். சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 47–திருக்கூடல் (தென்மதுரை.)

ப்ரபாவம்–கூடலழகர், வகுளவல்லி நாச்சியார், மரகதவல்லிநாச்சியார், வரகுணவல்லி, மதுரைவல்லி. அஷ்டாங்கவிமாநம், ஹேமபுஷ்கரணி, சக்ரதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், சௌநகாதிகளுக்கும், ப்ருகுமஹர்ஷிக்கும், பெரியாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–இது மதுரை ஸ்டேஷனுக்கு கிழக்கே 1-மைலில் இருக்கிறது. இது பெரியபட்டண மாகையால் சத்திரங்

களும்ஹோட்டல்களும் கிளப்புகளும் அனேகம் உண்டு. இங்கிருந்து வடகிழக்கே 12-மைலில் (41) அழகர்கோயிலும் கிழக்கே 7-மைலில் (46) திருமோகூரும் இருக்கின்றன.

## 48–ஸ்ரீவில்லிபுத்தூர்.

ப்ரபாவம்–வடபத்திரசயனர், ரங்கமன்னார், ஆண்டாள், பெரிய திருவடி, கோதைநாச்சியார், ஸம்சனவிமானம், திருமுக்குளதீர்த்தம் கிழக்கேதிருமுகமண்டலம், வடபத்ரசயனம், நின்றதிருக்கோலம், மண்டூகமகர்ஷிக்கும்பெரியாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார் ஆண்டாள் மங்களாசாஸனம். பெரியாழ்வார் ஆண்டாள் அவதரித்ததலம்.

மார்க்கமும் வசதிகளும்–இது மதுரைக்கு தெற்கே 44-மைலிலுள்ளசாத்தூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 25-மைலிலிருக்கிறது. மார்க்கத்தில் 12-வதுமைலில் சிவகாசிஇருக்கிறது. இத்தலத்திற்கு வடக்கே 11-மைலில் காட்டழகர் கோவில் மலைமேலிருக்கிறது. வடக்கே 3-மைலில் ஸ்ரீநிவாசன்சந்நிதி இருக்கின்றது. இதுதிருநெல்வேலி ஜில்லாவுக்கு திருவேங்கட மென்னும் திருப்பதிபோல் விளங்குகிறது. பண்டிகளுண்டு சத்திரமும் ஹோட்டலும் இருக்கின்றன,

## 49–திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)

ப்ரபாவம்-ஆதிநாதப்பெருமாள், பொலிந்துநின்றபிரான், ஆதிநாதவல்லி, கோவிந்தவிமானம், தாம்ரபர்ணிநதி, பிரமதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பிரமனுக்கும் நம்மாழ்வாருக்கும், மதுரகவிக்கும் ப்ரத்யக்ஷம் நம்மாழ்வார் மங்களாசாஸனம், நம்மாழ்வாரும் மணவாளமாமுனிகளும் அவதரித்ததலம்

மார்க்கமும்வசதிகளும்-இது திருநெல்வேலிபாலம்ஸ்டேஷனிலிருந்துகிழக்கே கற்சாலைமார்க்கமாய் 18-மைலில்இருக்கிறது. சத்திரமும் ஹோட்டலும் உண்டு. மாட்டுவண்டிகளும் மோட்டார்வண்டிகளும் உண்டு. இத்தலத்திற்குமேற்கே3-மைலில்தாம்பிரபரணிக்குவடகரையில்(54) ஸ்ரீவைகுண்டமும் இதற்குகிழக்கே (55)வரகுணமங்கையும் (52)திருப்புளிங்குடியும்(56) திருக்குளந்தையுமிருக்கின்றன. திருநகரியை மத்தியமாகக்கொண்டு நவதிருப்பதிகளையும் சுலபமாகச் சேவிக்கலாம். இதற்குகிழக்கே 16-மைலில் கீழ்சமுத்திரக்கரையில் திருச்செந்தூர் என்னும் சுப்பிரமணிய ஸ்தலமிருக்கின்றது.

## 50–தொலைவில்லிமங்கலம். (இரட்டைத்திருப்பதி)

ப்ரபாவம்–தேவபிரான், அரவிந்தலோசனன், கருந்தடங்கண்ணி நாச்சியார், குமுதவிமானம், வருணதீர்த்தம், தாமரபர்ணிநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், வீற்றிருந்ததிருக்கோலம்,

இந்திரனுக்கும்வாயுவுக்கும் வருணனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இங்கு இரண்டுதிருப்பதிகள் இருப்பதாலே இது இரட்டைத்திருப்பதி எனப்படும். இது ஆழ்வார்திருநகரியிலிருந்து கிழக்கில் ஆற்றின் வடகரையில் 2-மைலிலிருக்கிறது. இதற்கு மேற்கில் அப்பன் சந்நிதியென்று ஆழ்வார் அவதரித்த ஸ்தலமிருக்கிறது. இங்கிருந்து வடகிழக்கில் 5-மைலில் (56)திருக்குளந்தையிருக்கிறது.

## 51-சிரீவரமங்கை(வானமாமலை.) (நாங்குநேரி)

ப்ரபாவம்—வானமாமலைப்பெருமாள், தெய்வநாயகன், தோதாத்ரிப்பெருமாள், சிரீவரமங்கை நாச்சியார், நந்தவர்த்தன விமாநம், இந்திரபுஷ்கரணி, சேற்றுத்தாமரை, கிழக்கேதிருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, சேனைமுதலியார் பெரியதிருவடி, இவர்களுடனும், சாமரகன்னிகைகள், சந்திரர், சூரியர் பக்கத்திருக்க இந்திரனுக்கும், ப்ரம்மாவுக்கும், உரோமசரிஷிக்கும், ப்ருகுரிஷிக்கும், மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது திருநெல்வேலியிலிருந்து தெற்கே கற்சாலை மார்க்கமாய் 20-மைலிலிருக்கிறது. இங்குச் சத்திரமுண்டு வானமாமலை மடத்தில் எல்லோருக்கும் பிரசாதம் கிடைக்கும். வண்டிகளும் மோட்டார்கார்களும் உண்டு.

## 52-திருப்புளிங்குடி.

ப்ரபாவம் – காய்சினவேந்தன், மலர்மகள் நாச்சியார், வேதசார விமாநம், வருணதீர்த்தம், நிருதிதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம் புஜங்கசயநம், நிருதிக்கும், வருணனுக்கும், தர்மராசாவுக்கும், ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது (55) வரகுணமங்கைக்கு கிழக்கே 1-மைலில் இருக்கிறது.

## 53-திருப்பேரை.

ப்ரபாவம்—மகரநெடுங்குழைக்காதன், நிகரில் முகில்வண்ணன் புளிங்குடிவல்லி நாச்சியார், குழைக்காதவல்லி நாச்சியார், பத்திரவிமாநம், சுக்கிரபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், சுக்கிரனுக்கும், பிரமனுக்கும், ஈசாந்யருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது ஆழ்வார் திருநகரிக்குத்தென்கிழக்கே கற்சாலை மார்க்கத்தில் 4-மைலிலும் இரட்டைத் திருப்பதியிலிருந்து தெற்கே 2-மைலிலும் இருக்கிறது.

## 54-ஸ்ரீ வைகுந்தம்.

ப்ரபாவம்-கள்ளப்பிரான், வைகுந்தநாதன், வைகுந்தவல்லிநாச்சியார், சந்திரவிமாநம், தாம்ரபர்ணிநதி, ப்ருதுதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், இந்திரனுக்கும், ப்ருதுசக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருநெல்வேலி பாலம் ஸ்டேஷனிலிருந்து கற்சாலை மார்க்கமாய் 15-மைலில் தாம்ரபரணி வடகரையிலிருக்கிறது. இதற்கு கிழக்கே 3-மைலில் தாம்பிரபரணி நதிக்குத்தென்கரையில் ஆழ்வார்திருநகரி இருக்கிறது. பண்டிகளுண்டு சத்திரமும் ஹோட்டல்களுமி ருக்கின்றன. இதற்கு கிழக்கே 1-மைலில், (55) வரகுணமங்கையும் (52) திருப்புளிங்குடியு மிருக்கின்றன.

## 55-வரகுணமங்கை.

ப்ரபாவம்-விஜயாஸநர், வரகுணவல்லி நாச்சியார், விஜயகோடி விமாநம், தேவபுஷ்கரணி, அக்நிதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், அக்நிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும-இது ஸ்ரீ வைகுண்டத்திற்கு கிழக்கே கற்சாலை மார்க்கதில் 1-மைலிலிருக்கிறது.

## 56-திருக்குளந்தை (பெருங்குளம்)

ப்ரபாவம்-மாயக்கூத்தன், குளந்தைவல்லிநாச்சியார், ஆநந்தநிலயவிமாநம், பெருங்குள தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ப்ருஹஸ்பதிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருப்புளிங்குடிக்கு வடகிழக்கில் கற்சாலைமார்க்கமாய் 4-மைலிலிருக்கிறது. சந்நிதியில்பிரசாதங்கிடைக்கும்.

## 57-திருக்குறுங்குடி.

ப்ரபாவம்-வைஷ்ணவநம்பி, மலைமேல்நம்பி, நின்றநம்பி, இருந்தநம்பி, கிடந்தநம்பி, திருப்பாற்கடல்நம்பி, குறுங்குடிவல்லிநாச்சியார், பஞ்சகேதகவிமாநம், திருப்பாற்கடல்நதி, பஞ்சதுறை, கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பக்கம் நின்றசிவனுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருநெல்வேலிக்குத்தெற்கே 20-மயிலுள்ள நாங்குநேரி வானமாமலைக்குத் தென்மேற்கில் கற்சாலைமா

ர்க்கத்தில் 8-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு சேத்திரம்இருக்கிறது. ஜீயர்மடத்தில் சர்வத்ராளுக்கும் பிரசாதம் கிடைக்கும் திருநெல்வே லிக்கு 10-மைல் மேற்கிலுள்ள சேர்மாதேவி ஸ்டேஷனிலிறங்கி தெற் கே களாக்காடுமார்க்கமாக 18-மைல்தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். மாட்டுவண்டிகளுண்டு

## 58-திருக்கோளூர்

ப்ரபாவம்—வைத்தமாநிதி, (நிக்ஷேபவித்தன்) கோளூர்வல்லிநாச் சியார், ஸ்ரீகரவிமானம், குபேரதீர்த்தம், தாம்ரபர்ணிநதி, கிழக்கேதிரு முகமண்டலம். புஜங்கசயநம். குபேரனுக்கும், மதுரகவி யாழ்வாருக் கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம். மதுரகவியாழ்வார் அவதரித்த தலம்.

மார்க்கமும் வசதிகளும்—இது திருப்பேரையிலிருந்து மேற்கே 2-மைலிலும் திருநகரிக்கு கிழக்கே 2-மைலிலுமிருக்கிறது. ஆழ்வார திருநகரியிலுள்ளநவதிருப்பதிகள். 1-திருக்குருகூர் 2-3-தொலைவில்லி மங்கலம்,(இரண்டுதிருப்பதிகள்) 4-திருப்புளிங்குடி 5-திருப்பேரை 6 ஸ்ரீவைகுந்தம்,7-வரகுணமங்கை, 8-திருக்குளந்தை, 9-திருக்கோளூர். ஆழ்வார்திருநகரிலாவது ஸ்ரீவைகுந்தத்திலாவது ரூபாய் 3-க்கு ஒரு மாட்டு வண்டி அமர்த்திக் கொண்டால் இந்த நவதிருப்பதிகளையும் சுலபமாய் ஒரேநாளில் சேவிக்கலாம்.

பாண்டியநாட்டுத் திருப்பதிகள் முற்றுப்பெற்றன.

---

# மலைநாட்டுத்திருப்பதிகள் கங.

## 59-திருவநந்தபுரம். (அநந்தசயநம)

ப்ரபாவம்—அநந்தபத்மநாபன், ஸ்ரீ ஹரிலக்ஷ்மிநாச்சியார், ஹேமகூடவிமானம், பத்மதீர்த்தம், மத்ஸ்யதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம், ருத்ரனுக்கும்சந்திரனுக்கும் இந்திரனுக்கும ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—(Quilon) கொல்லம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே கனல்மார்க்கமாய் 40-மைலில் இருக்கிறது. 18-வது மைலில் ஜனார்த்தநம் இருக்கிறது. கொல்லத்துக்கும் திருவநந்தபுரத்துக்கும் கற்சாலையுண்டு. மோட்டோர் வண்டியுண்டு. மலைநாடாகையால் வழிகஷ்டம். இம்மார்க்கம் யாவரும போவதில்லை அதற்கு ரெயில்பாதை போடுகிறார்கள். திருநெல்வேலி பாலத்திலிருந்து தெற்கே 20-மைலிலுள்ள நாங்குநேரி 28-மைலிலுள்ள திருக்குறுங்குடி 37-மைலிலுள்ள பணக்குடி 52-மைலிலுள்ள நாகர்கோவில் . 62-மைலிலுள்ள தக்கலை 70-மைலிலுள்ள மார்த்தாண்டம் குளித்துறை மார்

க்கமாய் சென்றால் 94-மைலிலுள்ள திருவநந்தபுரத்தை யடையலாம். நாகர்கோவிலிலிருந்து (60) திருவண்பரிசாரத்துக்கும் தக்கலை அல்லது மார்த்தாண்டத்திலிருந்தும் (68) திருவாட்டாறுக்கும் பாதைகள் பிரிகின்றன.

ஜலமார்க்கமாய் செல்லுவதற்கு போட்டுகளும் ஸ்டீம்போட்டுகளும் உண்டு. கற்சாலை மார்க்கத்திற்கு வண்டிகளும் மோட்டோர் வண்டிகளும் உண்டு. சத்திரங்கள் ஆங்காங்கு பலவுண்டு. ஹோட்டல்களும காபிகிளப்புகளும் உண்டு.

## 60-திருவண்பரிசாரம். (திருப்பதிசாரம்)

ப்ரபாவம் — திருவாழ்மார்பன், வெங்கடாசலபதி, கமலவல்லி நாச்சியார், இந்திரகல்யாண விமானம், லட்சுமிதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், விக்நைதக்கும் காரிக்கும் உடையநங்கைக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது (57) திருக்குறுங்குடிக்கு தெற்கில் 9-மைலிலுள்ள பணக்குடியை அடைந்துபின்னும் தென்மேற்கே 14-மைல் சென்று (நாகர்கோவிலுக்கு சமீபமாய்) வடக்கே திரும்பி ½-மைல்தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம் (திருக்குறுங்குடி மார்க்கத்தைப்பார்க்க) (68) திருவாட்டாறுக்கு தெற்கில் 8-மைலிலுள்ள தக்கலை (or பத்மநாபபுரம்)யிலிருந்து தென்கிழக்கே 10-மைலிருக்கும் நாகர்கோயிலை அடைந்து வடகிழக்காய் 2-மைல்தூரம் சென்றாலும் இத்தலத்தையடையலாம், (திருவட்டாறு மார்க்கத்தைப்பார்க்கவும்; வண்டிகள் அகப்படும். சத்திரமும் பிராமணருக்கு ஊட்டுப்பிறையுமுண்டு. இத்தலத்திற்கு தெற்கில் 12-மைலில் குமரிக்ஷேத்திரமாகிய கன்னியாகுமரி இருக்கிறது. இது தென்சமுத்திரம் ஸ்நாநவிசேஷம்.

## 61-திருக்காட்கரை.

ப்ரபாவம்—அப்பன், பெருஞ்செல்வநாயகி, புஷ்கலவிமானம், கபில தீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், கபில முனிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும்வசதிகளும்-ஷோரனூர் எரணகுளம்மார்க்கத்திலுள்ள இடைப்பள்ளி ஸ்டேஷனுக்கு கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 2-மைலிலிருக்கிறது. சத்திரமுண்டு. வண்டிகளுண்டு. இதற்கு தென்கிழக்கே 8-மைலில் (69) வித்துவக்கோடு இருக்கிறது.

## 62-திருமூழிக்களம்.

ப்ரபாவம்—திருமூழிக்களத்தான், மதுரவேணிநாச்சியார், ஸௌந்தர்யவிமானம், பெருங்குள தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம்

நின்றதிருக்கோலம், ஹரீதமகாமுனிக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-ஷோரனூர் எரணாகுளம் மார்க்கத்திலுள்ள அங்கமாலி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலை மார்க்கமாய் 4மை லிலிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திரமும் பிராமணளுக்குஊட்டுப் புரையுமிருக்கின்றன.

## 63-குட்டநாடு, திருப்புலியூர். (புலியூர்)

ப்ரபாவம்-மாயப்பிரான்; பொற்கொடிநாச்சியார், புருஷோத்தம விமானம், பூஞ்சுனை தீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக் கோலம், ஸப்தரிஷிகளுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசா ஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இதுசெங்கன்னூரிலிருந்து கற்சாலை மார்க்கமாய் மேற்கே 3-மைலிலிருக்கிறது. சத்திரம் இருக்கின்றது. (64) திருச்செங்குன்றூர் மார்க்கத்தைப்பார்க்கவும்.

## 64-திருச்செங்குன்றூர். (செங்கன்னூர்)

ப்ரபாவம்-இமையவரப்பன், செங்கமலவல்லி நாச்சியார், ஜகஜ் ஜோதிவிமானம், திருச்சிற்றாறு, சங்கதீர்த்தம், மேற்கேதிருமுகமண்ட லம், நின்றதிருக்கோலம், பஸ்மாஸுரன் நிமித்தமாக சிவனுக்கு ப்ரத் யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-கொல்லத்திலிருந்து வடக்கே கெனல் மார்க்கமாய் 40-மைலிலுள்ள அம்பலப்புழையை அடைந்துகிழக்கே திரும்பி 18-மைல்தூரம்சென்றால் இத்தலத்தையடையலாம். இதைச் செங்கனூர் வடக்கு என்பர். சத்திரமுண்டு வண்டிகள் கிடைக்கும். செங்கன்னூருக்கு கிழக்கில் 3-மைலில் (71) திருவாறன் விளையும், தென்மேற்கே 4-மைலில் (63) திருப்புலியூரும், வடமேற்கே 5-மை லில்(67) திருவண்வண்டூரும், வடமேற்கே 10-மைலில் (66)திருவல்ல வாழும், 14-மைலில் (70) திருக்கடித்தானமும் இருக்கின்றன.

## 65-திருநாவாய்.

ப்ரபாவம்—நாராயணன், மலர்மங்கை நாச்சியார், வேதவிமானம் செங்கமலஸரஸ்ஸு தெற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக் கோலம், லட்சுமிக்கும் கஜேந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது மதராஸ் கள்ளிக்கோட்டை மார்க்கத்தில் 382-மைலிலுள்ள எடக்குளம் ஸ்டேஷனுக்கு தெற்கே ½-மைலில் ஆற்றங்கரைமேலிருக்கிறது. சத்திரமுண்டு. (திருவனந்தபுரத்திற்குவடக்கே 22-மைலிலுள்ள ஜனார்த்தனத்திற்குகிழக்கே 7-மைலிலுள்ள நாவாய்குளத்தை திருநாவாய் திவ்யதேசமென்று சொல்லுவர் சிலர், அதுவன்று. அங்கும் பிரபலமுள்ள சங்கரநாராயணர் சந்நிதி ஒன்று இருக்கிறது.)

## 66-திருவல்லவாழ். (திருவல்லாய்)

ப்ரபாவம்-கோலப்பிரான், செல்வத்திருக்கொழுந்து நாச்சியார் சதுரங்ககோலவிமாநம், கண்டாகர்ணதீர்த்தம், மணிமலையாறு, பம்பாநதி, கிழக்கேதிருமுகமண்டலம் நின்றதிருக்கோலம், கண்டாகர்ணனுக்குப்ரத்யக்ஷம். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது திருவமுண்டூரிலிருந்து வடக்கே 4-மைலிலிருக்கிறது. (67) திருவண் வண்டூர் மார்க்கத்தைப் பார்க்கவும். வண்டிசனுண்டு சத்திரமுண்டு.

## 67-திருவண்வண்டூர். (திருவமுண்டூர்)

ப்ரபாவம்-பாம்பணையப்பன், கமலவல்லி நாச்சியார், வேதாலய விமாநம், பாபநாசதீர்த்தம், கல்லாறு, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், மார்க்கண்டேயருக்கும் நாரதருக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும் இது (63) திருப்புலியூரிலிருந்து வடக்கே 3-மைலிலும், (64) செங்கனூரிலிருந்துமேற்கே 5-மைலிலும், (66) திருவல்லாயிலிருந்து தெற்கே 5-மைலிலும் இருக்கிறது. அம்பலப்புழையிலிருந்து கிழக்கே கால்வாய் மார்க்கமாய் 16-மைலில் இருக்கிறது

## 68-திருவாட்டாறு.

ப்ரபாவம்-ஆதிகேசவப்பெருமாள், மரகதவல்லிநாச்சியார், அஷ்டாங்கவிமாநம், கடல்வாய் தீர்த்தம், ராமதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம். பரசுராமனுக்கும் சந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-(60) திருவண்பரிசாரத்திலிருந்து தென்மேற்கே 2-மைலிலிருக்கும் நாகர்கோயிலை அடைந்து பின்னும் வடமேற்கே கற்சாலைமார்க்கமாய் 10-மைலிலுள்ள தக்கலையை அடைந்து வடக்கேதிரும்பி 6-மைல் தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம். திருவனந்தபுரத்திலிருந்து தென்கிழக்காய் கற்சாலைமார்க்கத்தில்

24-மைலிலுள்ள மார்த்தாண்டத்தை அடைந்து வடக்கே திரும்பி 4-மைல்தூரம்சென்றால் இத்தலத்தையடையலாம். வண்டிகள் உண்டு. திருவநந்தபுரத்திலிருந்தும் நாகர் கோயிலிலிருந்தும் மோட்டோர்வண்டிகள் உண்டு. சத்திரங்கள் இருக்கின்றன.

## 69-வித்துவக்கோடு.

ப்ரபாவம்-உய்யவந்தபெருமாள், வித்துவக்கோட்டுவல்லி, தத்வகாஞ்சனவிமாநம், சக்ரதீர்த்தம், தெற்கேதிருமுகமண்டலம், புஜங்க சயநம், அம்பரீஷனுக்கு ப்ரத்யக்ஷம். குலசேகராழ்வார் மங்களாஸாசநம்.

மார்கமும் வசதிகளும்-ஷொரனூர் எர்ணாகுளம் பாதையிலுள்ள இடப்பள்ளி ஸ்டேஷனுக்கு கிழக்கில் 2-மையிலிலுள்ள (61) திருக்காட்கரையை அடைந்து பின்னும்தென்கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 8-மைல் தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம். எர்ணாகுளம் ஸ்டேஷனுக்கு தென்கிழக்கே 7-மைலில் உள்ள திருப்பூந்துறையை அடைந்து கிழக்கே கற்சாலை மார்க்கமாய் 8-மைல் தூரம்சென்றால் இத்தலத்தை அடையலாம், வண்டிகள் உண்டு. சத்திரமிருக்கிறது.

## 70-திருக்கடித்தானம்.

ப்ரபாவம்-அற்புதநாராயணன், கற்பகவல்லித்தாயார், புண்ணியகோடிவிமாநம், பூமிதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம் ருக்மாங்கதமகாராசனுக்கு ப்ரத்யக்ஷம், நம்மாழ்வார்மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது (66) திருவல்லவாழுக்கு வடக்கே கற்சாலைமார்க்கமாய் 3-மைலில் இருக்கிறது. திருவல்லவாழ் மார்க்கத்தைப்பார்க்கவும். சத்திரமிருக்கிறது.

## 71-திருவாறன்விளை. (ஆரம்முளை)

ப்ரபாவம்-திருக்குறளப்பன், பத்மாஸநநச்சியார், வாமநவிமாநம், வேதவ்யாஸஸரஸ்ஸு, கல்லாறு, வடக்கே திருமுகமண்டலம் நின்றதிருக்கோலம், ப்ரஹ்மாவுக்கு ப்ரதயக்ஷம். நம்மாழ்வார்மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது (64) திருச்செங்குன்றூருக்கு கிழக்கே கெனால்மார்க்கமாய் 4-மைலில் இருக்கிறது.

மலைநாட்டுத்திருப்பதிகள் முற்றுப்பெற்றன.

## நடுநாட்டுத்திருப்பதிகள் உ

### 72-திருவயிந்திரபுரம்.

ப்ரபாவம்—தெய்வநாயகப்பெருமாள், வைகுண்டநாயகி, சந்திர விமானம், கெருடநதி, ஸேவைதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம் நின்ற திருக்கோலம், சந்திரனுக்கும், கெருடனுக்கும் ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்—(Cudalur O. T.) திருப்பாபுலியூர் ஸ்டேஷனுக்கு மேற்கில் கற்சாலைமார்க்கமாய் 3-மைலில் இருக்கிறது. திருப்பாபுலியூரில் 2-சத்திரங்களும் 6-ஹோடல்களுமிருக்கின்றன. வண்டிகளுமுண்டு.

### 73-திருக்கோவலூர்.

ப்ரபாவம்—திருவிக்கிரமன், ஆயனார், பூங்கோவல் நாச்சியார், ஸ்ரீகரவிமானம், க்ருஷ்ணதீர்த்தம், கிழககேதிருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், மிருகண்டுமுனிக்கும் பலிசக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்—இது திருக்கோவலூர் ஸ்டேஷனுக்கு தென்மேற்கே 2-மைலில் பெண்ணையாற்றின் தென்கரையில் இருக்கிறது. மழைகாலங்களில் ஆற்றைப்பரிசலால்கடக்கவேண்டும். மாட்டு வண்டிகளுண்டு. 1-சத்திரமும், 4-ஹோடல்களுமிருக்கின்றன. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

நடுநாட்டுத்திருப்பதிகள் முற்றுப்பெற்றன

---

## தொண்டைநாட்டுத் திருப்பதிகள். உஉ

### 74-அத்திகிரி-காஞ்சீபுரம்.

ப்ரபாவம்—வரதராஜப்பெருமாள், பெருந்தேவித்தாயார், அத்திகிரி, புண்ணியகோடிவிமானம், ஸத்யவ்ரதக்ஷேத்ரம், அநந்தஸ்ரஸ்ஸு, சேஷதீர்த்தம், வராஹதீர்த்தம், ப்ரஹமதீர்த்தம், பத்மதீர்த்தம், அக்நிதீர்த்தம், குசலதீர்த்தம், வேகவதிநதி, மேற்கேதிருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பிருகுமகரிஷிக்கும், நாரதருக்கும் திருவநந்தாழ்வானுக்கும், கஜேந்த்ராழ்வானுக்கும், ப்ரஹ்மாவுக்கும் ப்ரத்யக்ஷம்.

அழகியசிங்கப்பெருமாள், அரிச்ராதேவித்தாயார், வாரணகிரி குகவிமாநம், மேற்கே திருமுகமண்டலம விற்றிருந்த திருக்கோலம் ப்ருஹஸ்பதிக்குப்ரத்யக்ஷம், பூதத்தாழ்வார் மங்களாஸாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—காஞ்சீபுரம் ஸ்டேஷனுக்கு தெற்கே 2-மைலில் இருக்கிறது. வண்டிகள் உண்டு, 10-சத்திரங்களும், 6-ஹோடல்களுமிருக்கின்றன.

இக்காஞ்சீபுரம் விஷ்ணுகாஞ்சி, அல்லது சின்னகாஞ்சிபுரம் என்றும் சிவகாஞ்சி, அல்லது பெரியகாஞ்சீபுரம் என்றும் இரண்டு பிரிவுள்ள ஒரு பெரியபட்டணம். சின்னகாஞ்சீபுரத்தில் (74) அத்திகிரி, (82) திருவெஃகா (75) அஷ்டபுயம் (76) திருத்தண்கா (77) வேளுக்கை என்னும் ஐந்து திருப்பதிகளும் பெரியகாஞ்சீபுரத்தில் (81) ஊரகம், (79) நீரகம், (83) காரகம், (84) கார்வானம், (85) கள்வனூர், (78) பாடகம், (80) நிலாத்திங்கள் துண்டம், என்னும் ஒன்பது திருப்பதிகளும் இருக்கின்றன. இதற்கு மேற்கில் 7—மைலில் (88) திருப்புட்குழி இருக்கின்றது. பெரியகாஞ்சீபுரம், ஸ்டேஷனுக்கு மேற்கே 1-மைலில் இருக்கிறது. இங்கு 18 விஷ்ணு ஆலயங்களும், 23 தீர்த்தங்களும், 7-நதிகளும் முன்பு இருந்ததாக சொல்லுகிறார்கள்.

ஏகாம்பரேச்சுரர்கோயில் காமாக்ஷி அம்மன் கோயில் குமரகோட்டம் முதலான சிவஸ்தலங்களிருக்கின்றன. வேகவதியின் தென்கரையில் சமணர்கோயில் ஒன்று இருக்கிறது. இவைகளெல்லாம் பார்க்கத்தக்கவைகள்.

## 75-அட்டபுயகரம் (அஷ்டபுஜம்.)

ப்ரபாவம்—ஆதிகேசவப்பெருமாள், சக்ராதரர், அலர்மேல்மங்கை நாச்சியார், ககநாக்ர்திவிமாநம், கஜேந்த்ரபுஷ்கரணி, மேற்கேதிருமுக மண்டலம், நின்றதிருக்கோலம், கஜேந்த்ராழ்வானுக்கு ப்ரத்யக்ஷம், பேயாழ்வார் திருமங்கையாழ்வார், மங்களாசாஸனம்.

மார்க்கமும்-வசதிகளும்-இது சின்னகாஞ்சீபுரத்திலுள்ள மூன்றாவது திருப்பதி. தேப்பெருமாள் சந்நிதிக்கு மேற்கே ½-மைலிலிருக்கிறது. (82) திருவெஃகாவுக்கு தெற்கே ரோட்டுக்கு இடபுறத்திலிருக்கிறது.

## 76-திருத்தண்கா (விளக்கொளிகோவில்.)

ப்ரபாவம்—விளக்கொளிபெருமாள், தீபப்ரகாசர், திவ்யப்ரகாசர், மரகதவல்லித்தாயார், ஸ்ரீகரவிமாநம், ஸரஸ்வதிதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், ஸரஸ்வதிக்குப்ரத்யக்ஷம்,

திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். வேதாந்ததேசிகர் அவதரித்த தலம்.

மார்க்கமும் வசதிகளும்—இது சின்னகாஞ்சீபுரத்திலுள்ள நாலாவது திருப்பதி. அஷ்டபுஜம் கோயிலுக்குமேற்கே பட்சாலையில் $\frac{1}{4}$-மைலில் இருக்கிறது.

## 77-வேளுக்கை.

ப்ரபாவம்—முகுந்தநாயகன், வேளுக்கைவல்லிநாச்சியார், கநகவிமாநம், கநகஸரஸ்ஸு, கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பிருகுமகரிஷிக்குப்ரத்யக்ஷம், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இதுசின்னகாஞ்சியிலுள்ள 5-வதுதிருப்பதி. இது (76)விளக்கொளிகோயிலுக்குதெற்கே$\frac{1}{2}$-மைலில்இருக்கிறது. குறிப்பு—இந்தச்சந்நிதிவெள்ளத்தில் முழுகிப்போனதாக சொல்லுகிறார்கள். வேளுக்கபட்டரை என்னுமிடத்தில் ஒருவரியின் மத்தியில் மூலவர்விக்ரகம் ஒன்றுமாத்திரம் இருக்கின்றது. இவ்விடத்திலேயே நரசிம்மன் ஸந்நிதி ஒன்று இருக்கிறது "மன்னுமதிட்கச்சி வேளுக்கையாளரியை" எனனும் திருமங்கைமன்னன் பாசுரத்தின் படிவேளுக்கை திவ்யதேசம் இதுவே என்று சொல்லுகிறார்கள். (இந்தச்சந்நிதி பிரபாவத்தை புராணஸ்தலங்களில் காண்க)

## 78-பாடகம். (பாண்டவ தூதர்சந்நிதி)

பரபாவம்-பாண்டவதூதர், ருக்மணிதேவி, ஸத்யபாமை, பத்ரவிமாநம், மத்ஸ்யதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், ஜனமேஜயமகாராஜனுக்கும் ஹரீதமகாமுனிக்கும் ப்ரத்யக்ஷம், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பெரியகாஞ்சீபுரத்திலுள்ள 6-வது திருப்பதி. இது ஏகாம்பரரேசுவரர் சந்நிதித்தெருவில் சற்றுமேற்கே விலகியிருக்கிறது.

## 79-நீரகம்.

ப்ரபாவம்—ஜகதீசப்பெருமாள், நிலமங்கைவல்லி நாச்சியார், ஜகதீச்வரவிமாநம், அக்ரூரதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அக்ரூரமகாமுநிக்குப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் விசதிகளும்-இது பெரியகஞ்சீபுரத்திலுள்ள 2-வது திருப்பதி. இந்த சந்நிதி லுப்தமாய் இப்போது உலகளந்தபெருமாள் சந்நிதியில் இருக்கிறது.

## 80-நிலாத்திங்கள்துண்டம்.

ப்ரபாவம்-நிலாத்திங்கள் துண்டத்தான், நேரொருவரில்லாவல்லி புருஷசூக்தவிமாநம், சந்திரபுஷ்கரணி, மேற்கேதிருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், சிவனுக்கும் பார்வதிக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது பெரியகாஞ்சியிலுள்ள 7-வது சந்நிதி. இந்தச்சந்நிதி லுத்தமாய் ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் முதற்பிரகாரத்திலிருக்கிறது.

## 81-ஊரகம். (உலகளந்தபெருமாள்கோயில்.)

ப்ரபாவம்-உலகளந்தபெருமாள், திருவிக்கிரமன், அமுகவல்லி நாச்சியார், ஸாரஸ்ரீகரவிமாநம். நாகதீர்த்தம், மேற்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், உரகமென்கிற ஆதிசேஷனுக்குப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது பெரியகாஞ்சீபுரத்திலுள்ள முதலாவது சந்நிதி. காமாக்ஷியம்மன் கோயிலுக்கு மேற்புறத்திலிருக்கிறது. இச்சந்நிதியிலேயே (79) நீரகம் (83)காரகம் (84) கார்வாநம் சந்நிதிகள் இருக்கின்றன.

## 82-திருவெஃகா. (யதோத்காரிசந்நிதி.)

ப்ரபாவம்-சொன்னவண்ணஞ்செய்த பெருமாள் (யதோத்காரி) கோமளவல்லிநாச்சியார், வேதசாரவிமாநம், பொய்கைபுஷ்கரணி மேற்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம், பொய்கையாழ்வாருக்கும் கணிகண்ணருக்கும், ஸரஸ்வதிக்கும் ப்ரஹ்மாவுக்கும் ப்ரத்யக்ஷம். பொய்கையாழ்வார்பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். பொய்கையாழ்வார் அவதரித்ததலம்.

மார்க்கமும் வசதிகளும்-இது சின்னகாஞ்சீபுரத்திலுள்ள 2-வது திருப்பதி. வரதராஜப்பெருமாள் சந்நிதிக்கு மேற்கே $\frac{3}{4}$-மைலில் ரோட்டுக்கு வடபுறத்திலிருக்கிறது.

## 83-காரகம்

ப்ரபாவம்-கருணாகரப்பெருமாள், பத்மாமணிநாச்சியார், வாமநவிமாநம், அக்கிராயதீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், கார்ஹரிஷிக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும்வசதிகளும்—இது பெரியகாஞ்சிபுரத்திலுள்ள மூன்றுவது திருப்பதி. இதசந்நிதிலுப்தமாய் உலகளந்தபெருமாள் ஸந்நிதியிலிருக்கிறது.

## 84-கார்வானம்.

ப்ரபாவம்—கள்வர், கமலவல்லிநாச்சியார், புஷ்கலவிமாநம், கௌரிதடாகம், மேற்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பார்வதிக்குப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பெரியகாஞ்சிபுரத்திலுள்ள நான்காவதுதிருப்பதி. இந்தச்சந்நிதிலுத்தமாய் உலகளந்தபெருமாள்கோயிலில் வைக்கப்பட்டிருக்கிறது. (இப்போது விளக்கொளிகோயிலுக்கு சமீபத்தில் ஒருபஜனைகோயில் போல் கட்டப்பட்டு அங்குவிக்கிரகங்களை எழுந்தருளப்பண்ணி ஆராதித்து வருகிறார்கள்.)

## 85-திருக்கள்வனூர்.

ப்ரபாவம்—ஆதிவராஹப்பெருமாள், அஞ்சிலைவல்லிநாச்சியார் வாமநவிமாநம், நித்யபுஷ்கரணி, மேற்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், அச்வத்தநாராயணனுக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பெரியகாஞ்சிபுரத்திலுள்ள ஐந்தாவது திருப்பதி. இந்தஸந்நிதிலுத்தமாய்க் காமாக்ஷியம்மன் கோயிலிலிருக்கிறது. இக்கோயில் குளத்தின் ஈசான்ய மூலையில் நின்றான், இருந்தான், கிடந்தான் என்கிறசந்நிதி ஒன்றும் இருக்கின்றது. இதைப்பார்க்கவிரும்புவோர் இருட்டில்படி கட்டின்மேல் ஏறவேண்டி இருப்பதால் பகலில் சாக்கிரதையாய்ப் போகவேண்டும்.

## 86-பவளவண்ணம் (பவழவண்ணர் சந்நிதி)

ப்ரபாவம்—பவளவண்ணப்பெருமாள், பவளவல்லிநாச்சியார், ப்ரவாளவிமாநம், சக்ரதீர்த்தம், மேற்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், அசுவனிதேவதைகளுக்கும், பார்வதிக்கும் ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பெரியகாஞ்சிபுரத்திலுள்ள எட்டாவது திருப்பதி. ஏகாம்பரேசுவரர் கோவிலுக்கு கிழக்கே ½ மைலிலும் காமாக்ஷியம்மன் கோயிலுக்குவடக்கே ½-மைலிலும் இருக்கின்றது. இந்தச்சந்நிதிக்கு மேற்கில் பச்சைவண்ணர் சந்நிதியிருக்கிருக்கிறது.

## 87-பரமேச்சுரவிண்ணகரம். (வைகுண்டபெருமாள் கோயில்.)

ப்ரபாவம்—பரமபதநாதன், வைகுந்தவல்லிநாச்சியார், முகுந்தவிமாநம், அயிரமதீர்த்தம், மேற்கேதிருமுகமண்டலம், வீற்றிருந்த

திருக்கோலம், பல்லவராயனுக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பெரிய காஞ்சீபுரத்திலுள்ள ஒன்பதாவது திருப்பதி. இது காஞ்சீபுரம் ஸ்டேஷனுக்கு சமீபத்தில் இருக்கிறது. இத்துடன் பெரிய காஞ்சீபுரத்திலுள்ள ஒன்பது திருப்பதிகள் முடிந்தன. கடைசியான திருப்புட்குழி இதற்கு மேற்கே கற்சாலை மார்க்கமாய் 7-மைலிலிருக்கிறது. மங்களாசாஸனமில்லாத மற்ற ஸ்தலங்கள் புராணஸ்தலங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## 88-திருப்புட்குழி.

ப்ரபாவம்—விஜயராகவப்பெருமாள், மரகதவல்லிநாச்சியார், விஜயகோடிவிமாநம், ஜடாயுதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், ஜடாயுவுக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பெரிய காஞ்சீபுரத்திற்கு மேற்கே கற்சாலை மார்க்கமாய் 7-மைலில் இருக்கிறது. சத்திரமிருக்கிறது. ஹோட்டலில்லை. சந்நிதியிலும் பிரசாதம் கஷ்டம்.

## 89-திருநின்றவூர்—(தின்னனூர்.)

ப்ரபாவம்—பக்தவத்ஸலர், பத்தராவிப்பெருமாள், என்னைபெற்றதாயார், ஸ்ரீநிவாஸவிமாநம், வருணபுஷ்கரணி, வ்ருத்தக்ஷீரநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், வருணனுக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்-இது M. S. M. R. தின்னனூர்ஸ்டேஷனுக்குதெற்கே கற்சாலைமார்க்கமாய் 1-மைலில் இருக்கிறது. சத்திரம் உண்டு. ஹோட்டல் கிடையாது. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 90-திருவெவ்வுள்-(திருவள்ளூர்.)

ப்ரபாவம்-வீக்ஷாரண்யக்ஷேத்ரம், வீரராகவப்பெருமாள், கநகவல்லித்தாயார், விஜயகோடிவிமாநம், ஹ்ருதாபநாசதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம், ஈசாரண்யம், சாலிஹோத்ருக்கு ப்ரத்யக்ஷம், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும் இது M. S. M. R. திருவள்ளூர்ஸ்டேஷனுக்கு வடக்கே கற்சாலைமார்க்கமாய் 2-மைலில் இருக்கிறது. 4-சத்திரங்களும், 3-ஹோட்டல்களுமுண்டு. டிராம் வண்டியும் ஜட்கா வண்டிகளும் உண்டு.

## 91-திருநீர்மலை.

ப்ரபாவம் – அரங்கநாதன், நீலமுகில் வண்ணன், நீர்வண்ணன், அணிமாமலர்மங்கைநாச்சியார், தோயகிரிவிமானம், மணிகர்ணிக தீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், மாணிக்கசயநம், தொண்டைமான் சக்ரவர்த்திக்கும்,ப்ருகுமார்க்கண்டேயருக்கும்ப்ரத்யக்ஷம்,பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்–இது S. I. R. பல்லாவரம் ஸ்டேஷனுக்கு மேற்கே கற்சாலைமார்க்கமாய் 3-மைலிலிருக்கிறது. 200-அடி உயரமுள்ள ஒருசிறிய குன்று மிசை ரங்கநாதன் எழுந்தருளியிருக்கிறார். கிராமம்சிறியது. பண்டிகள் உண்டு. சத்திரமிருக்கிறது. ஹோடலில்லை. சந்நிதியில் பிரசாதம் கஷ்டம். பல்லாவரத்தில் சத்திரமும் ஹோடலுமிருக்கின்றன.

## 92-திருவிடவெந்தை.(திருவிடந்தை)

ப்ரபாவம்–நித்யகல்யாணர், கோமளவல்லி நாச்சியார், கல்யாணவிமானம், கல்யாணதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம். மார்க்கண்டேயருக்கு ப்ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும் – வண்டலூர் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 16-மைலிலுள்ள கோவளத்தை அடைந்து தெற்கே திரும்பி கற்றல் மார்க்கமாய் 2-மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். மஹாபலி புரத்திற்கு வடக்கே 6-மைலிலிருக்கிறது. வெகுசிறிய கிராமம் சத்திரமில்லை ஹோடலில்லை. சந்நிதியிலும் பிரசாதம்கஷ்டம்.

## 93-திருக்கடல்மல்லை. (மாவலிபுரம்.)

ப்ரபாவம்-தலசயநத்துறைவார், நிலமங்கைநாச்சியார், ககநாக்ருதி விமானம், கருடநதி. கிழக்கேதிருமுகமண்டலம், புஜங்கசயநம், புண்டரீகரிஷிக்கு ப்ரத்யக்ஷம், பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார்மங்களாசாஸநம் பூதத்தாழ்வார் அவதாரஸ்தலம்

மார்க்கமும் வசதிகளும் செங்கற்பட்டு ஸ்டேஷனுக்கு தென்கிழக்கே 9-மைலிலிருக்கும் திருக்கழுக்குன்றத்தை அடைந்து பின்னும் கிழக்காக கற்சாலை மார்க்கமாய் 9-மைல்தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

இது கடலோரத்திலுள்ள தொருஸ்தலம். சிறியகிராமம் சத்திரமும் ஹோடலுமில்லை. சந்நிதியிலும் பிரசாதம்கஷ்டம் சென்னையிலிருந்து மயிலாப்பூர் மார்க்கமாய் பார்ப்பான்சாவடியை அடைந்து படகேறி கெனல்மார்க்கமாயும் போகலாம். பட்டிணத்திலிருந்து மஹாபலிபுரம் 35-மைலிலிருக்கிறது.

## 94-திருவல்லிக்கேணி.

ப்ரபாவம்-ப்ருந்தாரண்யக்ஷேத்ரம். பார்த்தஸாரதி, ருக்மணி பிராட்டி, அநிருத்தர், ப்ரத்யும்நர், பலராமர், ஸாத்யகி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், வ்யாஸமஹர்ஷியினால் ப்ரதிஷ்டிக்கப்பட்டு ஆத்ரேயமஹர்ஷியினால் ஆராதிக்கப்பட்டவர், ஸுமதியென்னும் ராஜாவுக்கும் தொண்டைமான்சக்ரவர்த்திக்கும், அர்ச்சுநனுக்கும் ப்ரத்யக்ஷம்.

மந்நாதன் (ரங்கநாதன்) வேதவல்லித்தாயார், புஜங்கசயநம், கிழக்கே திருமுகமண்டலம், ப்ருகுமஹர்ஷியினால் கன்னிகாதானம் பண்ணப்பெற்றவர்.

தெள்ளியசிங்கர் (நரஸிம்மர்) மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அத்ரிமஹர்ஷிக்கும் ஜாலிமஹர்ஷிக்கும் ப்ரத்யக்ஷமாய் மோக்ஷம் தந்தவர்.

சக்ரவர்த்திதிருமகன். ஸ்ரீராமர், பரதாழ்வான், சத்ருக்னாழ்வான் லக்ஷ்மணர், மைதிலி, தெற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம் சுசபதர்குமாரரான மதுமானென்னும் மஹர்ஷிக்குப்ரத்யக்ஷம்.

தேவப்பெருமாள். கருடாரூடர், சேஷவிமாநம், கிழக்கே திருமுகமண்டலம், ஸப்தரோமாவுக்குப்ரத்யக்ஷம், இந்திரதீர்த்தம், ஸோமதீர்த்தம், மீநதீர்த்தம், அக்நிதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், இவ்வைந்து தீர்த்தங்களால்சூழப்பட்ட கைரவணியென்னும ஸரஸ்ஸு. ப்ருகு, அத்ரி, மரீசி, மார்க்கண்டேயர், ஸுமதி, சப்தரோமா, ஜாலியென்னும் ஏழு மஹர்ஷிகள் தவம்புரிந்தவிடம். பேயாழ்வார், திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

மார்க்கமும்வசதிகளும்—இது Madras சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்துதெற்கே 3-மையிலிலும் எழும்பூர்ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 3-மைலிலும் இருக்கிறது.

சென்னைப்பட்டணம் இந்த இராஜதானிக்கு முக்கியபட்டணம். ஆகையால் எல்லா சௌகரியங்களும் உண்டு. அவசியம் பார்க்கத்தகுந்த விநோதமான பெரிய பட்டினம்.

## 95-திருக்கடிகை (சோளசிங்கபுரம்.)

ப்ரபாவம்-யோகாநரசிம்ஹர், அம்ருதவல்லி நாச்சியார், சிங்ககோஷ்டத்திவிமாநம், அம்ருததீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், சிறியதிருவடிக்கு ப்ரத்யக்ஷம், தக்கன் அக்காரக்கனிப்பெருமாள், தக்கான்குளம், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாஸநம்.

மார்க்கமும்-வசதிகளும்-இது Madras க்கு வடமேற்கே 40-மைலிலுள்ள சோளங்கிபுரம் ஸ்டேஷனுக்கு வடமேற்கே கற்சாலைமார்க்கமாய் 8-மைலில்இருக்கிறது. சத்திரங்களும் ஹோடல்களும, வண்டிகளும் உண்டு.

320-அடி உயரமுள்ள ஒருகுன்றின் மிசை நரஸிம்ஹஸ்வாமியும் 200-அடியுயரமுள்ள குன்றின்மிசை ஆஞ்சநேயஸ்வாமியும் விற்றிருக்கின்றனர் இது ஒரு சிறிய பட்டணம். ஊருக்குள்ளிருக்கும் சந்நிதியில் ஆதிகேசவப்பெருமாளும் உத்ஸவரும எழுந்தருளியிருக்கின்றனர். ஊருக்கும் மலையடிவாரத்திற்கும் 1½-மைல்.

தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
முற்றுப்பெற்றன.

---

## வடநாட்டுத் திருப்பதிகள். (கஉ)

### 96-திருவேங்கடம். (திருப்பதி)

ப்ரபாவம்—திருவேங்கடத்தான், ஸ்ரீநிவாசன், அலர்மேல்மங்கைத்தாயார், ஆநந்தநிலயவிமாநம், சேஷாசலம், ஸ்வாமிபுஷ்கரணி, கோனேரிதீர்த்தம், கிழக்கேதிருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், தொண்டைமான்சக்ரவர்த்திக்கும்ஆநந்தமுகனுக்கும் ப்ரத்யக்ஷம். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள்மங்களாசாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்—இது ரேணுகொண்டா ஸ்டேஷனுக்கு மேற்கே 6-மைலிலுள்ள திருப்பதிஸ்டேஷனுக்கு வடக்கே ½-மைலில் இருக்கிறது. பட்டணத்திற்கும் மலையடிவாரத்திற்கும் 1-மைல்தூரம் மலைமிசையிருக்கும் திருப்பதி அடிவாரத்திலிருந்து 6-மைல் தூரத்திலிருக்கிறது. இந்தத் தலம் கீழ்த்திருப்பதி மேல்திருப்பதி என்று இரண்டுபிரிவுள்ள ஒருபெரியபட்டணம். கீழ்திருப்பதியில் கோவிந்தராஜன்சந்நிதி ஸ்ரீராமன்சந்நிதி முதலியசந்நிதிகளும் ஆழ்வார்தீர்த்தம் நரஸிம்மதீர்த்தம் ராமதீர்த்தம் முதலியதீர்த்தங்களும் சிலமடங்களும் பலசத்திரங்களும் கடைவீதிகளும் ஹோடல்களும் இருக்கின்றன. வண்டிகளுண்டு. மேல்திருப்பதியில் சத்திரங்களும் ராமாநுஜகூடமுமிருக்கின்றன. ஹோடலில்லை. சந்நிதியில் பிரசாதம்விசேஷம். மலை ஏறுவதற்கு டோலிகள், கூலிகள்முதலிய சகலசௌகரியங்களுமுண்டு. ஆங்காங்குத் தங்குவதற்கு மண்டபங்களும் தண்ணீர்ப் பந்தல்களுமிருக்கின்றன.

# திருப்பதிஸ்தல விமர்சம்.

புராணப்ரசித்தங்களாய் வேங்கடாத்திரி, அஞ்சனாத்திரி, தர்மாத்திரி, சேஷாத்திரி, சிம்மாத்திரி, நாராயணாத்திரி, ஸ்ரீநிவாசாத்திரி, ரிஷபாத்திரி, கருடாசலம், ஸ்ரீசைலம், சிந்தாமணிகிரி, என்றித்யாதி திவ்ய திருநாமங்களையுடையதாயும், பரமபதநாதனுக்கு வாசஸ்தானமாயும் விளங்கும் இந்தத்திருப்பதியைச் சுப்பிரமணியஸ்தலமென்றும், உடையவர்பாம்பு உருவாகிக் கோமுகவழியாகச்சென்று ஸ்வாமிக்குச் சங்காழிகளையளித்து வைஷ்ணவஸ்தல மாக்கினாரென்றும் சிலர்சொல்லுகிறார்கள். ஆனால் வைதிக சமயத்தோர் யாவரும் அப்படிச் சொல்லுவதில்லை.

1-அஷ்டாதசபுராணங்களில் பத்துபுராணத்துள் நூற்றைம்பத்தாறு அத்தியாயங்களில் ஸ்ரீமந் நாராயணனது லீலாவிஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்காந்தபுராணத்துள்மட்டும் முப்பதுஅத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

2-ஸ்ரீமத் உடையவர் அவதரித்தகாலம் இற்றைக்கு 897-வருஷங்களேயாகின்றன. இவருக்குமுன் துவாபரயுகத்தில்அவதரித்தமுதலாழ்வார்களும், கலிபிறந்து 43-வது நாளில் அவதரித்த நம்சடகோபரும் எல்லா ஆழ்வார்களுக்கும் கடைசியாய் அவதரித்தவரும் சைவஸமயகுரவரான சம்பந்தப்பிள்ளையாருக்குச் சமகாலத்தவரும், எம்பெருமானார் காலத்திற்குச்சுமார் 3000-வருஷங்களுக்குமுன்னால் அவதரித்தவருமாகிய, வீறுடைய நம்மங்கையர்கோனும் மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள். இவர்களால் பாடல்பெற்றுள்ள விஷ்ணுஸ்தலத்தைச் சிவஸ்தலமென்று சொல்வது யாதுகாரணமோ அறிகிலோம்.

3-திருவேங்கடம் வைஷ்ணவஸ்மார்த்தமதஸ்தர்களுக்கு முக்கியஸ்தலமாவதுமன்றி மாத்துவர்களுக்கும் முக்கியஸ்தலங்களாகிய எட்டில் அதுஒன்று. அவையாவன, ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், வெங்கடாத்திரி, தோத்தாத்திரி, நைமிசம், புஷ்கரம், சாளக்ராமம் வதரியாச்சிரமம். இவ்வெட்டும் விஷ்ணுஸ்தலங்களேயாம். இந்த அஷ்டஸ்வயம்புஸ்தலங்களில் ஒன்றாகிய இவ்வேங்கடாத்திரியைச் சிவஸ்தல மென்பது அடாது.

4-மேலும் ஸ்ரீபரசுராமருக்குத் திருத்தம்பியார் திரணதூமாக்கினி யென்பவர் அருளிச்செய்த தொல்காப்பியத்துக்கு, உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரை யெழுதியபோது "வடவேங்கடந் தென்குமரி" என்றமுதற்சூத்திரத்துக்கு "நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி யுலகந்தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும் எல்லாரும் அறியப்படுதலானும் வடவேங்கடத்தை எல்லையாகக்கூறினர்" என்று அறுதியிட்டனர்.

தைத்திரியம், பௌடிகம், தல்வாகாரம், சாமம் என்று பெயர் பெற்றிருந்த வேதத்தை, வேதவியாஸ பகவான் பரமகிருபையாலே சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறுசெய்து, இருக்கு, எசு, சாமம் அதர்வணம் என்று சொல்லுவதற்கு முன்னமே தொல்காப்பியம்செய்யப்பட்டது. இதனை தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்துள் காண்க.

5. அன்றியும், புறச்சமயத்தார் செய்த பஞ்சகாவியத்துள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்று தமிழுக்கு எல்லை கூறுதலுமன்றி, "வீங்குநீரருவி வேங்கடமென்னும், ஓங்குயர்மலையத் துச்சிமீமிசை, விரிகதிர்ஞாயிறுந் திங்களும்விளங்கி, இருமருங்கோங்கியவிடைநிலைத்தானத்து, மின்னுக்கொடியுடுத்துவிளங்குவிற்பூண்டு, நன்னிறமேகநின்றதுபோலப், பகையணங்காழியும்பால்வெண்சங்கமும், தகைபெறுதாமரைக்கையிலேந்தி, நலங்கிளராரமார்பிற்பூண்டு, பொலம்பூவாடையிற் பொலிந்துதோன்றிய, செங்கணெடியோனின்றவண்ணமும்." என்று அத்திருமலைமிசை எழுந்தருளியிருக்கும் பரமனது படிகளை அதிக அழகாய் வருணித்திருப்பதையும் கண்டிலரோ? இதனை ஆராயது குமான்குன்றுதோறாடலில் ஒன்று என்று சாதிப்பது நன்றன்று.

6. இதுநிற்க, சௌரிகடாக்ஷம்பெற்ற காளமேகப்புலவர் தசாவதாரங்களையும் ஒரு வெண்பாவில் அடக்கிப்பாடுகையில், "மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற்பாதியிலென், இச்சையிலுன்சென்மமெடுக்கவா-மச்சாகூர் மாகோலாசிங்காவாமாராமாராமாரா மாகோபாலாமாவாவாய்." என்றுகூறியிருக்கின்றனர். சைவஎல்லப்பநாவலர் அருணாசலபுராணத்தில் "விருப்படியார்சொரிந்தவறுகலருடனேவிழியிடந்த வேடர்காலிற், செருப்படியுமுகந்தபிரான் காளத்திநகரமெனுந்தெய்வ பூமி, பருப்பதமாகியும்விளங்குந்தண்ணறுக் கொழிக்குமலர்ப்பதுமையோடு, மருப்படியுந்துழாய்மார்பன் வடமலைமேலிருந்துகண்டுவணக்கு மாதோ." என்று சொல்லி யிருக்கின்றனர். சைவசித்தாந்தியாகிய துறைமங்கலம் சிவப்பிரகாசர் காளத்தி புராணத்தில் "அரவணைச்செல்வன்வாழுமந்தமிழ்நிலத்தினெல்லைத், திருமலைகண்டுகொண்டோர்செறிவினைத்தொடராக்கும், பெருவரைகண்டிறைஞ்சிபிறங்குவெள்ளருவிதாழும், பொருவருமேமகூடப்பொருப்பினையினிதுகண்டான். என்றுசொல்லியிருக்கின்றனர். ஆதி சைவராகிய கச்சியப்ப சிவாச்சாரியர் கந்தபுராணத்தில் "அண்டமன்னுயுரீன்றவளுடன்முனிவாகித். தொண்டகங்கெழுசுவாமிதன்மால்வரை துறந்து, மண்டுபாதலத்தேகியேயோர் குகைவழியே, பண்டுதான்வருவேங்கடகிரியையும்பார்த்தான்." என்று கூறியிருக்கின்றனர். குமரன் குன்றுதோறாடல் அசுரவதாநந்தரம் நிகழ்ந்தது முன்னல்லவென்பதை இப்பாட்டாலறிக. இந்தப்பிரமாணங்களைக் கொண்டாவது வேங்கடத்தை விஷ்ணுக்ஷேத்திரமென்றே கொள்ளக்கடவர்.

7- ஆனால் 450-வருஷங்களுக்குமுன் இருந்த அருணகிரிநாதர் திருப்
புகழில் பாடியதற்குப் பரிகாரமென்? என்றால், "ஆனைமுகனையானுந்
திருமகனே, சேனையர்கோனுகவளஞ்செய்வோனே" என்று அருண
சலக்கவிராயர் சொல்லிய வண்ணம் அரங்கக்ஷேத்திரபாலகன் ஐங்கர
னானதுபோல் அரவக்கிரிக்கு அறுமுகன் க்ஷேத்திரபாலகனாயினான்
என்றுணரக்கடவர் "கந்தன்வேங்கடக்காவலியற்றிடப், செந்தனோன்
பியற்றிப்பெற்றனனென்னுஞ் சிந்தைசெய்துழுச்சிந்திச்சென்றோடா
றும், வந்தித்தேத்தித்திவணங்குவர்மாசுரே." என்று திருவேங்கடமான்
மியங்கூறும். "வந்திக்கவந்தனைகொள்ளென்று கந்தனுமாதவரும், சிந்
திக்கவந்தனைவேங்கடநாதபல்சீவன்றின்னும், உந்திக்கவந்தனைச் செற்
றுயுனக்குரித்தாயபின்னுமா, புந்திக்கவந்தனைச் செய்கைவர்வேட்கை
பொருமென்னையே." என்று திருவேங்கடத்தந்தாதியில் திவ்வியகவி
பிள்ளைப்பெருமாள் அய்யங்காரும் அருளிச்செய்தனர்.

திருவேங்கட க்ஷேத்திர பாலகன் சுப்பிரமண்ணியனாகையால்
அவரைத் துதித்திருக்கிறார். என்று உணரக்கடவோம்.

8-அங்ஙனமாயின் ஸ்ரீமத் உடையவர்காலத்தில் உத்தரித்ததாகச்
சொல்லுவதற்குக்காரணமென்? என்னில் ஸ்ரீநிவாசனிடமிருந்த பக்தி
யுடையவனாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு விரோதிநிரஸ
னார்த்தமாக நேமிசங்கங்களைக்கொடுத்தருளிய சமயத்துதான், ஆஸ்ரி
தரக்ஷணார்த்தமாய் எப்போதும் கைகழலா நேமியானுகையால் கை
விடப்போகாத ஆழ்வார்களையும் கையிழந்திருப்பவன் காணீரென்று
அவர்களை இழந்துள்ள கோலத்தைக்காட்டியருளாநின்றிடும் காலத்
தில் வைஷ்ணவ சூசகமான சின்னமில்லாமையால் சைவர்கள் அப
கரித்துக்கொண்டார்கள். அக்காலத்தில் ஸ்ரீமத் உடையவர் அரசர்
நூல் வல்லார்கள் முன்னிலையில் நியாயபிரகாரத்தை நிரூபித்துச் சங்க
சக்கரங்களைக் கோவிந்தனுக்குக்கொடுத்தருளி முடிவுபெற்றுக் கொண்
டனரென்பார் மூதறிவாளர்.

9-ஸ்ரீமந்நாதமுனிகளது குலதிலகராகிய திருவரங்கப்பெருமாள
ரையர் திருவேங்கடஞ்சென்று ஸ்ரீநிவாஸப் பெருமானைப் பணிந்துப்
பண்ணிசைத்தாளத்தோடு சேவிக்கும்போது வேங்கடநாதன் திருவுள
முவந்து சிரக்கம்பஞ்செய்து பதின்மர்பாடிய பெருமானேஎன்றுபாடு
ம்போது கம்பம் செய்யாமலிருந்தனர். அதுகண்டு ஆரையர் இதுகா
றும் திருவுளமுவந்து சிரக்கம்பஞ்செய்தீர் இப்போது யாதுகுற்றங்
கண்டு அது செய்யாது ஒழிந்தீர். என்று தாளத்தால் திருமுடியில்
மோதப்புக பரமகருணாநிதி அப்பேற்றை சோழியன் கெடுத்தான்
(சோழியனென்றது தொண்டரடிப் பொடியாழ்வார். அவர் மங்களா
சாஸநம் செய்யாமையாலே வேங்கடநாதன் ஒன்பதின்மர்பாடிய பெரு
மானேயாவன். ஆழ்வார்கள் பதின்மரும் பாடிய பெருமான் அரங்க
நாதன் ஒருவனே யாவான்) யான் என்செய்கோ? என்று பக்தரைச்

சினம்போக்கியருளினான் என்னும் ஐதிஹ்யம்சான்றோர் செவிக்குஇன்னும் நல்விருந்தாயிராநின்றது.

10-பூர்வம் மகம்மேரு பர்வதத்தைக் கருடபகவான் எடுத்துக் கொண்டுபோகையில் அதில் ஒரு சிறுகுன்று தவறிவிழுந்ததாகவும் அந்தக்குன்றுதான் இந்தத்திருப்பதிமலையென்றும் கலியுகம் பிறப்பதற்கு 28-யுகங்களுக்குமுன் கங்காநதி தீரத்திலிருந்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தி இந்தமலைக்கு எழுந்தருளியதாக ஒரு சாஸனத்தில் காணப்பட்டாலும் வேறொரு சாஸனத்தில கிறிஸ்து பிறப்பதற்கு3100-வருஷங்களுக்கு முன் இந்த மலையின் கோயில் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. இக்கோயிலுக்கு மூன்று பிராகாரங்களிருக்கின்றன. முதல் பிராகாரம் பிரம்ஹாவினாலும், இரண்டாவது பிராகாரம் பரிக்ஷித்து மகாராஜாவினாலும் மூன்றும் பிராகாரம் ஜனமேஜய மகாராஜாவினாலும் கட்டப்பட்டு அநந்தரம் 600-வருஷங்கள் சென்றதின் மேல் விக்கிரமார்க்க மகாராஜனால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டதாம். பிறகு சோழராஜாக்களினாலும் புதுப்பிக்கப்பட்டு தொண்டைமான் சக்கரவர்த்தியின் காலத்தில் சிறந்தோங்கிவந்தது, என்று நார்த் ஆர்காட் டிஸ்டிரிக்ட் மானுயலிலும் மற்றொரு சரித்திர புஸ்தகத்திலும் காண்கிறது.

11. "உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேனினிப்போயொருவன் றனக்குப்பணிந்து கடைத்தலை நிற்கைநின் சாயையழிவு கண்டாய்." என்றுதேவதாந்தரபவனம் செல்லாதவர்களும் "திருவடிதன் நாமம் மறந்தும் புறந்தொழாமாந்தர்" ஆகையாலேதேவதாந்தரபஜனத்தை கனவிலும் காணாதவர்களுமாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிவக்ஷேத்திரத்தை விஷ்ணுக்ஷேத்திரமாக்கினாரென்பது அநுபபன்னம்.

தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்
ஆரு மறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே யெத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால.

சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத் தானும்
அடிக்கமல மிட்டேத்து மங்கு.

கிரந்த விஸ்தாரபயத்தினால் சுருக்கச்சொன்னோம். நமது விஷ்ணு க்ஷேத்திர யாத்திராநுகூலத்தில் பரக்கப்பகர்ந்துளோம் அதில்கண்டு கொள்ளலாகும்.

மயிலை-கொ-பட்டாபிராமன்.

## 97. சிங்கவேழ்குன்றம் (அஹோபிலம்).

பிரபாவம்.—நரசிம்மன், லட்சுமிநாச்சியார், குகை விமானம், இந்திரதீர்த்தம், நரசிம்மதீர்த்தம், பாபநாசதீர்த்தம், கஜதீர்த்தம், பார்க்கவதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், இரணியனை ஸம்ஹரித்து ப்ரஹ்லாதாழ்வாருக்கு அருள் செய்தவர். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

இந்த க்ஷேத்திரத்தில் நரசிம்மஸ்வாமி ஒன்பது மூர்த்தங்களாக எழுந்தருளியிருப்பதனால் இதை நவ நரசிம்மம் என்று சொல்லப்படுகிறது. 1-லட்சுமி நரசிம்மம் (கீழ் அஹோபிலம்) 2-சத்திராந்த நரசிம்மம், 3-யோகாநரசிம்மம் (இவைகள் தேரடியினின்றும் நெடுகப்போகும் சாலையில் $1\frac{1}{2}$-மைலிலிருக்கின்றன) 4-காரங்கி நரசிம்மம் (இது மேல் அஹோபிலம் செல்லும் பாதையிலிருப்பது) 5-உக்கிர நரசிம்மம் (மேல் அஹோபிலம்) 6-பார்க்கவ நரசிம்மம் (கருடாத்ரியிலிருப்பது) 7-பர்வதிரநரசிம்மம் (வேதாத்திரியிலிருப்பது) 8-வராக நரசிம்மம் 9-பிரஹ்லாத நரசிம்மம் (கந்தாத்ரியில் இருப்பன) அஹோபிலமலையைச் சுற்றி அநேக ஸந்நிதிகளும், தீர்த்தங்களும் இருக்கின்றன.

மார்க்கமும் வசதிகளும்.—கடப்பைக்கு மேற்கே 24-மைலிலுள்ள எர்ரகுண்டலா ஸ்டேஷனிலிறங்கி வடக்கே 8-மைல் தூரத்திலுள்ள ப்ரோதத்தூரையும், 18 - மைல் தூரத்திலிருக்கும் சாகல்மூர் என்னும் கிராமத்தையும் அடைந்து அங்கு நின்று பின்னும் 14-மைல் வடக்கே சென்றால் இத்தலத்தை அடையலாம். நந்தியால் ஸ்டேஷனிலிருந்தும் தெற்கே ருத்திராவரம் மார்க்கமாயும், 27 - மைலிலுள்ள இத்தலத்தை அடையலாம். வண்டிகள் கிடைக்கும். ஸந்நிதி தவிர வேறு வசதிகள் கிடையா. பெரிய ஊர் அல்லவாகையால் ஹோட்டல் முதலானவைகள் இல்லை. ஸந்நிதியிலும் பிரசாதம் அகப்படாது. ஜல சௌக்கியமில்லை.

## 98. அயோத்தி.

பிரபாவம்.—சக்கரவர்த்தித்திருமகன், ரகுநாயகன், சீதாபிராட்டி, புஷ்கலவிமானம், பரமபத ஸத்யபுஷ்கரணி, சரயுநதி, வடக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், பரதாழ்வானுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார்,

குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது காசிக்கு வடமேற்கே 128–மைலிலும், பிரயாகைக்கு வடக்கே 95-மைலிலுமுள்ள, O. R. Ry. அயோத்திஸ்டேஷனுககு தெற்கே 2-மைலில் சரயூநதியின் தீரத்தி லிருக்கிறது. Fyzabad பைசபாட் ஸ்டேஷனுக்கு வடக்கே 6-மைலி லிருக்கிறது. நாட்டுக்கோட்டையார் சத்திரமும், அநேக தர்மசாலை களும் இருக்கின்றன. வண்டிகளுண்டு.

குறிப்பு.—இங்கு அனுமான் ஸந்நிதி ஒன்று இருக்கிறது. வரப் பிரசாதி யாகையால் அநேகர்கள் பல தேசத்தரசர்களுக்காக இவர் ஸந்நிதியில் ராமாயண பாராயணம் பண்ணிக்கொண்டு இருக்கிறார் கள். யாத்திரைக்காரர் சரயூவில் தீர்த்தமாடி தீர்த்த சிராத்த முத லிய செய்து ஜனனஸ்தானத்தையும் வாயுபுத்திரரையும் சேவிப்பர். மாருதியை உருத்திராவதாரமென்பர். பிரமனிடத்திலும் வாயுவு னிடத்திலும், அனந்தனிடத்திலும் உதித்த உருத்திரருக்கு முறை யே வைகாரிக ருத்திரன் தைஜசருத்திரன் தாமத ருத்திரன் என்று பெயர். இங்ஙனம் ஸ்ரீவராகபுராணம் சாதுர்மாசிய மாஹாத்மியம் பதினைன்காம் அத்தியாயம் கூறும். மருதியினுள்தான் ஸ்ரீராமன் ஜனனஸதான மிருக்கிறது. நம்மூர் ஸ்வாமியான யோகி பார்த்த சாரதி ஐயங்கார் சரயூநதி தீரத்தில் நம்தேயத்து ஸந்நிதிபோல் ப்ரதக்காக ஒரு ஸந்நிதி கட்டியிருக்கிறார்.

## 99. நைமிசாரணியம்.

பிரபாவம்.—தேவராஜன், ஸ்ரீஹரிலட்சுமி, புண்டரீக வல்லித் தாயார், ஸ்ரீஹரிவிமாநம், திவ்யவிச்ராந்த தீர்த்தம், கிழக்கே திரு முகமண்டலம், நின்ற திருக்கோலம், தேவரிஷிகளுக்கும் இந்திராதி களுக்கும் சுதருமனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்க ளாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Lucknow-Balamu ஜங்ஷன் களுக்கு மத்தியிலுள்ள Sandila சாண்டிலா ஸ்டேஷனுக்கு வடக் கே 25–மைலிலும் Balamu–Sitapur ஜங்ஷன்களுக்கு மத்தியி லுள்ள Nimisar நைமிசார் ஸ்டேஷனுக்கு கிழக்கே 7–மைலிலும் இருக்கிறது. வண்டிகளுண்டு. தர்மசாலைகளிருக்கின்றன.

குறிப்பு.—இங்கு வானமாமலை மடமிருக்கிறது. பெருமாள் வநரூபியாய் சேவை சாதிக்கிறார். அதற்குத்தான் திருவாராதனம் முதலானவைகள் நடக்கின்றன. சூதபுராணிகர் மடமிருக்கிறது. தாலபத்திர ஸ்ரீகோஸங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

## 100. சாளக்கிராமம்.

பிரபாவம்.—ஸ்ரீமூர்த்திப்பெருமாள், ஸ்ரீதேவிநாச்சியார், கநக விமாநம், சக்கரதீர்த்தம், கண்டகிநதி. வடக்கே திருமுகமண்டலம் நின்ற திருக்கோலம், கண்டகி என்கிற வேசிக்கும் பிரம ருத்திராதி களுக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களா சாஸநம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது B. & N. W. Ry. Gorakpur கோரக்பூர் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 90 மைலில் இமய கிரிமேலிருக்கிறது. எல்லாவித அநுகூலங்களுமுண்டு. இதனுடைய மார்க்க விவரங்களை தெரிந்தோர் அறிவிப்பாராக.

குறிப்பு.—இவ்விடத்தில் ஜலத்திலுலாவுகிற சாளக்கிராம விக் கிரகங்கள் உத்தமம். குரிஜம் மத்திமம் பார்த்து வாங்கவேண்டியது. நேபாளராஜாவின் உத்தரவின்பேரில் தான் பெருமாள் சேவை கிடைக்கும்.

## 101. வதரியாச்சிரமம் (பதரிகாச்ரமம்)

பிரபாவம்—பதரி நாராயணன், அரவிந்தவல்லி, தப்தகுண்ட தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், இலந்தை மரத்தின்கீழ் பத்மாஸநஞகி ஞானமுத்திரை தரித்து ஜபசீலரான தபஸ்வியாய் நரனுக்கு மந்திரோபதேசஞ் செய்தவர். பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—Hardwar அரித்துவாரத்திலிருந்து இமயமலைச் சாரலில் 15 மைலில் ரிஷிகேசம் இருக்கிறது. (இங்கு நின்று பார்த்தால் இமயமலையை நன்கு தரிசிக்கலாம்). இங்கு நின் றும் லட்சுமணஜூல் மஹாதேவசட்டி மார்க்கமாய் 45 - மைலில் தேவப்பிரயாகை இருக்கிறது. இதுதான் (101) கண்டமெனும் கடிநகர். இங்குநின்றும் 9-மைலிலுள்ள ஸ்ரீநகரம் மார்க்கமாய் 20- மைலிலுள்ள ருத்திரப்பிரயாகைக்கு போகவேண்டும். (இங்கு நின்று பதரி கேதாரத்திற்கு பாதை பிரிகிறது). ருத்திரப் பிரயா

கையிலிருந்து 20 - மைலிலிருக்கும் கருணப்பிரயாகை, 32 - மைலி லிருக்கும் நந்தப்பிரயாகை, 51 - மைலிலிருக்கும் கருடகங்கை மார்க்கமாய் 66-மைலிலுள்ள ஜோசிமடம் போகவேண்டும். ஜோசி மடம்தான் (103) திருப்பிரிதி. இங்குநின்றும் விஷ்ணுப்பிரயாகை பண்டிகேசுவரம், அநுமான்சட்டி மார்க்கமாய் 18—மைலில் பதரி நாராயணம் இருக்கிறது. இந்த கிரி 23210 அடி உயரமுள்ளது. கீழே சொன்ன ருத்திரப்பிரயாகையிலிருந்து குப்தகாசி திரியுகி நாராயணம் மார்க்கமாய்க் கௌரிகுண்டம் போகவேண்டும். கௌரி குண்டம் என்பது அநேகதங்காவதம் என்னும் சிவத்தலம். இதற்கு வடக்கே 4—மைலில் திருக்கேதாரமென்னும் சிவத்தலமிருக்கிறது. இந்த மலை 22850 அடி உயரமுள்ளது. இதற்கு மேற்கே கங்கோத் திரியும், அதற்கு வடகிழக்கே 80—மைலில் திருக்கயிலாய மிருக் கிறது. கயிலையை நொடித்தான்மலை என்று சைவசமய குரவர்கள் பாடியிருக்கிறார்கள். இந்தமலை 20230அடி உயரமுள்ளது. கங்கோத் திரிக்குச்செல்லும் யாத்திரிகர்கள் திரும்பிவருகிறார்கள். கங்கோத் திரியிலிருந்து கயிலைக்குச் செல்லும் பக்தர்கள் திரும்புவதில்லை. இது மலைமிசை ஏறும் மார்க்கம். மார்க்கத்தில் நேபாள முதலிய ராஜாக்கள் யாத்திரைக்காரர்களின் சௌகர்யத்திற்காக அரிசி கோதுமைமா முதலிய சாமான்கள் விற்பதற்கும் தங்கஜாகை களும் தர்மத்திற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மலைமிசைப் போவதற்கு வேண்டிய கம்பளி, சொக்காய், ஜோடு, தடி, குடை, முதலியவைகள் அடிவாரத்தில் சொற்ப விலைக்கு விற்கப்படுகின்றன. பதரிகாசிரமம் செல்லுவோர் பதரி கேதாரம் செல்லாவிட்டால் குளிர்காய்ச்சல் வரும். வதரியில் அதிசீத நீர் சுனையாகிய நாரத குண்டமும், அதி உஷ்ணநீர் சுனையாகிய தப்தகுண்டமு மிருக்கின் றன. சீதசுனையில் நீராடியபிறகு உஷ்ணசுனையில் நீராடவேண்டும். இத்தேவாலயத்து பரிஜனக் கொத்துகள் யாவரும் பனிகாலம் வரும்போது அதாவது ஐப்பசிமாதம் பௌர்ணமியில் அபிஷே காதிகளுடன் வெண்ணெய்ப் பூச்சிட்டு, பூஜைசெய்து தான்யாதி களை எல்லாம் பூமிக்குள் புதைத்துவிட்டுப்போய் சமீபகிராமங்களா கிய பண்டிகேசுவரம் முதலிய விடங்களிலிருந்து பனிகாலம் கழிந்த பிறகு அதாவது சைத்திரா பௌர்ணமியில் சந்நிதி கதவங்களைத் திறந்து பூஜைகள் செய்து வந்து வசிப்பர். இக் காரணத்தினால் தான் இந்த க்ஷேத்திரத்தில் மானுட பூஜை ஆறுமாத மென்றும்

தேவபூஜை ஆறுமாத மென்றும் சொல்லப்படுகிறது. மேற்படி பனிக்காலத்தில் தேவஸ்தானங்கள் முதலியவை முற்றிலும் பனியால் உருத்தெரியாமல் மூடப்பட்டிருக்கும். மூடப்பட்டிருக்கிற ஆறுமாதகாலத்து தேவபூஜை நடத்தப்படுகின்ற தென்பதற்கு சாக்ஷியாக அர்ச்சகர்கள் ஐப்பசி பௌர்ணமியில் பூஜித்த புஷ்பங்கள் சிறிதும் வாடாமல் சித்திரா பௌர்ணமியில் காணப்படுகின்றன. இது உண்மை.

இறங்கும் மார்க்கம்.—பதரி நாராயணத்திலிருந்து 64 மைலிலுள்ள கருணப்பிரயாகை (ஆதிபதரி 12 மைல்), ராம்கங்காசட்டி (22 மைல்), துவாரகா காட் (10 மைல்), தர்மசாலா (25 மைல்) பீமண்டலசட்டி (23 மைல்), மார்க்கமாய் Katgoodam காட்கூடம் (8 மைல்) ரயில் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். காட்கூடத்திலிருந்து புகைரதமேறி Sandila சாண்டிலாவில் இறங்கி நைமிசாரண்யம் போவார்கள். மார்க்கங்களில் மிருகசஞ்சார மிருப்பினும் பயமில்லை. யாத்திரைக்காரரை அவைகள் ஒன்றுஞ் செய்வதில்லை. திருடர்கள் பயமுமில்லை.

## 102. கண்டமென்னும் கடிநகர். (தேவப்பிரயாகை)

பிரபாவம்.—நீலமேகப் பெருமாள், புருஷோத்தமன், புண்டரீகவல்லி நாச்சியார் மங்களவிமானம், மங்களதீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பரத்வாஜமகரிஷிக்கு ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—Hardwar அரித்துவாரத்திலிருந்து இமயமலையின்மேல் சத்திநாராயணம் ருஷிகேசம், சத்ருக்நம், லக்ஷ்மணஜூலா, தபோவனம், புலால்சட்டி குண்டல்சட்டி, வியாசகங்கா, பந்தர்வேல், சந்தர்சட்டி, சண்டேசட்டி, மஹாதேவசட்டி மார்க்கமாய் 53—மைலிலிருக்கிறது. எல்லா வசதிகளுமுண்டு. பதரி நாராயணம் மார்க்கத்தைப்பார்க்கவும்.

## 103. திருப்பிரிதி (ஜோசிமடம்)

பிரபாவம்.—பரமபுருஷன், பரிமளவல்லி நாச்சியார், கோவர்த்தனவிமானம், இந்திரதீர்த்தம், கோவர்த்தனதீர்த்தம், மானஸஸரஸ்ஸு, கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம், பார்வதிக்கு ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Hardwar அரித்துவாரத்தி லிருந்து 160-மைலிலும் தேவப்பிரயாகையிலிருந்து 107-மைலிலும் இருக்கிறது. வதரிமார்க்கம் பார்க்கவும்.

## 104. துவாரகை.

பிரபாவம்.—கல்யாண நாராயணன், கல்யாண நாச்சியார், அஷ்டமஹிஷிகள், ஹேமகூடவிமானம், கோமதிதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், திரௌபதிக்குப்ரத்யக்ஷம். நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Bombay. பம்பாயிலிருந்து கடல் மார்க்கமாய் 180-மைலிலிருக்கிறது. இதுதான் மிகவும் சௌகரியமும், குறைந்த செலவுமுள்ள மார்க்கம். மாலை 8-மணிக்கு ஸ்டீமர் ஏறினால் மறுநாள்பகல் 12 மணிக்கு துவாரகையை அடையலாம். புகைவண்டி மார்க்கம் 550 மைல் இருக்கிறது. ஜங்ஷன்கள் பலவிருக்கின்றன. $2\frac{1}{2}$ நாள் பிடிக்கும். பம்பாயிலிருந்து பரோடா மார்க்கமாய் அமட்பாட் ஜங்ஷனை அடைந்து அங்கிருந்து தென் மேற்காய்ப்பிரியும் பாதையில் வீரங்கம், வத்வான், வாங்கனர், ராஜகோட், ஜட்ல்ஸார், ஜங்ஷன்களின் வழியாய் போர்பந்தர்ஸ்டேஷனில் இறங்கவேண்டும். போர்பந்தரென்பது குசேலப்பட்டணம் (சுதாம்புரி) குசேலஸ்வாமி ஸந்நிதி யிருக்கிறது. இங்கு தங்குவதற்கு ஜாகைகளிருக்கின்றன. இங்கிருந்து சமுத்திரக்கரை மார்க்கமாய் கால்நடையிலாவது வண்டியிலாவது ஸ்டீமரிலாவது போகலாம். சுதாம்புரிக்கும் துவாரகைக்கும் 55-மைல் தூரமிருக்கிறது. இங்கிருந்து போவதற்கு மூன்றுநாள் பிடிக்கும். ஜலகஷ்டம். ஆங்காங்கு சத்திரங்களுண்டு. துவாரகைக்கு $\frac{1}{2}$ மைல் தூரத்தில் உத்தராதி ராமாநுஜ கூடமிருக்கிறது. வைஷ்ணவர்களுக்கு சௌக்கியமான இடம்.

## 105. வடமதுரை.

பிரபாவம்.—கோவர்த்தனம், கோவர்த்தநேசன், சத்தியபாமை, கோவர்த்தன விமானம், இந்திரதீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், இந்திராதி தேவர்களுக்கு ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Delhi டெல்லிக்குத் தெற்கே 80—மைலிலுள்ள (Muttra) மதுரா ஸ்டேஷனுக்குச் சமீபமாய் யமுனாநதியின் தென்கரையிலிருக்கிறது. இத்தலத்திற்கு வடக்கே 6-மைலில் பிருந்தாவனமும், கிழக்கே 4—மைலில் கோகுலமும் தெற்கே 13-மைலில் கோவர்த்தனகிரியு மிருக்கின்றன. இவ்விடத்தில் தர்மசாலைகள் அதிகம். எல்லா சௌகரியங்களு முண்டு.

## 106. திருவாய்ப்பாடி. (கோகுலம்)

பிரபாவம்.—நவமோகந கிருஷ்ணன், ருக்மணிபிராட்டி, ஸத்தியபாமை நாச்சியார் ஏமகூடவிமாநம், யமுநாநதி, கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், நந்தகோபனுக்கு ப்ரத்யக்ஷம். குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது (Muttra) மதுரா ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே ரோட்டு மார்க்கமாய் 3 மைலிலுள்ள மகபன் பட்டணத்திற்கு 1-மைல் தூரத்தில் யமுனை ஆற்றங்கரையில் ஒரு கிராமமாயிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வளர்ந்த ஸ்தலம். பலராமன் அவதரித்ததலம். இவ்வூரிலிருக்கும் பண்டாக்கள் திருடர்கள். ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். எல்லாவித சௌகரியங்களும் உண்டு.

## 107. திருப்பாற்கடல்.

பிரபாவம்.—க்ஷீராப்திநாதன், வ்யூகமூர்த்தி, கடல்மகள் நாச்சியார், அஷ்டாங்க விமாநம், அம்ருததீர்த்தம், தெற்கே திருமுக மண்டலம், புஜங்கசயநம், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ப்ரத்யக்ஷம். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாஸனம். இது யோகிகளும் முனிவர்களும் தேவர்களும் சென்று தங்கள் குறையிரக்குமிடம். அஸ்மதாதிகளுக்கு அதர்சநீயம். இதை MilkeySea என்றும் NorthPole என்றும் சில மேதாவிகள் சொல்லுகிறார்கள்.

வடநாட்டுத் திருப்பதிகள் முற்றுப் பெற்றன.

## 108. பரமபதம்.

பிரபாவம்.—பரமபதநாதன், பரவாஸுதேவன், ஸ்ரீவைகுண்டநாதன், பெரிய பிராட்டியார், அநந்தாங்கவிமாநம், விரஜாநதி அயிரம்மதபுஷ்கரணி, ஸோமஸவநம், கூவிளவிருக்ஷம், தெற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அநந்தகருட விஷ்வக்ஸேநர் முதலிய நித்யஸூரிகளுக்கும்,முக்தர்களுக்கும் ப்ரத்யக்ஷம். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார் பெரியாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், ஆண்டாள் மங்களாசாஸநம்.

எல்லா வுலகங்களினும் மேம்பட்டு மேலிடத்துள்ளதாய், ஒப்புயர்வின்றி விளங்கும் இயற்கைப்பேரொளியுடையதாய், கமலக்கண்ணனது கருணைப்பெருக்கின் வடிவமான 'விரஜை' யென்னும் விமலநதியை எல்லையாகப்பெற்றதாய் 'சிறுகாலையிலா நிலையோதிரியா குறுகா நெடிகா குணம்வேறுபடா,உறுகால்கிளர் பூதமெலாமுகினும் மறுகாநெறி' என்றபடி கலை முஹூர்த்தம் முதலிய காலபரிணாமங்களும் நிலைவேறுபாடும் சுருக்கமும் பெருக்கமும் குணவேற்றுமையும் உற்பத்திவிநாசங்களுமின்றி என்று மொருபடிப்பட விருப்பதாய் அந்தமில்பேரின்பத்தை அநுபவிக்கும் இடமாய்,மனமொழிகளுக்கு எட்டாத மஹிமையுடையது பரமபதம் என்கிற திவ்யலோகம்.

நூற்றெட்டுத் திருப்பதிகள் முற்றுப்பெற்றன.

ஸ்ரீமதே நாராயணாய நம.

# புராணஸ்தலங்கள்.

## 1. திருநாராயணபுரம்.

ப்ரபாவம்.—திருநாராயணப் பெருமாள், செல்வப்பிள்ளை, எதுகிரிநாச்சியார், யாதவகிரி, ஆநந்தவிமாநம், கல்யாண தீர்த்தம் வைகுந்த தீர்த்தம், பராசர தீர்த்தம், மயித்ரேய தீர்த்தம், தநுஷ்கோடி தீர்த்தம்; யாதவ தீர்த்தம், லோகபாவன தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம் கருடனுக்கு வயிரமுடி நிமித்தமாக ப்ரத்யக்ஷம். நஞ்சியர் அவதார ஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்:—இது மைசூருக்கு வடக்கே 12-மைலிலுள்ள பிரஞ்சுராக் (French rocks) ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே கற்சாலைமார்க்கமாய் 18-மைலிலிருக்கிறது.

## 2. ஸ்ரீமுஷ்ணம்

ப்ரபாவம்.—ஆதிவராகப் பெருமாள், அம்புஜவல்லித்தாயார், வாமநவிமாநம், நித்யபுஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அச்வத்த நாராயணனுக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது சிதம்பரம் ஸ்டேஷனுக்கு மேற்கேகற்சாலைமார்க்கமாய் 24 மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திரம் ஹோட்டல், கிளப்புகளிருக்கின்றன. சந்நிதியிலும் பிரசாதம் கிடைக்கும்.

குறிப்பு.—இது அஷ்டசுயம்பு ஸ்தலங்களில் ஒன்று. இங்கு பெருமாள் வராகரூபியாதலால், அவருக்குக்கோரைக்கிழங்கு லட்டு அமுது செய்யப்பண்ணி வேண்டியவர்களுக்கு விலைக்கும் கொடுக்கிறார்கள். இத்தலத்துக்குத் தென் கிழக்கே 16-மைலில் காட்டுமன்னார் கோவிலும், வடமேற்கே 12-மைலில் ப்ரபல சிவஸ்தலமாகிய விருத்தாசலமுமிருக்கின்றது.

## 3. விருந்தாவனம் (பிருந்தாவனம்)

ப்ரபாவம்.—ராதாவல்லபன், ராதாதேவி, வஸ்த்ராபஹார தீர்த்தம், யமுனாநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், ராதாதேவிக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Brindaban பிருந்தாவன் ஸ்டேஷனிலிருந்து $\frac{1}{2}$-மைலிலிருக்கிறது. இதைப்பற்றிய விஷயங்களை வடமதுரையில் காண்க.

## 4. பாபவிநாசம்.

ப்ரபாவம்.—பாபவிநாசப்பெருமாள், பங்கயவல்லி நாச்சியார் பாபவிநாசவிமாநம், புண்டரீகபுஷ்கரணி, குடமுருட்டிநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், சிவபிரானுக்கும், ஜயங்கொண்ட சோழனுக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது கும்பகோணத்திற்கு மேற்கே 9-மைலிலுள்ள பாபவிநாசம் ஸ்டேஷனிலிருந்து வடக்கே $\frac{3}{4}$-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு, சத்திரமும் ஹோட்டலுமிருக்கின்றன. சந்நிதியிலும் பிரசாதம் கிடைக்கும். இதற்கு வடக்கே $1\frac{1}{2}$-மைலில் கபிஸ்தலமிருக்கிறது. ஆறுகளுக்குப் பரிசல்களுண்டு.

## 5. பூதபுரி (ஸ்ரீபெரும்பூதூர்)

ப்ரபாவம்.—ஆதிகேசவப் பெருமாள், எதிராஜவல்லித்தாயார் அநந்தவிமாநம், அநந்ததீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம் ஆசூரிகேசவாசார்யருக்கும் பூதகணங்களுக்கும், ஹாரிதமஹாராஜனுக்கும் ப்ரத்யக்ஷம். ஸ்ரீமத் உடையவர் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது சென்னைப் பட்டணத்திற்கு மேற்கே 25 மைலிலுள்ள திருவள்ளூர் ஸ்டேஷனிலிருந்து தெற்கே கற்சாலை மார்க்கமாய் 11-மைலிலும், சென்னைக்குத்தெற்கே 21-மைலிலுள்ள வண்டலூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 11-மைலிலும் இருக்கிறது. இரண்டுஸ்டேஷன்களிலிருந்தும் வண்டிகளுண்டு, சத்திரங்களும் மடங்களுமிருக்கின்றன. சிவபிரான் கட்டளைப்படி பூதங்களால் நிர்மாணஞ் செய்யப்பட்டதால் இதற்கு பூதபுரியென்று பேராயிற்று.

## 6. இராஜமன்னார் கோயில்.

ப்ரபாவம்.—இராசகோபாலன், செங்கமலவல்லி நாச்சியார் ஸ்வயம்புவிமாநம், அரித்ராநதி புஷ்கரணி, சங்கதீர்த்தம், சக்ரதீர்த்தம், கிருஷ்ணதீர்த்தம், ருக்மணிதீர்த்தம், கஜேந்த்ரதீர்த்தம், க்ஷீர

சாகரதீர்த்தம், கோப்ரளயதீர்த்தம், சம்பகாரண்யக்ஷேத்ரம், கிழக்கே திருமுக மண்டலம், நின்றதிருக்கோலம், கோபில கோப்ரளய மகாமுனிக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது நீடாமங்கலத்திற்குத்தெற்கே 8-மைலிலிருக்கும் மன்னார்குடி ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலை மார்க்கமாய் ஒரு மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திரமும் இராமாநுஜகூடமும் ஹோட்டலுமிருக்கின்றன. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும். இராஜகோபாலன் ஒரு காதில் குண்டலமும் மற்றொருகாதில் கம்மலுமணிந்திருப்பர்.

## 7. காட்டு மன்னார்கோயில்

ப்ரபாவம்.—வீரநாராயணப் பெருமாள், செங்கமல வல்லித்தாயார், புண்ணியவிமாநம், வேததீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம் மதங்கமஹருஷிக்கு ப்ரத்யக்ஷம், ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—சிதம்பரத்திற்கு தென்மேற்கே 14 மைலிலுள்ள லால்பேட்டையை யடைந்து தெற்கேதிரும்பி 2-மைல் தூரம் சென்றால் இத்தலத்தையடையலாம். வடமேற்கே 12-மைலில் ஸ்ரீமுஷ்ணமும் மேற்கே 8-மைலில் குருகைக்காவலப்பன் கோவிலும் இருக்கின்றன. சிதம்பரத்தினின்றும் வண்டிகளுண்டு. ஸ்ரீ முஷ்ணத்திற்குத் தபால் வண்டிகிடைக்கும். சத்திரமும் ஹோட்டலுமிருக்கின்றன. சந்நிதியிலும் பிரசாதம் கிடைக்கும்.

## 8. பிரமதேச மன்னார்கோயில்

ப்ரபாவம்.—வேதநாராயணப் பெருமாள், ராஜமன்னார், வேதவல்லித்தாயார், வேதவிமாநம், அகஸ்தியதீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்றதிருக்கோலம், அகஸ்தியருக்கும், குலசேகராழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது அம்பாசமுத்திரம் ஸ்டேஷனுக்கு வடக்கே 1-மை லிலிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திரமில்லை ஹோட்டலில்லை, சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும். அம்பாசமுத்திரத்திலிருந்து பதார்த்தங்கள் கொண்டுபோனால் மண்டபங்களில் தளிகை செய்து கொள்ளலாம். கிழக்கே ஒரு மைலில் பிரமதேச மிருக்கிறது. இது பெரிய ஸ்மார்த்த கிராமம். எல்லாசௌகரியங்களு

முண்டு. அம்பாசமுத்திரத்தில் 3 - சத்திரங்களும் சில ஹோட்டல்களுமிருக்கின்றன.

குறிப்பு.—பிரமதேசமன்னார்கோவில் குலசேகராழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளினதலம். ஆழ்வாருக்குத் தனிச்சந்நிதியும் மாசிமாதத்தில் பிரமோத்சவமு முண்டு. திருக்கூடலிலும் திருக்கோட்டியூரிலும் உள்ளதுபோல விமானத்தின் மிசைவீற்றிருந்த கொலமாயும் அதற்குமேலே கிடந்ததிருக் கோலமாயும் பெருமாள் ஸேவைசாதிக்கின்றனர். தசாவதார சந்நிதி ரங்கநாதன் சந்நிதி மணவாளமாமுனி சந்நிதி, இவைகள் தனித்தனியாயிருக்கின்றன. இது ஒரு பெரிய அழகான சந்நிதி.

## 9. ஸ்ரீபுருஷோத்தமம் (ஜகந்நாதம்.)

ப்ரபாவம்.—ஜகந்நாதன், கிருஷ்ணமூர்த்தி, பலபத்திரர், சுபத்திரை, ஸ்ரீமந்த்ரவிமானம், வருணதீர்த்தம் ரோகணி முதலிய நூறு தீர்த்தங்கள். குணகுடல் தீர்த்தம். ஆலவிருக்ஷம். கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம் இந்திரத்யும்னனுக்கும், மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம். வருணதேவராலே பிரதிஷ்டை செய்து ஆராதிக்கப்பட்டவர்.

மார்க்கமும் வசதிகளும்.—இது (B. N. R.) Puri பூரிஸ்டேஷனுக்கு வடக்கே ஒருமைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு. நூற்றுக்கதிகமான தர்மசாலைகளிருக்கின்றன. பிரசாத பலகாரங்களுக்குக் குறையில்லை. பண்டாக்கள் தொந்திரவு அதிகம்.

## 10. ஸ்ரீகூர்மம்.

ப்ரபாவம்.—ஸ்ரீகூர்மநாதஸ்வாமி, ராஜ்ஜியலக்ஷ்மி, காந்தர்வ விமானம், நாரதகுண்டம், சுதாகுண்டம், சக்ர தீர்த்தம், மாதவ தீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், கௌடில்லிய தீர்த்தம், வக்கர தீர்த்தம், மகோத்தி, மேற்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். சுவேதமஹா ராஜனுக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது சிகாகுளம் ஸ்டேஷனுக்குத் தெற்கே ரோட்டு மார்க்கமாய் 16-மைலிலிருக்கிறது. 8-மைலில் குறுக்கு மார்க்கம் ஒன்று இருக்கிறது. கஷ்டம். வண்டிகளுண்டு, சத்திரமில்லை. இந்த ஸ்தலம் மிகப்பெரியது. சுவேத புஷ்கரணியில் எலும்புகளைப் போட்டால் ஆமைகளாக ஆகின்றன. பஞ்சமா

ரஜஸ்வலையான ஸ்திரிகள் இந்த சுவேத புஷ்கரணியைத் தொட்டால் பாசிபிடிக்கும். சுவாமியினுடைய புண்ணிய வாசக தீர்த்தம் புரோக்ஷித்தால் பழைய பிரகாரம் தீர்த்தம் சுத்தமாகிவிடும்.

## 11. சிம்மாசலம்.

ப்ரபாவம்.—ஸ்ரீவராக நரசிம்மஸ்வாமி, சிம்மவல்லித்தாயார், பிரகலாதவிமாநம், கங்காதாரை, கோதாவரிதாரை, சக்கரதாரை, வேகவதிதாரை, மலாபகாரணி, அநுமந்ததாரை, மாதவதாரை, முதலிய தீர்த்தங்கள். மேற்கே திருமுக மண்டலம். நின்றதிருக்கோலம் பிரகலாதனுக்கும் புரூரவச்சக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும் இது சிம்மாசலம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே 4-மைலிலும், விஜயநகரம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே 10-மைலிலும், வால்டேர்ஸ்டேஷனுக்கு வடக்கே 6—மைலிலும், இருக்கின்றது. சிம்மாசலம் ஸ்டேஷனில் மெயில்வண்டிகள் நிற்பதில்லை. வண்டிகளுண்டு. சத்திரமிருக்கிறது.

## 12. ஜனார்த்தனம்.

ப்ரபாவம்.—ஜனார்த்தனஸ்வாமி, ஸ்ரீதேவி, வேதாமோதவிமாநம், சக்ரதீர்த்தம், பிரமதீர்த்தம், ஜலநிதி, ஆலவிருக்ஷம், கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம், பிரமதேவருக்கும் சுப்பிரயசசு என்னும் அரசனுக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது S. I. R. கொல்லம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தெற்கே தோடு (Canal) மார்க்கமாய் 18-மைலிலிருக்கிறது. இதை தக்ஷணகயா என்பர். சத்திரமிருக்கிறது. ஹோட்டலில்லை. பிராமணாளுக்கு ஊட்டுப்பிரையுண்டு. மற்றவர்களுக்குப் பிரசாதம் கஷ்டம்.

## 13. பண்டரிபுரம்.

ப்ரபாவம்.—பாண்டுரங்கர், விட்டலதேவர், ருக்மபாய், ஞானனந்த விமாநம், க்ருஷ்ண தீர்த்தம், சந்திரபாகாநதி, கிழக்கு முகமாய் இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்ற திருக்கோலம். புண்டரீகருக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்—இது பண்டரிபுரம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒருமைலில் பீமாநதிக் கரையின்மீதிருக்கிறது.

தர்மசாலைகளிருக்கின்றன. சந்நிதிக்குச் செல்வோர் யாவரும் ஜய் ஜய் விட்டல் என்று நாம சங்கீர்த்தனம் செய்துக்கொண்டு கண்ண பிரானை ஆலிங்கனம் செய்வர். இப்பாண்டுரங்கம் நாதப்ரஹ்ம மெனவும், ஜகந்நாதம் அன்னப்ரஹ்மம் எனவும், கயா பிண்ட ப்ரம்மமெனவும் சொல்லுவர். தர்மான்ன சத்திரங்களும் தர்மங்களு முண்டு.

## 14. பத்திராசலம்.

பிரபாவம்.—ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, சீதாபிராட்டியார், லக்ஷ்மணப்பெருமாள், சிறியதிருவடி, ஆனந்த நிலயவிமானம், ஸ்ரீராம தீர்த்தம், கோதாவரிநதி, மேற்கே திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், மேருநந்தனை பத்ரமமஹருஷிக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது ராஜமகேந்திரத்திலிருந்து வடமேற்கே கோதாவரிநதிக்கரையின் மேல் 60—மைலிலிருக்கிறது. கோதாவரிநதியிலேயே போகும் படகுகளில் செல்லலாம். ஆங்காங்கு பலசௌகரியங்களுமுண்டு. பெஜவாடாவுக்கு வடமேற்கிலுள்ள எல்லாண்டுரயில் ஸ்டேஷனிலிறங்கி நேர்வடக்காய் 60-மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். காட்டுமார்க்கமாகையால் பயமுண்டு. சத்திரங்களிருக்கின்றன. ராஜமகேந்திரவரத்திலிருந்து போவதே உத்தமம்.

## 15. புஷ்கரம்.

பிரபாவம்.—பரமபுருஷன், புண்டரீக வல்லித்தாயார், மங்கள விமானம், புஷ்கர தீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், பிரமதேவருக்கு ப்ரத்யக்ஷம். இங்கு பிரமாலயம்மிகப் பிரபலமானது. அஷ்டசுயம்பு ஸ்தலங்களில் ஒன்று. இங்கு பகவான் தீர்த்தரூபமாயிருக்கிறார்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Ajmir அஜ்மீர் ஸ்டேஷனுக்கு தென்மேற்கில் 7-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு. தர்மசாலைகளிருக்கின்றன. இங்கு பதரி நாராயணன் சந்நிதியும், வராகஸ்வாமி சந்நிதியுமிருக்கின்றன. இங்கு நம்மூர்ஸ்வாமிகள்தான் திருவாராதனஞ்செய்கிறார்கள். போகிறவர்கள் திருமண்கதிர் கொண்டு கொடுத்தால் அவர்களுக்கு வெகுசந்தோஷம். இங்கு தாமரைமணிகள் கிடைக்கும். அவசியம் வாங்கத்தக்கது. 2—மைலில் வெகு அருமையான தீர்த்தமிருக்கிறது. அவ்வூராரைக் கொண்டு அவசியம்

ஸ்நாநம் செய்யவேண்டியது. வெயிற்காலத்தில் சந்நிதியிலாகிலும் தெருவிலாகிலும் அடிவைக்கமுடியாது. காலை 10-மணிக்குள் சமையல் முதலானதை முடித்துக்கொண்டு நாலுமணிவரையிலும் வீடுகளில் பதுங்கியிருக்கவேண்டும். ஏரியில் முதலைகள் விசேஷம்.

## 16 அவந்தி. (உஜ்ஜினி)

பிரபாவம்.—கண்ணன்நாராயணன், திருமாமகள் நாச்சியார். தாரகவிமாநம், நித்யபுஷ்கரணி, தேவபுஷ்கரணி, வடவிருக்ஷம். தெற்கே திருமுக மண்டலம். நின்றும் கிடந்தும் விளங்குந் திருக்கோலம். தேவர்களுக்கும், சாந்தீப முனிவருக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Ujjain உஜ்ஜினி என்ற ஓர் அழகிய பட்டணம். சந்நிதி ஸ்டேஷனுக்கு ஒரு மைல்தூரத்திலிருக்கிறது, தர்மசாலைகளுமிருக்கின்றன. இது முத்திநகர் ஏழனுள் ஒன்று. இந்நகர்வாசியாகிய சாந்தீப முனிவரிடத்தில் கண்ணபிரான் வேதாத்யயனம் செய்தனன்.

## 17. ஹரித்துவாரம்.

பிரபாவம்.—ஆதிநாராயணன், ஆதிலட்சுமி, ஆனந்தவிமாநம் ஹரிபாததீர்த்தம், கங்காநதி, புஜங்கசயனம், தெற்கே திருமுக மண்டலம், தக்ஷப்ரஜாபதி நிமித்தமாக அஜருத்திரேந்த்ராதிகளுக்கு ப்ரத்யக்ஷம். சுகரும் பரிக்ஷித்து மஹாராஜனும் தவஞ்செய்த ஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது Hardwar. ஹரித்துவாரம் ஸ்டேஷனுக்கு 2—மைல் தூரத்திலிருக்கிறது. வண்டிகளும் தர்மசாலைகளும் இருக்கின்றன, நியூஸென்ஸ் அதிக உபத்திரவம். இவ்வூர் ஜலம் அதிக உஷ்ணமானதால் சீதபேதி முதலானவைகள் உண்டாகும். அதிக நாள் தாமதிக்கலாகாது. வெய்யற்காலத்தில் உஷ்ணம் அதிகம். கால் பூமியில்வைக்கமுடியாது, பனிக்காலத்தில் குளிர்சகிக்க முடியாது. இவ்விடத்திலிருந்து 15-மைல் தூரத்திலுள்ள ருஷீகேசத்திற்கு வண்டிகளில் போகலாம். பண்டாக்கள் அதிகம். அவர்கள் அதிக தொந்தரவு செய்வார்கள்.

குறிப்பு.—மது தன்னை ஸம்ஹாரஞ்செய்த விஷ்ணுமூர்த்தியை இனி இது புண்ணியஸ்தலமாக எனவேண்டினமையால் அத்தகைய விஷ்ணுமூர்த்தி எழுந்தருளியிருக்கும் புண்ணியதலமாகிய க்ஷேத்

திரம். இது ஸப்தபுரியில் ஒன்று. அரித்துவாரம், கங்காத்துவாரம் மாயாத்துவாரம் என்றபெயர்களையுடையது. கங்கைமா நதி ஹிமாசலத்தின் மேலே வந்து இந்த க்ஷேத்திரத்தில்தான் முதலில் பூமியிலிறங்கி சுழன்று செல்லுகிறது. இது வைகுந்தத்திற்கு ஏறும் ஏணியாகவுள்ளது. ஹரிசரணகாட்டிற்கு சமீபத்தில் கங்காதேவி தேவாலயமும் அதன் பிரகாரத்திலுள்ள ஸ்ரீ விஷ்ணுபாதமும் க்ஷேத்திர தரிசனத்திற்கு முக்கியமானவை.

## 18. ஸ்ரீமத்கயா.

பிரபாவம்.—ஸ்ரீமத்கயாவில் பல்குநதிக்கரையின்மேல் இருக்கின்ற கோயிலுள் விஷ்ணுபாதமும் அதனைச் சூழ்ந்து பிரமபாதம் ருத்திரபாதம், முதலியதேவர்களின் பாதங்களும் ருஷிகளின் பாதங்களுமிருக்கின்றன.

மார்க்கமும் வசதிகளும்.—இது கயாரெயில்வேஸ்டேஷனிலிருந்து $3\frac{1}{2}$-மைல் தூரத்திலிருக்கிறது. வண்டிகளும், தர்மசாலைகளுமிருக்கின்றன. இவ்விடத்தில் நந்தேயத்து பிராமணர்கள் அநேகர்கள் குடியேறியிருக்கின்றனர். காசியைப்பார்க்கிலும் அதிகயாத்திரைக்காரர்கள் பித்ருகடனைத் தீர்க்கும்பொருட்டு இங்கு வந்துக்கொண்டிருக்கிறார்கள். பண்டாக்கள் (வைதிக கருமங்களை செய்துவைப்பவர்) கயாவாலர்கள் தொந்தரவு அதிகம், அவர்களைக்கொண்டுதான் பித்ரு காரியங்களை நடப்பிக்கவேண்டியது.

குறிப்பு.—இந்த க்ஷேத்திரத்தில் பல்குநதியில் நீராடிசிராத்தம் செய்து விஷ்ணுபாதத்தில் பிண்டபிரதானம் செய்வர். பிரயாக முண்டம் காசிதண்டம் கயாபிண்டம் எனவும், பாண்டுரங்கம் நர்தப்ரம்மம், ஜகந்நாதம்அன்னப்ரம்மம், ஸ்ரீமத்கயாபிண்டப்ரம்மம், எனவும் இதை க்ஷேத்திரராஜாஎனவும் சொல்லுவர். கோயிலுக்கு சிறிது தூரத்தில் கட்டடங்கள் மத்தியில் ஒருவடவிருக்ஷமிருக்கிறது. யாத்திரைக்காரர்கள் அதனைவலம் வந்து தண்டம் சமர்ப்பித்து அர்ச்சிப்பார்கள். இந்தக்ஷேத்திரத்தில் க்ஷவரமும் ஸ்தல உபவாசமும் செய்ய வேண்டுவதில்லை.

ஸ்ரீமத்கயாக்ஷேத்திரம், சுருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், புராணங்களாலும் க்ஷேத்திரமொன்றனையும் புகலாக இதிகாசஸ்ரேஷ்டமாகிய ஸ்ரீராமாயணத்தாலும் சொல்லப்பட்டது. கயாஸ்ராத்தம் செய்யாதபுத்திரன் புத்திரனல்லன், அவனைப்பெற்றோரும் புத்திர

ணைப் பெற்றோரல்லர் என்று அற நூல்பகரும். இதற்கு ஏழுமைலி லுள்ள பௌத்தகயாவும் பார்க்கத்தகுந்தது. காசியிலும் பிரயாகை யிலுமுள்ள நம்திராவிடதேசத்தார் இக்கயாவுக்குவருமுன்னமே நம் மிடத்தில் இக்கயாவாலர்களுக்கு நிற்பந்தப்படுத்தி சீட்டுகொடுக் கிறார்கள். முன்பு ஒருவனுடைய ஆஸ்தியில் பாதிவிலையிலிருந்த கயா சிராத்தம் இப்போது ஐந்து ரூபாய்விலை மதிப்பில் வந்திருக்கிறது. கயாசிராத்தத்தில் விஷ்ணுபாதம் ஒன்றில் மட்டும் பிண்டம் போடு வது எல்லோரும் செய்யத்தகுந்தது.

## 19. பிரயாகை.

ப்ரபாவம்.—ஆதிமுதல்வன், மாதவப்பெருமாள், செங்கமல வல்லித் தாயார், பாவன விமானம், திருவேணி சங்கமதீர்த்தம், வட விருக்ஷம், புஜங்கசயனம், கிழக்கே திருமுகமண்டலம், மார்க்கண் டேயருக்குப் பிரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது (E. I. Ry.) Allahabad (Prayag) பிரயாகை ஸ்டேஷனுக்கு தெற்கே 3-மைலிலிருக்கிறது. இது ஒரு பெரிய பட்டணம். அக்பர் இங்கு கோட்டை ஒன்று கட்டி அல்லஹாபாத் (கடவுட் பட்டணம்) என்று பெயரிட்டான். அதனால் இதற்கு அல்லஹபாத் என்று பெயராயிற்று. வண்டிக ளுண்டு. தருமசாலைகள் பலவுண்டு. இங்கு அஹோபில மடமுமிருக் கிறது.

குறிப்பு.—பிரயாகாமுண்டம், காசிதண்டம், கயாபிண்டம், எனவும் பிரயாகை தீர்த்த ராஜா வெனவும் சொல்லுவர். இந்த க்ஷேத்திரத்தில் வடவிருக்ஷம் ஒன்றிருக்கிறது. சிவபிரான் அதன் மூலத்திலிருந்து அதனைக் காத்து வருகின்றார் எனவும், வடபத்திர சாயியாகிய மஹாவிஷ்ணு அவ்விருக்ஷத்தின் இலையில் என்றும் பள்ளிக் கொண்டிருக்கிறார் எனவும், பிரளயகாலத்தில் மார்க்கண் டேயர் முதலிய முனிவர்கள் அத்தனி முதற் கடவுளது திருவயிற் றில் புகுந்திருந்தன ரெனவும் ஸ்தல மான்மியம் கூறும்.

உண்டதிரைநீர்ப்பிரளயத்துமார்க்கண்டன்முதன்முனிவருறைவதாய
வடதருவைப்புனிற்றுமதியலைபுரட்டுங்கங்கையொடுவேணிக்
கடவுளைவெண்மதிகொழிக்கும்பாலாழிதுறந்துசெழுங்கமலையோடு
மடியார்துயரகற்றுவலென்றினிதடைந்தமாதவனைபாங்குகண்டான்.

என்று காசிகாண்டம் கூறும்.

## 20. சித்திரகூட பர்வதம்.

ப்ரபாவம்.—சீதாராமன் சந்நிதியும், இன்னும் அநேக ஆலயங்களுமிருக்கின்றன. இங்கு தாசரதி சீதாலக்ஷ்மணருடன் பத்து வருஷம் எழுந்தருளி யிருந்தனர்.

மார்க்கமும் வசதிகளும்.—இது (Karvi) கார்விஸ்டேஷனிலிருந்து 5-மைலிலும், (G. I. P. Ry.) சீதாப்பூரிலிருந்து 2-மைலிலும், சித்திரகூடம் ஸ்டேஷனிலிருந்து $3\frac{1}{2}$-மைலிலுமிருக்கிறது. சத்திரங்களும், தருமசாலைகளும் மடங்களும் மிருக்கின்றன. வண்டிகளுண்டு.

குறிப்பு.—மந்தாகினி நதி இருக்கிறது. புராணலங்கா என்று ஒரு மடமிருக்கிறது. அம்மடத்திற்கும் மலைக்கும் சமீபம். வாசயோக்ய மானஸ்தலம். சதாவர்த்தியும் கொடுக்கிறார்கள். மலைமேல் எங்கும் காடாகையால் பிரதக்ஷணம்செய்வதன்றி அதன்மேல் ஏறுவதில்லை. மலை இரண்டு மைல் சுற்றளவு உள்ளது.

## 21. சீதாப்பூர்.

ப்ரபாவம்.—மந்தாகினி நதியின் கரையில் சக்கரவர்த்தித் திருமகன் சந்நிதி யிருக்கிறது. யாத்திரிகர்கள் நதியில் நீராடி தீர்த்த சிராத்தம் செய்து அப்பரமனை தரிசிப்பார்.

மார்க்கமும் வசதிகளும்.—இது (G. I. P. Ry.) கார்வி பட்டணத்திற்கு 5-மைல் தூரத்தில் பைசுனி நதியின் வடகரையிலிருக்கிறது. இவ்விடத்தில் எல்லா வசதிகளுமுண்டு. இவ்வூரில் பெரும்பாலார் தென்னாசாரிய சம்பிரதாயஸ்தர்களாக யிருக்கிறார்கள்.

## 22. நாசிகை.—பஞ்சவடி.

ப்ரபாவம்.—இங்கு ஸ்ரீராமன் சந்நிதியிருக்கிறது. அதில் சீதாராமலக்ஷ்மணபரத சத்ருக்ன அநுமத் சமேதராய் ஸ்ரீரகுநாதன் எழுந்தருளியிருக்கின்றார். இது கோதாவரி வடகரையில் இருக்கிறது. ஐந்து ஆலவிருக்ஷங்கள் இருப்பதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

தென்கரையில் நாசிகைமாநகரம் இருக்கிறது. வடதேசாத்தார் மேலைநாட்டுக்கு நாசிகையை, ஸ்ரீகாசி என்றும், கோதாவரியை கங்கை என்றும் சொல்லுவர்.

மார்க்கமும் வசதிகளும்.—இது (G. I. P. R.) Nasik. நாசிக் ஸ்டேஷனுக்கு வடமேற்கில் 5-மைலில் இருக்கிறது. டிராம்வண்டி முதலான எல்லா சௌகரியங்களுமுண்டு. நாட்டுக்கோட்டையார் சத்திரமும் தர்மசாலைகளு மிருக்கின்றன. இராமாநுஜஸ்வாமி மடமென்றும் பர்ணசாலை என்றும் சந்நிதிக்குப்பெயராம்.

குறிப்பு.—இளையபெருமாள் சூர்ப்பநகையின் மூக்கை அறிந்த விடமாதலாலும், சிவபிரான் தன்னாசியை யறிந்து அச்சுதனை, ஆராதித்தஸ்தல மாதலாலும் இதற்கு நாசிகை என்று பெயர் உண்டாயிற்றென்பர். சிவபிரான் பிரம்மஹத்தியால் பீடிக்கப்பட்டகாலத்தில் நந்தி தேவர் அவரைப்பிரிந்து நாசிகையில் வந்திருந்தபோது உழுவதற்கு இவ்வெருது நன்றென்று தன்னைப்பிடிக்க வந்த பிராமணர்களை யெல்லாம் கொன்றது. அதனால் வந்தப்ரம்மஹத்தியை அது ராமதீர்த்தத்தில் நீராடி பஞ்சவடியில் நம்அரும் பெறலடிகளை தரிசித்து பாவனமாய் வசித்திருக்க, அக்காலை ருத்திரமூர்த்தி ஆங்குவர விடைவணங்கி முன்னிகழ்ந்ததை உரைத்தது. கபாலியும் அத்தீர்த்தத்தில் நீராடி பஞ்சவடியில் பரமனை சண்பகமலர் ஆயிரங் கொண்டு சிலநாள் அர்ச்சித்து வந்தார். ஒருநாள் ஒருமலர் குறைய அதற்கு தத்சத்ருசமாகிய தன் நாசியை அறுத்து அர்ச்சித்தார், அதற்கு சீதாநாயகன் அவர்முன் தோன்றி பிரம்மஹத்திதோஷத்தைப் போக்கி அருள் செய்தான் என்ப. இது விஷ்ணு தன்கண் ஒன்றைப் பிடுங்கி சிவனை அர்ச்சித்து சக்கரத்தைப்பெற்றான் என்று சாதிக்கும் கதையை ஒத்திருக்கின்றது.

## 23. இராமக்ஷேத்திரம்.

ப்ரபாவம்.—ஸ்ரீராமன், ஜானகி பிராட்டியார், லக்ஷ்மண பரத சத்துருக்னர், மாருதி, தாரகவிமானம், பாவன தீர்த்தம், இராம தீர்த்தம், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், திரேதாயுகத்தில் தபசுசெய்த சூத்திர ஜன்மாவான ஜம்புகனைக் கொன்று அவனபீஷ்ட ப்ரகாரம் அவனுக்கு மோக்ஷம் தந்தவர்.

நரசிம்மஸ்வாமி, சிம்மவல்லித் தாயார், பாவன விமானம், வராக தீர்த்தம், நரசிம்மதீர்த்தம், தத்தாத்ரேய தீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், அம்பரீஷ மகாராஜனுக்கு ப்ரத்யக்ஷம். இந்த க்ஷேத்திரத்தை காசி தக்ஷிண துவாரம் என்று சொல்லுகிறார்கள்.

மார்க்கமும் வசதிகளும்.—இது நாகப்பூருக்கு வடக்கே 21-மைலிலுள்ள Ramtek ராம்டேக் ஸ்டேஷனுக்கு 1-மைல்தூரத்திலிருக்கிறது. வண்டிகளுண்டு தர்மசாலை யிருக்கிறது. இதற்கு சிந்துரகிரி என்றும் தபோகிரி என்றும் புராணப் பெயர். இந்த மலை 500-அடி உயரமுள்ளது.

## 24. குருக்ஷேத்திரம்.

ப்ரபாவம்.—குருக்ஷேத்திரம் 1160-சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. இதில் 352-புண்ணிய ஸ்தலங்களும் தீர்த்தங்களும் இருக்கின்றன. இந்தக்ஷேத்திரம் பிரமதேவரால் தெரிந்தெடுக்கப்பட்ட புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று. அயநம் அமாவை பௌர்ணமி மாத சங்கிரமணம் கிரஹண காலங்கள் அர்த்தோதய மஹோதயபுண்ணிய காலங்களில் ஸ்நானம் விசேஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—Delhi Ambala Kalka Ry., இது குருக்ஷேத்திர ஸ்டேஷனுக்கு மேற்கே 1-மைலில் யமுனையாற்றின் கரைமேல் இருக்கிறது. எல்லாதவித சௌகரியங்களு முண்டு.

## 25. சோனேபூர்.

ப்ரபாவம்.—கஜேந்திரவரதர், திருமகள் நாச்சியார் அனந்த கருட விஷ்வக் சேனதிகள். சேஷவிமானம் பத்மசரசு, கஜேந்திர புஷ்கரணி தெற்கே திருமுகமண்டலம் நின்ற திருக்கோலம். கஜேந்திர ஆழ்வானுக்கு ப்ரத்யக்ஷம். இது இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பர். கஜேந்திர மோக்ஷம் நிகழ்ந்த இடம் இதுவே என்பர்.

மார்க்கமும் வசதிகளும்.—B. & N. W. Ry. Sonepur Jn. சோனேபூர் ஜங்ஷன் ஸ்டேஷனுக்கு வடக்கே கங்கைமா நதியும் கண்டகி நதியும் சேருமிடத்தில் இருக்கிறது. வண்டிகளுண்டு தர்மசாலைகளிருக்கின்றன. இது ஒரு பெரிய யாத்திரா க்ஷேத்திரம் இங்கு கார்த்திகை பௌர்ணமியை இறுதியாகக் கொண்ட பத்துநாள் மேலா உற்சவம் நடக்கிறது. இந்த காலத்தில் இங்கு கூடும் சந்தைக்குச் சமானமானது உலகில் எங்கும் இல்லையாம்.

## 26. நாதத்து வாரம்.

ப்ரபாவம்.—இது பிரசித்திப்பெற்ற விஷ்ணுக்ஷேத்திரம். பூர்வம் மதுரையில் பிரதிஷ்டிக்கப்பட்டு அர்ச்சித்து வந்த ஸ்ரீகிருஷ்

ணமூர்த்தி விக்கிரஹம் ஒருகாரண விசேஷத்தால் இவ்விடத்திற்கு எடுத்து வந்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதுவைகுண்டமாகவே இப்போது விளங்குகிறது. இந்த க்ஷேத்திர எல்லைக்குள் யாரும் எவ்விதஜீவவதையும் எக்காரணத்தாலும் என்றும் செய்யக்கூடாது.

மார்க்கமும் வசதிகளும்.—பம்பாயிலிருந்து துவாரகைக்குப் போகும் ரயில்பாதையில் 403-வதுமைலிலுள்ள (வத்துவான்—வங்கனர் ஜங்ஷன்களுக்கு மத்தியில்.) Muli மியூலிஸ்டேஷனுக்குத் தெற்கே 1-மைலிலிருக்கிறது. வண்டிகளும் தர்மசாலைகளும் இருக்கின்றன.

## 27. மயிலாப்பூர்.

ப்ரபாவம்.—மயூரக்ஷேத்திரம், ஆதிகேசவப் பெருமாள், மயூரநாதன், மயூரவல்லித்தாயார், மயூரவிமானம், மயூர தீர்த்தம், மணிகைரவவாவி, என்னும் சந்தான தீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், சிவபிரானுக்கு கபாலவிமோசனம் செய்தவர், பிரஹ்மானந்தமுனிவருக்கு ப்ரத்யக்ஷம். பேயாழ்வார்அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது சென்னைக்குத் தென்கிழக்கே 3-மைலிலுள்ள திருவல்லிக்கேணிக்கு தெற்கே 2-மைலில் இருக்கிறது. வண்டிகளும் டிராம்வண்டிகளுமுண்டு, சத்திரமும் ஹோட்டலுமிருக்கின்றன. சந்நிதியில் தேசாந்தரிகளுக்கு பிரசாதம் கிடைக்கும்.

## 28. திருமழிசை.

ப்ரபாவம்.—மஹீசாரக்ஷேத்திரம், ஜகந்நாதப் பெருமாள் திருமங்கைவல்லித் தாயார், ஜகதாநந்தவிமானம், பிருகு தீர்த்தம் கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், பிருகு மஹரிஷிக்கும் மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம், திருமழிசையாழ்வார் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—ஆவடிஸ்டேஷனுக்கு தென்மேற்கே 6-மைலிலுள்ள பூவிருந்தவல்லியை யடைந்து பின்னும் 2-மைல் தூரம் மேற்கே சென்றால் இத்தலத்தை யடையலாம். வண்டிகளுண்டு. ஹோட்டலில்லை. ராமாநுஜகூடமிருக்கிறது. சந்நிதியில் சொல்லிவைத்தால் பிரசாதம் கிடைக்கும்.

## 29. திருவஞ்சிக்களம்.

ப்ரபாவம்.—கண்ணன் நாராயணன் சந்நிதி, குலேசகராழ்வார் அவதாரஸ்தலம். கண்ணன் சந்நிதி மிகப்ரபலமாகயிருந்தும் ஆழ்வார் விக்கிரஹம் தனியாக ப்ரதிஷ்டையில்லை.

மார்க்கமும் வசதிகளும்.—S. I. R. சோரனூர் கொச்சிபாதையிலுள்ள இருஞாலக்கடை ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே 4-மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். இது ஒரு பிரபலமான பாடல் பெற்றுள்ள சிவஸ்தலம். வண்டிகளுண்டு, சத்திரமிருக்கிறது.

## 30 மண்டங்குடி.

ப்ரபாவம்.—கல்யாண ரங்கநாதன் சந்நிதி, தொண்டரடிப்பொடியாழ்வார் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது கபிஸ்தலத்துக்கு வடகிழக்கே 4-மைலிலும், புள்ளம் பூதங்குடிக்கு மேற்கே 1-மைலிலுமிருக்கிறது. பாபநாசம் ஸ்டேஷனிலிருந்து கபிஸ்தலம் 2-மைல். வண்டிகளில்லை, சத்திரமில்லை. பிரசாதம் பூச்சியம். இது வெகு சிறிய கிராமம். சந்நிதியும் குறுகியது.

## 31. குறையலூர்.

ப்ரபாவம்.—லக்ஷ்மிநரசிம்மன் சந்நிதி, திருமங்கையாழ்வார் அவதார ஸ்தலம். சந்நிதிமிகச்சிறியது. உத்சவ விக்கிரஹாதிகள் ஒன்று மில்லை.

மார்க்கமும் வசதிகளும்.—இது திருவாலி திருநகரிக்கு தென் கிழக்கே ஒருமைலிலிருக்கிறது. தை அமாவாசையின்று ஆழ்வார் இங்கு எழுந்தருளுவர். இது திருநகரியைச் சேர்ந்தது. வயல்மத்தியிலிருக்கிறது.

## 32. செங்கநல்லூர்.

ப்ரபாவம்.—ஸ்ரீநிவாசன் சந்நிதி. பெரியவாச்சான் பிள்ளை அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது திருவெள்ளியங்குடிக்கு வடக்கே ஒரு மைலிலிருக்கிறது. இது ஒரு சிறியகிராமம். வரப்பு மார்க்கமாகையால் வண்டிபோகாது. திருவெள்ளியங்குடி மார்க்கத்தைக்காண்க.

### 33. பூவிருந்த வல்லி.

ப்ரபாவம்.—வரதராஜப் * பெருமாள், புஷ்பவல்லித்தாயார், புஷ்பகவிமாநம், கருடபுஷ்கரணி, மேற்கேதிருமுகமண்டலம் நின்ற திருக்கோலம், கஜேந்திரதாசருக்கு ப்ரத்யக்ஷம். திருக்கச்சி நம்பி அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது ஆவடி ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலைமார்க்கமாய் 6-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு, சத்திரமும் ராமாநுஜ கூடமும் ஹோட்டலுமிருக்கின்றன. சந்நிதியில் தேசாந்திரிகளுக்கு பிரசாதம் உண்டு. இதற்கு மேற்கே 2-மைலில் திருமழிசை இருக்கிறது.

### 34. பச்சைப்பெருமாள் கோயில் (பூவிருந்தவல்லிபேட்டை.)

ப்ரபாவம்.—பச்சைவாரணப் பெருமாள், அமிர்தவல்லித் தாயார், தர்மவிமாநம், தர்ம புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், தரும புத்திரருக்கு ப்ரத்யக்ஷம். முதலியாண்டான் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது பூவிருந்தவல்லிக்கு மேற்கே ஒரு மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திர முதலியவையில்லை. ஆனால் தங்குவதற்கு சௌகரியமுண்டு, சிறிய கிராமம்.

### 35. கூரம்.

ப்ரபாவம்.—ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி. கூரத்தாழ்வார் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது காஞ்சிபுரத்துக்கு மேற்கிலுள்ள, ஈஞ்சம் பாக்கம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒருமைலிலிருக்கிறது. காஞ்சீபுரத்துக்கு வடமேற்கே 6—மைலிலிருக்கிறது. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும், சௌகிரியங்கள் உண்டு.

### 36. மதுரமங்கலம்.

ப்ரபாவம்.—வைகுண்டப் பெருமாள் சந்நிதி. எம்பார் அவதாரஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்—இது திருவள்ளூருக்கு மேற்கிலுள்ள கடம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து தெற்கே 2—மைலிலும், ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து 9—மைலிலுமிருக்கிறது, மாட்டு வண்டிகள் கிடைக்கும். சௌகரியங்கள் கிடையா. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 37. குருகைக்காவலப்பன் கோயில்.

ப்ரபாவம்.—ஸ்ரீராமன் சந்நிதி,* ஸ்ரீமந்நாத முனிகள் திருநாட்டுக் கெழுந்தருளிய தலம். குருகைக் காவலப்பனுக்கு திருவவதாரஸ்தலம் திருக்குருகூ ராயினும் அவர் தமது ஆசாரியர் திருப்பள்ளியில் கைங்கர்ய நிரதராய் இங்கு வர்த்தித்திருந்தாராகையால் குருகைக்காவலப்பன் கோயில் என்று பிரசித்தமாயிற்று.

மார்க்கமும் வசதிகளும்—சிதம்பரத்துக்கு தென்மேற்கே 16-மைலிலிருக்கும் காட்டுமன்னார் கோயிலையடைந்து பின்னும் 6-மைல் தென்மேற்கே கற்சாலைமார்க்கமாய்ச்சென்றால் இத்தலத்தை அடையலாம். தபால்வண்டி யுண்டு. சந்நிதியில் பிரசாதம்கிடைக்கும்.

## 38. தொண்டனூர்.

ப்ரபாவம்.—நம்பி நாராயணன் சந்நிதியும் க்ருஷ்ணஸ்வாமி சந்நிதியும் நரசிம்மஸ்வாமி சந்நிதியும் இருக்கின்றன. ஸ்ரீராமாநுஜர் ஜைனர்களை வாதத்தில் வென்று அவர்களுக்கு விஸ்வரூபத்தை காண்பித்தத் தலம். தொண்டனூர் நம்பி அவதாரஸ்தலம். இங்கிருந்துதான் உடையவர் திருத்துழாய் குறிப்பின் வழியே திருநாராயணபுரம் சென்று திருநாரணனைப்ரதிஷ்டித்தது.

மார்க்கமும் வசதிகளும்.—இது French Rocks பிரஞ்சுராக் ஸ்டேஷனுக்கு கிழக்கே 8 மைலிலிருக்கிறது. இவ்வூருக்குப்போக மேல்கோட்டையிலேயே வண்டிகளைப் பேசிக்கொள்ளவேணும், வண்டிக்காரர்கள் வெகுமுருடர்கள், சத்திரம் கிடையாது. சந்நிதியில் சமையல் செய்துகொள்ளலாம் செய்துங்கொடுப்பார்கள். ஜலம் பரிசுத்தமானது.

## 39. மிதுனசாலக்கிராமம்.

ப்ரபாவம்.—இங்கு நரசிம்மஸ்வாமி சந்நிதியும் ஸ்ரீமத் உடையவர் திருப்பாத சந்நிதியும் ஸ்ரீபாத தீர்த்த குளமும் இருக்கின்றன.

மார்க்கமும் வசதிகளும்.—(1) இது மைசூருக்கு கிழக்கே 36-மைலிலிருக்கிறது. இதற்கு தொண்டனூரிலிருந்து இடத்தளிவழியாய் வந்து சஞ்சல கட்டாவில் தங்கி (இங்கு ராமன் சந்நிதியிருக்கிறது தளிகைக்குச் சொன்னால் செய்து கொடுப்பார்கள். காவேரி சமீபத்திலிருக்கிறது. இங்கு அதிகநாளிருந்தால் சூலைம்வயிறும் ஜுரமும் வரும்.) அங்கிருந்து மிதுனசாலக்கிராமம் போகலாம். சத்திரம் கிடையாது சந்நிதியில் பிரசாதம் கஷ்டம். ½-மைலில்

ஏடாரியில் நரசிம்மன் சந்நிதியும் உடையவர் சந்நிதியுமிருக்கின்றன. ஜலம்கஷ்டம். கடின யாத்திரை.

## 40. சிங்கப்பெருமாள் கோயில்.

ப்ரபாவம்.—பாலகிரி, உக்ரநரசிம்மஸ்வாமி, ப்ரஹ்லாதவரதர் அஹோபிலவல்லித் தாயார், ப்ரணவகோடி விமானம், சித்தபுஷ்கரணி கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், சாபாலி மஹருஷிக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது செங்கற்பட்டுக்கு வடக்கே 5-மைலிலுள்ள சிங்கப்பெருமாள்கோயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே ½-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு, சத்திரமிருக்கிறது. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 41. வேளுக்கைச் சிங்கப்பெருமாள் கோயில்.

ப்ரபாவம்.—அழகியசிங்கப்பெருமாள், அம்ருதவல்லித்தாயார், ஹேமவிமானம், சிம்ம தீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். ப்ரஹ்லாதாழ்வாருக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது சின்னகாஞ்சீபுரம் விளக்கொளி கோயிலுக்குத் தெற்கே ½-மைலிலிருக்கிறது. "மன்னுமதிட்கச்சி வேளுக்கையாளரியை" என்னும் திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம் இத்திருப்பதிக்கே என்பர், இவ்வூரிலுள்ளார்.

## 42. பச்சை வண்ணர் கோயில்.

ப்ரபாவம்.—பச்சைவண்ணப்பெருமாள், மரகதவல்லித்தாயார் மரகதவிமானம், பிருகுதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பிருகு மஹருஷிக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—இது பெரிய காஞ்சீபுரத்தில் பவழ வண்ணர் சந்நிதி வீதியின் மேற்புறத்திலிருக்கிறது. (காஞ்சீபுரத்தைப் பார்க்க).

## 43. திருமுக்கூடல்.

ப்ரபாவம்.—வெங்கடேசப் பெருமாள், அலர்மேல் மங்கைத் தாயார், சேஷவிமானம், திருமுக்கூடல் தீர்த்தம், வடக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பிருகு மார்க்கண்டேய முனிவர்

களுக்கும், தொண்டைமான் சக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷயம். பாலாறு, செய்யாறு, வேகவதி, என்னும் மூன்று நதிகள் சேருமிடமாகையால் திருமுக்கூடல் எனப் பெயராயிற்று. இங்கு ஸ்நாநம் விசேஷம்.

**மார்க்கமும் வசதிகளும்.**—செங்கற்பட்டுக்கு வடமேற்கிலுள்ள பழைய சீவரம் ஸ்டேஷனுக்கு தென்மேற்காக $1\frac{1}{2}$-மைலிலிருக்கிறது கஞ்சி வரதராஜப்பெருமாள், சங்கராந்தி பரிவேட்டை உற்சவமாக இங்கு எழுந்தருளுவர். அதிக அழகான உற்சவம்.

## 44. மதுராந்தகம்.

**ப்ரபாவம்.**—கோதண்ட ராமஸ்வாமி, ஜானகிப்பிராட்டியார் மந்திரவிமாநம், மந்திரவாவி தீர்த்தம். மகிழவிருக்ஷம், தெற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், விபாண்டக மஹருஷிக்கு ப்ரத்யக்ஷம். ஸ்ரீமத் உடையவர், பெரியநம்பிகளிடம் பஞ்சசம்ஸ்காரம் பெற்றுக்கொண்டதலம்.

**மார்க்கமும் வசதிகளும்.**—இது செங்கற்பட்டுக்குத் தெற்கே 15-மைலிலுள்ள மதுராந்தகம் ஸ்டேஷனுக்கு வடமேற்கே ஒரு மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு, சத்திரமும் ஹோட்டல்களுமிருக்கின்றன. சந்நிதியில் ப்ரசாதம் கிடைக்கும்.

## 45 பொன்னேரி.

**ப்ரபாவம்.**—கரிக்ருஷ்ணப் பெருமாள். சுந்தரவல்லித்தாயார். சுந்தரவிமாநம் சுந்தரபுஷ்கரணி அரணிநதி, வடக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பரத்துவாசருஷிக்கு ப்ரத்யக்ஷம்.

**மார்க்கமும் வசதிகளும்.**—இது M. S. M. Ry. பொன்னேரி ஸ்டேஷனிலிருந்து கற்சாலைமார்க்கமாய் 2-மைலிலிருக்கிறது. வண்டிகளுண்டு, சத்திரமும் ஹோட்டலு மிருக்கின்றன. இங்கு சித்திரை மாதத்தில் கருடவாஹனனுக்கும் விருஷபவாஹனனுக்கும் சந்திப்பு உற்சவம் நடக்கிறது.

## 46. திருச்சானூர்.

**ப்ரபாவம்.**—வெங்கடாசலபதி, அலர்மேல் மங்கைத்தாயார், ஸ்ரீநிவாசவிமாநம், பத்மசரசு சொர்ணமுகி நதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், சூரியனுக்கும், தேவமுனிக்கணங்களுக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—ரேணுகுண்டா ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலைமார்க்கமாய் 5-மைலிலும், திருச்சானூர் ஸ்டேஷனிலிருந்து தெற்கே 2-மைலிலும், திருப்பதி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 3-மைலிலுமிருக்கிறது. வண்டிகளுண்டு. சத்திரங்கள் பலஇருக்கின்றன. சந்நிதியில் ப்ரசாதம்விசேஷம்.

## 47. நாராயணவனம்.

ப்ரீபாவம்.—கல்யாண வேங்கடபதி, பத்மாவதி, பத்மஸரசு, கல்யாணவிமாநம், கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம் ஆகாச மஹாராஜனுக்கு ப்ரத்யக்ஷம். கிருதயுகத்தில் ராமபிரானை மணம் செய்துகொள்ள விரும்பிய சாயாசீதை அவர் வாக்களித்த வண்ணம் இங்கு ஆகாசராஜனுக்கு பத்மாவதி என்னும் பெண்ணுகப் பிறந்து திருவேங்கடமுடையானை பாணிக்கிரஹணம் செய்து கொண்ட ஸ்தலம்.

மார்க்கமும் வசதிகளும்.—ரேணுகுண்டா ஸ்டேஷனுக்கு தெற்கே 14-மைலிலிருக்கும் புத்தூர்ஸ்டேஷனிலிறங்கி தென்கிழக்காக 3-மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். சத்திரமில்லை, சந்நிதியில் பிரசாதம் கஷ்டம். வண்டிகளுண்டு.

## 48. குணசேகரம்.

ப்ரபாவம்.—ஸ்ரீநிவாசப்பெருமாள், அலர்மேல்மங்கைத்தாயார் அஷ்டாங்க விமாநம், பிஞக புஷ்கரணி, அகண்டகாவேரி, கிழக்கே திருமுக மண்டலம். நின்றதிருக்கோலம் குணசீல மஹாருஷிக்கு ப்ரத்யக்ஷம்;இத்தலம் திருச்சிஞப்பள்ளி ஜில்லாவுக்கு திருவேங்கடம் என்னும் திருப்பதிப்போல் விளங்குகின்றது.

மார்க்கமும் வசதிகளும்.—இது திருச்சிகோட்டை ஸ்டேஷனுக்கு 9-மைலிலிருக்கும் எலமனூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே 1–மைலிலிருக்கிறது. ஸ்ரீரங்கத்திலிருந்து கொள்ளிடம் வடகரையே 9–மைல் மேற்கே சென்றால் இத்தலத்தை யடையலாம். வண்டிகள் கிடையா, ஆற்றுக்குப் பரிசல் உண்டு, சத்திரங்களில்லாவிடினும் சௌகரியமுண்டு. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

## 49. கிஷ்கிந்தை.

ப்ரபாவம்.—சீதாநாயகன் சந்நிதியும், நரசிம்மஸ்வாமி சந்நிதியுமிருக்கின்றன. இங்கு ஸ்ரீராமபிரான் மாருதியைக் கண்டு அவர்

வாயிலாக சுக்ரீவனை தோழமைகொண்டு, வாலியைக்கொன்று தேவி யைத்தேட வானர சேனையை விடுத்த தலம். இதற்கு சமீபத்தில் பம்பை சரஸும் இருசியமுக மலையுமிருக்கின்றன.

மார்க்கமும் வசதிகளும்.—இது பல்லாரிக்கு மேற்கிலுள்ள Hospet. ஓஸ்பட்ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 8—மைலில் துங்க பத்திரா நதி தீரத்திலிருக்கிறது. யாத்திரை வாசிகளுக்கு எல்லா சௌகரியங்களு மிருக்கின்றன. இதற்கருகில் ஹம்பிவிரூபாக்ஷ மென்னும் பெரிய சிவஸ்தலமிருக்கிறது.

## 50. பிந்துமாதவம் (ஸ்ரீகாசி).

ப்ரபாவம்.—பிந்துமாதவப்பெருமாள், மாதவிதேவி, ஆனந்த வல்லித்தாயார், தாரகவிமாநம், மணிகர்ணிகை, பஞ்சநதி, ஞான வாவி, கங்கை முதலிய தீர்த்தங்கள். புஜங்க சயனம், கிழக்கே திரு முக மண்டலம், சிவபிரானுக்கு ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்.—O. R. R. & E. I. R. கூடுகிற (Mogalserai) முகல் சிராய் ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து வட மேற்கே 7-மைலில் காசி க்ஷேத்திர மிருக்கிறது. இக்காசிக்கு Benares City, Benares Contonement என்று இரண்டு ஸ்டே ஷன்களிருக்கின்றன. ராஜ காட்டிலிருக்கிற ஸிடி ஸ்டேஷனில் தான் யாத்திரைக்காரர்கள் இறங்கவேண்டும். காசியானது கங்கை யின் மேலைக்கரையிலிருக்கிறது. வண்டிகளுண்டு, சத்திரங்களும் தர்மசாலைகளும் பலவிருக்கின்றன. நாட்டுக்கோட்டையார் சத்தி ரங்களும் தர்மங்களும் விசேஷம்.

இக்காசி 18—சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஒரு விநோதநகர். இங்கு பார்க்கத்தகுந்தது, சௌக்பஜார் என்னும் ஹரிசந்திரபஜார், இதைப் பார்த்த மாத்திரத்தில் யாவருக்கும் யாவற்றையும் வாங்க வேண்டுமென்னும் பேராசை ஜனிக்கும். விஜய நகர முதலிய அரசர்களின் அரண்மனைகள், கபீர்தாஸர் முதலிய பக்தர்களின் மடாலயங்கள், சிந்தியா மஹாராஜா நாட்டுக்கோட்டையார் அன்ன சத்திரங்கள், கண்டோன்மெண்ட் ஸ்டேஷன், கலெக்டர் ஆபீஸ், சிங்காரத் தோட்டங்கள், சென்ட்ரல் இந்து காலேஜ், முதலியவை கள் இருக்கின்றன.

## ஸ்ரீகாசி க்ஷேத்திர விமரிசம்.

அயோத்தியை, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை துவாரகை, என்னும் முத்திநகர் ஏழில் இது ஒன்று. முத்திநகர்களெல்லாம் முகுந்தனது க்ஷேத்திரங்களே. இந்த காசி நகரம் பூர்வத்தில் விஷ்ணு க்ஷேத்திரமாயிருந்தது என்றும், பிறகு அது கேசவப் பிரானால் கங்காதரனுக்குக் கொடுக்கப் பட்டதென்றும் பெரியோர் கொள்கை. கங்கையின் வடகரையிலுள்ள இந்தக்காசி க்ஷேத்திரம் பார்வதியோடு வசிப்பதற்கு பரமசிவனால் படைக்கப் பட்டதென்று காசி காண்டம் கூறும். இருவினையுந் தொலைந்து உயிர்கள் வீடுபெறவெண்ணி இவ்வாரணாசி முகுந்தனாலே ஆதியில் கற்பிக்கப்பட்டு பிறகு கபாலிக்கு கொடுத்தருளப் பெற்றதென்று நாரதீய புராணம் முப்பத்து நான்காவது அத்தியாயம் கூறும்.

அது சுருக்கமாக இங்கு மொழி பெயர்க்கப்பட்டது. ருக்குமாங்கதன் சரித்திரத்தில் அவனது பத்தினி சந்தியாவளி தனது பதியை வருத்தும் மோகினிக்கு பலகதைகளைச்சொல்லி வருமிடத்து தான் கன்னிகையாக பிறந்தகத்தி லிருந்தபோது ஒரு காஷ்டத்திலிருந்து ஒரு புழு வெளிப்பட்டு உடனே காஷ்டேளா என்ற பெயரோடு, ஒரு பெண்ணாகி எனக்குச் சொல்லியகதையை உனக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லுகின்றாள். "உயிரைத் தேடிவரும் நமனைப்போல் ஓடிவருகின்ற அரக்கனுக்கு, அஞ்சிய அரக்கி வாணிகம் செய்துகொண்டு ஆங்கு வந்த பிராமணன் ஒருவனைப் பார்த்து இம்மரத்தில் தொங்குகின்ற சத்தியை எடுத்து பரமதுஷ்டனான அந்த அரக்கன் மேலே விடு என்றாள்.

அப்பிராமணனும் அவளுரைத்தவாறு செய்தான். அச்சூலம் அவனைக் கொன்று இந்திரனிடம் சென்றது. உடனே அரக்கி அப்பிராமணனைத் தன்னோடு கூடி தேவ மனுஷபோகங்களை அடைக என்று ஒரு குகைக்கு அழைத்துக்கொண்டு போய், ஆங்கு மஞ்சத்தில் படுத்திருந்த காசிராஜன் புதல்வியாகிய ரத்நாவளியை அந்த பிராமணனுக்குக் காண்பித்தாள். இவள் எந்த க்ஷேத்திரம் தன்னுடைய மஹாபாதகங்கள் எல்லையைக் கடந்து உள்ளே செல்லப் பெறுவதில்லையோ அந்த க்ஷேத்திரமாகிய ஸ்ரீகாசியிலிருந்து விவாகத்தின் பொருட்டு சற்றுமுன்னே நீ கொன்ற எனது பர்த்தாவாலே கொண்டு வரப்பட்டவள். இவளும் நானும் உமக்கு உடன்

பட்டோம், எங்களை கைவிடாமல் நீர் பரிக்க வேணும் என்று வேண்டிக்கொண்டாள்.

அப்போது அந்தபிராமணன் அச்சமுற்று மங்கையரைநேசிக்க லாகாதென்று நீதிநூல் கூறுகின்றது. என்னைக் காதலித்து உன்னை மணந்த மணாளனை க்கொல்வித்தாய், என்னிலும் அழகு மிகுந்த ஒருவனைக் காணில் என்னைக் கொன்று தின்பாய். விதிவசத்தால் உன்னிடம் அகப்பட்டுக் கொண்டேன் என்று சொன்னான். அரக்கி, ஏ அந்தணரே! என் கணவன் என்னை இகழ்ந்து இந்த ரத்தினாவளியை கொண்டு வந்தானாகையாலே அவனைக் கொல்வித்தேன். நீர் என்னை நட்பியிருந்தால் உம்மைக்கொல்ல மாட்டேன். நம்பினவரை மாய்த்தால் ப்ரம்மஹத்தி தோஷம் உண்டாகும் என்பர். நீர் சிறிதும் அஞ்சவேண்டாம் என்று உறுதி கூறி, அவ்வரக்கி தான் ஒரு பெண் யானையாகி தன் பர்த்தாவையும், ரத்தினாவளியையும், மற்றசாமக்கிரிகைகளையும் தான் முதுகில் சுமந்துகொண்டு மூன்று முகூர்த்த காலத்தில் காசி க்ஷேத்திரத்துக்கு வந்தாள். ஏ வேதியரே, இக்காசிமாநகரம் பாபவிருக்ஷத்தை சேதிக்கவமைந்த கோடாரியாகும், தீவினையால் தீங்குறும் உயிர்களுக்கு நற்கதியைக் கொடாநின்ற இந்த க்ஷேத்திரம் இக்காலத்தில் சிவஸ்தலமாயிருக்கின்றது. அவைஷ்ணவ க்ஷேத்திரத்தில் முத்திகிடைக்காது என்பர் ஆரியர். ஆதலால் இது ஆதியில் விஷ்ணுஸ்தலமென்று புராணங்களாலே சொல்லப்படுகிறது. திரிபுராந்தகனாகிய சிவபிரான் பிரம்மஹத்தியினால் பிடிக்கப்பட்டு இந்த வைஷ்ணவ க்ஷேத்திரத்தில் பிரவேசித்ததும், பிரமஹத்தி இதனுள் புகாது. விருபாக்ஷனை விட்டு எல்லைக்கப்புறம் நின்றது. உடனே சங்கரன் அக்காலத்தில் இங்கு எழுந்தருளியிருந்த கேசவப்பிரானைத் திருவடி தொழுது ஸ்வாமி உம்முடையக்ஷேத்திரத்துள் நான்வர ப்ரம்மஹத்தி என்னை விட்டு அங்கு நிற்கின்றது. இந்த க்ஷேத்திரத்தைக் கடந்து போவேனேயாகில் தவறாது என்னை அது பிடித்துக்கொள்ளும், சந்தேகமில்லை. தேவரீர் எனக்கு இந்த க்ஷேத்திரத்தை தானம் செய்தருளவேண்டும், இங்கு நான் வசிப்பேனேயாகில் ப்ரம்மஹத்தியால் பீடிக்கப்படாதிருப்பேன், ஜனங்களாலும் நன்கு பூஜிக்கப்படுவேன், கருடத்துவஜரான நீர் எனக்கு ப்ரசன்னராகவேண்டும், என்று பிரார்த்தித்தார். திருமகள் காந்தன் எதிர்த்தோன்றி இக்காசியை சிவபிரானுக்கு கொடுத்தருளினார். அந்தணரே! அது

மூதல். இது சைவக்ஷேத்திரமாயிற்று. இது வைஷ்ணவ க்ஷேத்திரமென்று புராணங்களன்றி பெரியோர்களும் மொழிவார்கள்.

மகாபாதகம் செய்தவனாயினும் இந்த க்ஷேத்திரத்தில் இறப்பின் மோக்ஷமடைவான். கருமங்களை நாசஞ்செய்து முக்தி அளிப்பதற்காகவே அச்சுதப்பிரானாலே இந்த க்ஷேத்திரம் ஆதியில் கற்பிக்கப்பட்டது என்றாள்." அகஸ்தியர் விந்தத்தையடைந்த அத்தியாயத்தில்,

"மூவரிருப்பிடமாய்முகிலூர்திமுதற்றேவர்
மேவருதற்கரிதாயருண்முத்தியின்வீடாய்ப்
பாவமகற்றுறுகாசியின்வாழ்வுபடைத்தோர்கள்
யாவரவர்க்கரிதாயவிழுப்பொருள்யாதேயோ"

ஸ்ரீகாசி திரிமூர்த்திகளுக்கும் ஸ்தானமென்றும் முத்திநகர் ஏழனுள் காசியில் வாழ்வுற்றோர் யாதானோர் என்றும் முத்திக்கிருப்பிடமென்பதும் இப்பாட்டால் யாவருக்கும் ஒப்பமுடிந்தது.

"இத்தலையெய்தியிறக்குநர்யாருமிளைப்பாற
வுத்தரியங்கொடுமாதுமைவீசிடவுமையோர்பால்
வைத்தவரும்பொருண்மேவருதாரகமறையோதி
முத்தியளித்திடுமிப்பதியார்விடமுயல்வாரே."

ஸ்ரீகாசியில் உயிர்துறப்போர் இளைப்பாற உமாதேவி உத்தரியத்தால் வீசிட சிவபெருமான் தாரகமந்திரமோதி முத்தியளிக்கின்றனன் என்றதற்கேற்ப.

"ஒளிவதானகாசிமீதுவந்துதங்குவோர்க்கெலாம்
வெளியதான சோதிமேனி விசுவநாதனானவன்
தெளியுமங்கையுடனிருந்து செப்புகின்ற தாரகம்
வெளியதோரிராம ராமராம மிந்தநாமமே"

என சிவவாக்கியரும், காசியில் மறிப்போரது செவியில் அண்ணல் சிவபிரானாலோதப்படுவது தாரகமாகிய ராமநாமமென" அகஸ்திய ராமஹர சங்கீதை கூறு மாறு கூறி, தாரகமந்திரம் இராமநாம மந்திரமென்றே விளங்க உறுதி கூறினர்.

## 51. சேது மாதவம் (இராமேச்சுரம்)

ப்ரபாவம்:—சேதுமாதவப் பெருமாள், மாதவ நாச்சியார், கருணைவல்லித் தாயார், ஆநந்த விமானம். மாதவதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்க சயனம், பிரம ருத்திரேந்திராதி தேவர்களுக்கும், குணநிதி என்னும் பாண்டியனுக்கும் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதிகளும்:—இது ராமேச்வர சிவாலயத்தின் முதல் பிரகாரத்தி லிருக்கிறது. ராமேச்வரம் ஸ்டேஷனுக்கும் ஆலயத்துக்கும் ½-மைல் தூரம். இதற்கு வடக்கே ஒரு-மைலில் கந்தமாதன பர்வத மிருக்கிறது. மலைமிசை ஸ்ரீராமமூர்த்தியின் பாதங்களையுடைய ஒருசிறிய சந்நிதியிருக்கிறது. கிழக்கே 18-மைலில் திருவணை என்னும் சேதுஸ்நான கட்டம் இருக்கிறது. இது தனுஷ்கோடி ஸ்டேஷனுக்கு சமீபத்திலிருக்கிறது.

## 52. உடுப்பி

ப்ரபாவம்:—இது ஒரு பிரபலமான கிருஷ்ணஸ்வாமி க்ஷேத்திரம். ஸ்ரீமத்துவாச் சாரியார் அவதரித்த ஸ்தலம். அவர் தமது சித்தாந்தத்தை சிஷியர்களுக்கு உபதேசித்த இடமும் இதுவே. இது மத்துவ மதஸ்தர்களுக்கு, ஸ்ரீகாசியைப் போன்றது. இங்கு மத்துவர்களுக்கு 8-மடங்களிருக்கின்றன. ஆசார சீலமுள்ள ஒவ்வொரு மத்துவரும் இவ்வுடுப்பி யாத்திரைக்குச் சென்று முத்திராதானம் செய்து கொள்ளாமல் இரார்.

மார்க்கமும் வசதிகளும்:—இது மேலைச் சமுத்திரக்கரையி லுள்ளதொரு க்ஷேத்திரம். மங்களூர் ஸ்டேஷனுக்கு வடக்கே 30 மைலி லிருக்கிறது. சமுத்திரத்தில் ஸ்டீமரிலாவது கரைமார்க்கமாய் வண்டியிலாவது போகலாம். வண்டிகள் சரசமாய்க்கிடைக்கும். 22-வது மைலில் மூத்பித்திரி என்ற பட்டணமிருக்கின்றது. இங்கு ஜைனர்களின் பிரபலமானதேவாலயம் ஒன்று இருக்கிறது. ஆயிரங்கால் மண்டபமுள்ள ஜைன தேவாலயம் இது ஒன்றே. கார்க்கால் என்ற ஸ்தலத்தில் பழைய பௌத்தாலயம் ஒன்றிருக்கிறது. இதிலுள்ள புத்தர் விக்கிரகம் 45 அடி உயரமுள்ளது. இந்த ஸ்தலத்திலேயே வேங்கடரமண ஸ்வாமி ப்ரபல தேவாலய மிருக்கிறது. மங்களூருக்கும் உடுப்பிக்கும் மத்தியில் ஆறுநதங்க ளிருக்கின்றன. பிராமணர்களுக்கு ஊட்டுப் பிரைகளிருக்கின்றன. எவ்வளவுகால மிருந்தாலும் அன்ன மளிப்பார்கள். சகல வசதிகளும் உண்டு.

நாராயணாயநம:

# 108-திருப்பதிகளின் மங்களாசாசன பாசுரத்திரட்டு.

## 1. திருவரங்கம்.

துப்புடையாரையடைவதெல்லாம்சோர்விடத்துத்துணையாவரென்றே, ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தேனானைக்குநீயருள்செய்தமையால், எய்ப்பென்னைவந்துநலியும்போதங்கேதும்நானுன்னைநினைக்கமாட்டேன், அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தேனரங்கத்தரவணைப் பள்ளியானே.

பெரியாழ்வார் திருமொழி 4-10-1.

## 2. உறையூர். 47. திருக்கூடல்.

கோழியும்கூடலும்கோயில்கொண்டகோவலரேயொப்பர்குன்றமன்ன,பாழியம்தோளுமோர்நான்குடையர்பண்டிவர்தம்மையும்கண்டறியோம், வாழியரோவிவர்வண்ணமெண்ணில்மாகடல்போன்றுளர்கையில்வெய்ய, ஆழியொன்றேந்தியோர்சங்குபற்றியச்சோவொருவரழகியவா.

பெரிய திருமொழி. 9-2-5.

## 3. தஞ்சைமாமணிக்கோயில்.

எம்பிரானெந்தையென்னுடைச்சுற்றமெனக்கரசென்னுடைவாணாள், அம்பினாலரக்கர்வெருக்கொளநெருக்கியவருயிர்செகுத்தவெம்மண்ணல், வம்புலாஞ்சோலைமாமதிள் தஞ்சைமாமணிக்கோயிலேவணங்கி, நம்பிகாளுய்யநான்கண்டுகொண்டேன்நாராயணாவென்னும்நாமம்.

பெரிய திருமொழி 1-1-6.

## 4. அன்பில்.

நாகத் தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனா வான்.

நான்முகன் திருவந்தாதி 36.

## 5. கரம்பனூர் 45. திருத்தண்காவூர்.

பேரானைக்குறுங்குடியெம்பெருமானை திருத்தண்கா
வூரானைக்கரம்பனூருத்தமனைமுத்திலங்கு
காரார்திண்கடலேழுமலையேழிவ்வுலகேழுண்டும்
ஆராதென்றிருந்தானைக்கண்டதுதென்னரங்கத்தே.

பெரிய திருமொழி 5-6-2.

## 6. திருவெள்ளறை.

வென்றிமாமழுவேந்திமுன்மண்மிசைமன்னரைமூவெழுகால் [யே
கொன்றதேவநின்குறைகழல்தொழுவதோர்வகையெனக்கருள்புரி
மன்றில்மாம்பொழில்நுழைதந்துமல்லிகைமௌவலின்போதலர்த்தி
தென்றல்மாமணம்கமழ்தரவரு திருவெள்ளறைநின்றானே.

பெரிய திருமொழி 5-3-1.

## 7. புள்ளம்பூதங்குடி.

வெற்பால் மாரிபழுதாக்கி விறல்வாளரக்கர் தலைவன்றன்
வற்பார்திரடோளைந்நான்கும் துணித்தவல்விலிராமனிடம்
கற்பார்புரிசைசெய்குன்றம்கவினார்கூடம் மாளிகைகள்
பொற்பார்மாடமெழிலாரும் புள்ளம்பூதங்குடிதானே.

பெரிய திருமொழி 5-1-4.

## 8. திருப்பேர்நகர்.

கையிலங்காழிசங்கன் கருமுகில்திருநிறத்தன்
பொய்யிலன்மெய்யன்தன் தாளடைவரேலடிமையாக்கும்
செய்யலர்கமலமோங்கு செறிபொழில்தென்திருப்பேர்
பையரவணையான்நாமம் பரவிநானுய்ந்தவாறே.

பெரிய திருமொழி 5-9-1.

## 9. ஆதனூர்.

*** என்னை மனங்கவர்ந்த வீசனை வானவர்தம்
முன்னவனை மூழிக்களத்து விளக்கினை
அன்னவனை யாதனூ ராண்டளக்கு மையனை
நென்னலை யின்றினை நாளையை நீர்மலைமேல்
மன்னு மறைநான்கு மானானை புல்லாணித்
தென்னன் தமிழை வடமொழியை நாங்கூரில்
மன்னு மணிமாடக் கோயில் மணாளனை
நன்னீர்த் தலைச்சங்க நாண் மதியை***

பெரிய திருமடல், 129-132.

## 10. திருவழுந்தூர்.

திருவுக்குந்திருவாகியசெல்வா !
தெய்வத்துக்கரசே ! செய்யகண்ணா !
உருவச்செஞ்சுடராழிவல்லானே !
உலகுண்டவொருவா ! திருமார்பா !
ஒருவற்காற்றியுய்யும்வகையென்றால்
உடனின்றைவரென்னுள்புகுந்து—ஒழியா
தருவித்தின்றிட அஞ்சிநின்னடைந்தேன்
அழுந்தூர்மேல்திசைநின்றவம்மானே.
பெரியதிருமொழி. 7-7-1.

## 11. சிறுபுலியூர்.

கருமாமுகிலுருவா கனலுருவா புனலுருவா
பெருமால்வரையுருவா பிறவுருவா நினதுருவா
திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அருமாகடலமுதே யுனதடியே சரணாமே.
பெரிய திருமொழி. 7-9-9.

## 12. திருச்சேறை.

கண்சோரவெங்குருதிவந்திழிய வெந்தழல்போல்கூந்தலாளை
மண்சேரமுலையுண்டமாமதலாய் வானவர்தம்கோவேயென்று
விண்சேருமிளந்திங்களகடுரிஞ்சு மணிமாடமல்குசெல்வத் [லாரே.
தண்சேறையெம்பெருமான்தாள்தொழுவார்காண்மினென்தலைமே
பெரிய திருமொழி. 7-4-1.

## 13. தலைச்சங்கநாண்மதியம்.

கண்ணார்கண்ணபுரம் கடிகைகடிகமழும்
தண்ணார்தாமரைசூழ் தலைச்சங்கமேல்திசையுள்
விண்ணோர்நாண்மதியை விரிகின்றவெஞ்சுடரை
கண்ணாரக்கண்டுகொண்டு களிக்கின்றதிங்கென்றுகொலோ.
பெரிய திருமொழி. 8-9-9.

## 14. திருக்குடந்தை.

ஆராவமுதேயடியேனுடலம் நின்பாலன்பாயே
நீராயலைந்துகரைய வுருக்குகின்றநெடுமாலே
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே.
திருவாய்மொழி 5-8-1.

## 15. கண்டியூர்.

பிண்டியார்மண்டையேந்திப் பிறர்மனைதிரிதந்துண்ணும்
உண்டியான்சாபந்தீர்த்த வொருவனூர்உலகமேத்தும்
கண்டியூரரங்கம்மெய்யம்கச்சிபேர்மல்லையென்று
மண்டினார், உய்யலல்லால் மற்றையார்க்குய்யலாமே.

திருக்குறுந்தாண்டகம் 19.

## 16. திருவிண்ணகர்.

என்னப்பனெனக்காயிகுளா யென்னைப்பெற்றவளாய்
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன்தனதாள்நிழலே.

திருவாய்மொழி. 6-3-9

## 17. திருக்கண்ணபுரம்.

விடையேழன்றடர்த்து வெகுண்டுவிலங்கலுற
படையாலாழிதட்டப் பரமன்பரஞ்சோதி
மடையார்நீலம்மல்கும்வயல்சூழ்கண்ணபுரமொன்
றுடையானுக்கு, அடியேனொருவர்க்குரியேனோ.

பெரிய திருமொழி. 8-9-3.

## 18. திருவாலி.

படைநின்றபைந்தாமரையோடு அணிநீலம்
மடைநின்றலரும் வயலாலிமணாளா
இடையனெறிந்த மரமேயொத்திராமே
அடையவருளா யெனக்குன்றனருளே.

பெரிய திருமொழி. 11-8-6.

## 19. திருநாகை.

பொன்னிவர்மேனிமரகதத்தின் பொங்கிளஞ்சோதியகலத்தாரம், மின்இவர்வாயில்நல்வேதமோதும்வேதியர்வானவராவர்தோழி, என்னையும்நோக்கியென்னல்குலும்நோக்கி யேந்திளங்கொங்கையும் நோக்குகின்றார், அன்னையென்னோக்கு மென்றஞ்சுகின்றேனச்சோவொருவரழகியவா.

பெரியதிருமொழி. 9-2-1.

## 20. திருநறையூர்.

சினவில்செங்கணரக்கருயிர்மாளச்
செற்றவில்லியென்றுகற்றவர்தந்தம்
மனமுட்கொண்டு—என்றுமெப்போதும்
நின்றேத்துமாமுனியைமரமேழெய்தமைந்தனை
நனவில்சென்றார்க்கும்,நண்ணற்கரியானை
நானடியேன்நறையூர்நின்றநம்பியை
கனவில்கண்டேனின்றுகண்டமையாலென்
கண்ணிணைகள்களிப்பக்களித்தேனே.

பெரியதிருமொழி. 7-3-1.

## 21. நந்திபுரவிண்ணகரம்

தீதறுநிலத்தொடெரிகாலினொடு நீர்கெழுவிசும்புமவையாய்
மாசறுமனத்தினொடுறக்கமொடிறக்கையவையாயபெருமான்
தாய்செறவுளைந்துதயிருண்டுகுடமாடு தடமார்வர்தகைசேர்
நாதனுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகரம்நண்ணுமனமே.

பெரியதிருமொழி 5-10-1.

## 22. இந்தளூர்.

நும்மைத்தொழுதோம் நுந்தம்பணிசெய்திருக்கும்நும்மடியோம்
இம்மைக்கின்பம்பெற்றோ மெந்தாயிந்தளூரீரே
எம்மைக்கடிதாக்கருமமருளி ஆவாவென்றிரங்கி
நம்மையொருகால்காட்டிநடந்தால்நாங்களுய்யோமே.

பெரியதிருமொழி. 4-9-1.

## 23. திருச்சித்திரகூடம்.

மாவாயினங்கம்மதியாதுகீறி
மழைமாமுதுகுன்றெடுத்து.ஆயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த்துலகுண்டமாயன்
குரைமாகழல்கூடும்குறிப்புடையீர்
மூவாயிரநான்மறையாளர் நாளும்
முறையால்வணங்கஅணங்காயசோதி
தேவாதிதேவன்திகழ்கின்றதில்லைத்
திருச்சித்திரகூடம்சென்றுசேர்மின்களே.

பெரியதிருமொழி. 3-2-8.

## 24. காழிச்சீராமவிண்ணகரம்.

ஒருகுறளாயிருநிலம்மூவடிமண்வேண்டி
யுலகனைத்துமீரடியாலொடுக்கி ஒன்றும்
தருகவெனாமாவலியைச்சிறையில்வைத்த
தாடாளன்தாளணைவீர், தக்ககீர்த்தி
யருமறையின்திரள்நான்கும்வேள்வியைந்தும்
அங்கங்களவையாறுமிசைகளேழும்
தெருவில்மலிவிழாவளமும்சிறக்கும் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே.

பெரியதிருமொழி. 3-4-1.

## 25. கூடலூர்.

தாம்தம்பெருமையறியார் தூது
வேந்தர்க்காய வேந்தரூர்போல்
காந்தள்விரல் மென்கலைநன்மடவார்
கூந்தல்கமழும் கூடலூரே.

பெரியதிருமொழி. 5-2-1.

## 26. திருக்கண்ணங்குடி.

வங்கமாமுந்நீர்வரிநிறப்பெரிய வாளரவினணைமேவி,சங்கமாரங்கைத்தடமலருந்திச் சாமமாமேனியென்தலைவன், அங்கமாறைந்துவேள்விநால்வேத மருங்கலைபயின்றுஎரிமூன்றும், செங்கையால்வளர்க்கும்துளக்கமில்மனத்தோர் திருக்கண்ணங்குடியுள்நின்றானே.

பெரியதிருமொழி. 9-1-1.

## 27. திருக்கண்ணமங்கை.

பெரும்புறக்கடலையடலேற்றினைப்
பெண்ணையாணை,எண்ணில்முனிவர்க்
கருள்வரும்தவத்தை முத்தின்திரள்கோவையைப்
பத்தராவியை நித்திலத்தொத்தினை
அரும்பினையலரை யடியேன்மனத்தாசையை
அமுதம்பொதியின்சுவை
கரும்பினைக் கனியைச்சென்றுநாடிக்
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே.

பெரியதிருமொழி. 7-10-1.

## 28. கவித்தலம்.

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கு முள்ளத் தெனக்கு.

நான்முகன் திருவந்தாதி 50.

## 29 திருவெள்ளியங்குடி.

ஆற்றிடைப்பூளைகரந்தனவரந்தையுறக் கடரைக்கர்தம்சேனை, கூற்றிடைச்செல்லக்கொடுங்கணை துரந்த கோலவில்லிராமன்றன்கோயில், ஊற்றிடைநின்றவாழையின்கனிக ளூழ்த்துவீழ்ந்தனவுண்டு மண்டி, சேற்றிடைக்கயல்களுகள்திகழ்வயல்சூழ் திருவெள்ளியங்குடியதுவே.

பெரிய திருமொழி 4-10-6.

## 30 மணிமாடக் கோயில்.

நந்தாவிளக்கேயளத்தற்கரியாய்
நரநாரணனே கருமாமுகில்போல்
எந்தாய் எமக்கேயருளாயெனநின்று
இமையோர்பரவுமிடம் எத்திசையும்
கந்தாரமந்தேனிசைபாடமாடே
களிவண்டுமிழற்றநிழல்துதைந்து
மந்தாரநின்று மணமல்குநாங்கூர்
மணிமாடக்கோயில்வணங்கென்மனனே.

பெரியதிருமொழி. 3-8-1.

## 31. வைகுந்த விண்ணகரம்.

சலங்கொண்டவிரணியனதகல்மார்வங்கீண்டு
தடங்கடலைக்கடைந்தமுதங்கொண்டுகந்தகாளை
நலங்கொண்டகருமுகில்போல்திருமேனியம்மான்
நாடோறும் மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்
சலங்கொண்டுமலர்சொரியும்மல்லிகையொண்செருந்தி
செண்பகங்கள்மணநாறும்வண்பொழிலினூடே
வலங்கொண்டுகயலோடி விளையாடுநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே.

பெரியதிருமொழி. 3-9-1.

## 32. அரிமேயவிண்ணகரம்.

கன்றதனால்விளவெறிந்துகனியுதிர்த்தகாளை
காமருசீர்முகில்வண்ணன்காலிகள்முன்காப்பான்
குன்றதனால்மழைதடுத்துக் குடமாடுகூத்தன்
குலவுமிடம்,கொடிமதிள்கள்மாளிகைகோபுரங்கள்
துன்றுமணிமண்டபங்கள்சாலைகள்தூமறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடுமிகப்பயிலும்சோலை
அன்றலர்வாய்மதுவுண்டங்களிமுரலுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே

பெரியதிருமொழி. 3-10-8.

## 33. திருத்தேவனார் தொகை.

போதலர்ந்தபொழில்சோலைப் புறமெங்கும்பொருதிரைகள்
தாதுதிரவந்தலைக்கும் தடமண்ணித்தென்கரைமேல்
மாதவன்றானுறையுமிடம் வயல்நாங்கை வரிவண்டு
தேதெனவென்றிசைபாடும் திருத்தேவனார்தொகையே.

பெரியதிருமொழி. 4-1-1.

## 34. வண்புருஷோத்தமம்.

கம்பமாகடலடைத்திலங்கைக்குமன் கதிர்முடியவைபத்தும்
அம்பினாலறுத்து அரசவன் தம்பிக்களித்தவனுறைகோயில்
செம்பலாநிரைசெண்பகம்மாதவி சூதகம்வாழைகள்சூழ்
வம்புலாங்கமுகோங்கியநாங்கூர் வண்புருடோத்தமமே.

பெரியதிருமொழி 4-2-1.

## 35. செம்பொன் செய்கோயில்

பேரணிந்துலகத்தவர்தொழுதேத்தும் பேரருளாளனெம்பிரானை
வாரணிமுலையாள்மலர்மகளோடு மண்மகளுமுடன்நிற்ப
சீரணிமாடநாங்கைநன்னடுவுள் செம்பொன்செய்கோயிலினுள்ளே
காரணிமேகம்நின்றதொப்பானைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே

பெரியதிருமொழி. 4-3-1.

## 36. திருத்தெற்றியம்பலம்.

மாற்றரசர்மணிமுடியும் திறலும்தேசும்
மற்றவர்தம்காதலிமார் குழையும், தந்தை
கால்தளையுமுடன்கழல வந்துதோன்றிக்
கதநாகம்காத்தளித்த கண்ணர்கண்டீர்

நூற்றிதழ்க்கொளரவிந்தம் நுழைந்தபள்ளத்
திளங்கமுகின்முதுபாளை பகுவாய்நண்டின்
சேற்றளையில்வெண்முத்தம் சிந்துநாங்கூர்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே.

பெரியதிருமொழி. 4-4-1.

## 37. திருமணிக்கூடம்.

தூம்புடைப்பனைக்கைவேழம் துயர்கெடுத்தருளிமன்னு
காம்புடைக்குன்றமேந்திக் கடுமழைகாத்தவெந்தை
பூம்புனல்பொன்னிமுற்றும் புகுந்துபொன்வரண்டஎங்கும்
தேம்பொழில்கமழுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே.

பெரியதிருமொழி. 4. 5. 1.

## 38. காவளம்பாடி.

தாவளந்துலகமுற்றும் தடமலர்ப்பொய்கைபுக்கு
நாவளநவின்றங்கேத்த நாகத்தின்நடுக்கம்தீர்த்தாய்
மாவளம்பெருகிமன்னு மறையவர்வாழும்நாங்கைக்
காவளம்பாடிமேய கண்ணனேகளைகண்நீயே.

பெரியதிருமொழி. 4-6-1.

## 39. திருவெள்ளக்குளம்.

கண்ணார்கடல்போல் திருமேனிகரியாய்
நண்ணார்முனைவென்றி கொள்வார்மன்னுநாங்கூர்
திண்ணார்மதிள்சூழ் திருவெள்ளக்குளத்துள்
அண்ணா, அடியேனிடரைக்களையாயே.

பெரியதிருமொழி. 4-7-1.

## 40. பார்த்தன்பள்ளி.

கவளயானைகொம்பொசித்த கண்ணனென்றும், காமருசீர்க்
குவளைமேகமன்னமேனி கொண்டகோனென்னானையென்றும்
தவளமாடநீடுநாங்கைத் தாமரையாள்கேள்வனென்றும்
பவளவாயாளென்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே.

பெரியதிருமொழி. 4-8-1.

## 41. திருமாலிருஞ்சோலை.

உனக்குப்பணிசெய்திருக்கும்தவமுடையே னினிப்போயொருவன்
றனக்குப்பணிந்து கடைத்தலைநிற்கை நின்சாயையழிவுகண்டாய்

புனத்தினைக்கிள்ளிப்புதுவவிக்காட்டி யுன்பொன்னடிவாழ்கவென்று
இனக்குறவர்புதியதுண்ணு மெழில்மாலிருஞ்சோலையெந்தாய்.
பெரியாழ்வார் திருமொழி. 5-3-3.

## 42. திருக்கோட்டியூர்.

எங்களெம்மிறையெம்பிரா னிமையோர்க்கு நாயகன் ஏத்தடியவர்
தங்கள் தம்மனத்துப்பிரியா தருள்புரிவான்
பொங்குதண்ணருவிப்புதம்செய்யப்பொன்களேசிதறுமிலங்கொளி
செங்கமலமலரும்திருக்கோட்டியூரானே.
பெரியதிருமொழி. 9-10.I.

## 43. திருமெய்யம்.

பெண்ணாகியின்னமுதம்வஞ்சித்தானைப்
பிறையெயிற்றன்றடலரியாய்ப்பெருகினானை
தண்ணார்ந்தவார்புனல்சூழ் மெய்யமென்னும்
தடவரைமேல்கிடந்தானைப் பணங்கள்மேவி
எண்ணானையெண்ணிறந்தபுகழினானை
யிலங்கொளிசேரரவிந்தம்போன்றுநீண்ட
கண்ணானை கண்ணாரக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடன்மல்லைத்தலசயனத்தே.
பெரியதிருமொழி 2-5-8.

## 44. திருப்புல்லாணி.

வவ்வித்துழாயதன்மேல் சென்றதனிநெஞ்சம்
செவ்வியறியாது நிற்குங்கொல் நித்திலங்கள்
பவ்வத்திரையுலவு புல்லாணிகைதொழுதேன்
தெய்வச்சிலையார்க் கென்சிந்தைநோய்செப்புமினே.
பெரியதிருமொழி 9-4-3.

## 46. திருமோகூர்.

தாளதாமரைத் தடமணிவயற்றிருமோகூர்
நாளுமேவிநன்கமர்ந்துநின் றசுரரைத்தகர்க்கும்
தோளுநான்குடைச் சுரிகுழல்கமலக்கட்கனிவாய்
காளமேகத்தையன்றி மற்றொன்றிலம்கதியே.
திருவாய்மொழி 10-1-1.

## 48. ஸ்ரீவில்லிபுத்தூர்.

மென்னடையன்னம்பரந்துவிளையாடும்வில்லிபுத்தூருறைவான்றன், பொன்னடிகாண்பதோராசையினு லென்பொருகயற்கண்ணிணை துஞ்சா, இன்னடிசிலொடுபாலமுதூட்டி யெடுத்தவென்கோலக்கிளியை,உன்னொடு தோழமைக்கொள்ளுவன் குயிலேஉலகளந்தான் வரக்கூவாய்.

நாச்சியார் திருமொழி 1-5-5.

## 49. திருக்குருகூர்.

ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்மற்றும் யாதுமில்லா
அன்றுநான்முகன்றன்னோடு தேவருலகோடுயிர்படைத்தான்
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள்
நின்றவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்நாடுதிரே.

திருவாய்மொழி 4-10-1.

## 50. துலைவில்லி மங்கலம்.

குமிறுமோசைவிழவொலித்துலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு
அமுதமென்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர்
திமிர்கொண்டாலொத்துநிற்கும் மற்றிவள்தேவதேவபிரானென்றே
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க நெக்கொசிந்துகரையுமே.

திருவாய் மொழி 6-5-2.

திருந்துவேதமும்வேள்வியும் திருமாமகளிரும்தாம்மலிந்
திருந்துவாழ்பொருநல் வடகரைவண்துலைவில்லிமங்கலம்
கருந்தடங்கண்ணிகைதொழுதவந்நாள்துடங்கியிந்நாடொறும்இருந்
திருந்தரவிந்தலோசநவென்றென்றே நைந்திரங்குமே.

திருவாய்மொழி 6-5-8.

## 51. சிரீவரமங்கை.

ஆறெனக்குநின்பாதமேசரணாகத் தந்தொழிந்தாய்உனக்கோர்கைம்
மாறுநானொன்றிலே னெனதாவியுமுனதே
சேறுகொள்கரும்புப்பெருஞ்செந்நெலும் மலிதண்சிரீவரமங்கை
நாறுபூந்தண்டுழாய் முடியாய்தெய்வநாயகனே.

திருவாய்மொழி 5-7-10.

## 52. திருப்புளிங்குடி.

காய்சினப்பறவையூர்ந்துபொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல
மாசினமாலிமாலிமானென் றங்கவர்படக்கனன்றுமுன்னின்ற
காய்சினவேந்தேகதிர்முடியானே கலிவயல்திருப்புளிங்குடியாய்
காய்சினவாழிசங்குவாள் வில்தண்டேந்தியெம்மிடர்கடிவானே
திருவாய்மொழி 9-2-6.

## 53. திருப்பேரை.

நகரமும்நாடும்பிறவும்தேர்வேன் நாணெனக்கில்லையென்தோழி
மீர்காள், சிகரமணிநெடுமாடநீடுதென்திருப்பேரையில்வீற்றிருந்த,
மகரநெடுங்குழைக்காதன்மாயன் நூற்றுவரையன்றுமங்கநூற்ற, நிக
ரில்முகில்வண்ணன்நேமியானென்னெஞ்சம்கவர்ந்தெனையூழியானே
திருவாய்மொழி 7-3-10.

## 54. ஸ்ரீவைகுந்தம். 55. வரகுணமங்கை.

புளிங்குடிக்கிடந்துவரகுணமங்கையிருந்துவைகுந்தத்துள்நின்
று, தெளிந்தவென்சிந்தையகங்கழியாதே யென்னையாள்வாயெனக்
கருளி, நளிர்ந்தசீருலகம்மூன்றுடன்வியப்ப நாங்கள்கூத்தாடிநின்றா
ர்ப்ப, பளிங்குநீர்முகிலின்பவளம்போல் கனிவாய்சிவப்பநீ காணவா
ராயே.

திருவாய்மொழி 9-2-4.

## 56. திருக்குளந்தை.

கூடச்சென்றேனினியென்கொடுக்கேன் கோல்வளைநெஞ்சத்து
டக்கமெல்லாம், பாடற்றொழியவிழந்து வைகல்பல்வளையார்முன்பரி
சழிந்தேன், மாடக்கொடிமதிள் தென்குளந்தைவண்குடபால்நின்ற
மாயக்கூத்தன், ஆடல்பறவையுயர்த்தவெல்போராழி வலவனை யாத்
ரித்தே.

திருவாய்மொழி 8-2-4.

## 57. திருக்குறுங்குடி.

நம்பியைத்தென்குறுங்குடிநின்றஅச்
செம்பொனேதிகழும்திருமூர்த்தியை
உம்பர்வானவராதியஞ்சோதியை
எம்பிரானையென்சொல்லிமறப்பனோ.

திருவாய்மொழி 1-10-9.

## 58. திருக்கோளூர்.

வைத்தமாநிதியாம் மதுசூதனையேயலற்றி
கொத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன
பத்துநூற்றுளிப்பத்தவன்சேர்திருக்கோளூர்க்கே
சித்தம்வைத்துரைப்பார்திகழ்பொன்னுலகாள்வாரே.

திருவாய்மொழி 6-7-11.

## 59. திருவனந்தபுரம்.

கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன நாளும்
கொடுவினைசெய்யும் கூற்றின் தமர்களுங்குறுககில்லார்
விடமுடையரவில்பள்ளி விரும்பினான்சுரும்பலற்றும்
தடமுடைவய லனந்தபுரநகர்ப்புகுதுமின்றே.

திருவாய்மொழி 10-2-1.

## 60. திருவண்பரிசாரம்.

வருவார்செல்வார்வண்பரிசாரத்திருந்த என்
திருவாழ்மார்வற் கென்திறம்சொல்லார்செய்வதென்
உருவார்சக்கரம்சங்குசுமந் திங்கும்மோடு
ஒருபாடுழல்வா னோரடியானுமுளனென்றே.

திருவாய்மொழி. 8-3-7.

## 61. திருக்காட்கரை.

வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்றவென்னையொழிய வென்னில்முன்னம்
பாரித்து தானென்னை முற்றப்பருகினான்
காரொக்கும் காட்கரையப்பன்கடியனே.

திருவாய்மொழி. 9-6-10.

## 62. திருமூழிக்களம்.

பூந்துழாய்முடியார்க்குப் பொன்னாழிக்கையார்க்கு
ஏந்துநீரிளங்குருகே! திருமூழிக்களத்தார்க்கு
ஏந்துபூண்முலைபயந் தென்னிணைமலர்க்கண்ணீர்ததும்ப
தாம்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுரையீரே.

திருவாய்மொழி. 9-7-9.

## 63. திருப்புலியூர்.

அன்றிமற்றோருபாயமென் னிவளந்தண்டுழாய்க்கமழ்தல்
குன்றமாமணிமாடமாளிகைக் கோலக்குழாங்கள்மல்கி
தென்திசைத்திலதம்புரைக் குட்டநாட்டுத்திருப்புலியூர்
நின்றமாயப்பிரான் திருவருளாமிவள்நேர்பட்டதே.

திருவாய்மொழி. 8-9-10.

## 64. திருச்செங்குன்றூர்.

எங்கள்செல்சார்வுயாமுடையமுத மிமையவரப்பனென்னப்பன் பொங்குமூஉலகும் படைத்தளித்தழிக்கும் பொருந்துமூவுருவனெம் மருவன், செங்கயலுகளும்தேம்பணைபுடைசூழ்த்திருச்செங்குன்றூர் திருச்சிற்று, றங்கமர்கின்ற ஆதியானல்லால்யாவர் மற்றென்னமர் துணையே.

திருவாய்மொழி. 8-4-2.

## 65. திருநாவாய்

கோவாகிய மாவலியைநிலங்கொண்டாய்
தேவாசுரம்செற்றவனே திருமாலே
நாவாயுறைகின்ற என்நாரணநம்பீ
ஆவாவடியா னிவனென்றருளாயே.

திருவாய்மொழி. 9-8-7.

## 66. திருவல்லவாழ்.

காண்பதெஞ்ஞான்றுகொலோ வினையேன்கனிவாய்மடவீர்
பாண்குரல்வண்டினொடு பசுந்தென்றலுமாகியெங்கும்
சேண்சினையோங்குமரச் செழுங்கானல்திருவல்லவாழ்
மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்களே.

திருவாய்மொழி. 5-9-6.

## 67. திருவண்வண்டூர்.

வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங்குருகினங்காள்
செய்கொள்செந்நெலுயர் திருவண்வண்டூருறையும்
கைகொள்சக்கரத் தென்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன்காதன்மையே.

திருவாய்மொழி. 6-1-1.

## 68. திருவாட்டாறு.

வாட்டாற்றானடிவணங்கி மாஞாலப்பிறப்பறுப்பான்
கேட்டாயேமடநெஞ்சே கேசவனெம்பெருமானை
பாட்டாயபலபாடிப் பழவினைகள்பற்றறுத்து
நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணினமே.

திருவாய்மொழி. 10-6-2.

## 69. வித்துவக்கோடு.

தருதுயரம்தடாயே லுன்சரணல்லால்சரணில்லை
விரைகுழுவுமலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே
அரிசினத்தாலீன்றதாயகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தேயழும்குழவி யதுவேபோன்றிருந்தேனே.

பெருமாள் திருமொழி. 5-1-

## 70. திருக்கடித்தானம்.

அற்புதன்நாராயண னரிவாமனன்
நிற்பதுமேவி யிருப்பதென்னெஞ்சகம்
நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர்
கற்பகச்சோலைத் திருக்கடித்தானமே.

திருவாய்மொழி 8-6-10.

## 71. திருவாறன்விளை.

ஆகுங்கொல்ஐயமொன்றின்றி யகலிடமுற்றவும் ஈரடியே
ஆகும்பரிசுநிமிர்ந்த திருக்குறளப்பனமர்ந்துறையும்
மாகம்திகழ்கொடிமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை
மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொலோ.

திருவாய்மொழி 7-102.

## 72. திருவயிந்திரபுரம்.

வையமேழுமுண்டாலிலைவைகிய மாயவன் அடியவர்க்கு
மெய்யனாகியதெய்வநாயகனிடம் மெய்தகுவரைச்சாரல்
மொய்கொள்மாதவிசண்பகம் முயங்கியமுல்லையங்கொடியாட
செய்யதாமரைச்செழும்பணைதிகழ்தரு திருவயிந்திரபுரமே.

பெரியதிருமொழி. 3-1-3.

## 73. திருக்கோவலூர்.

தாய்நினைந்தகன்றேயொக்க வென்னையும்
தன்னையேநினைக்கச்செய்து தானெனக்
காய் நினைந்தருள் செய்யுமப்பனை
அன்றிவ்வையகமுண்டுமிழ்ந்திட்ட
வாயனை மகரக்குழைக்காதனை
மைந்தனை மதிள்கோவலிடைகழி
யாயனை அமரர்க்கரியேற்றை யென்
னன்பனையன்றியாதரியேனே.

பெரியதிருமொழி 7-3-2.

## 74. திருக்கச்சி.

அத்தியூ ரான்புள்ளை யூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான் முத்தி
மறையாவான் மாகடல்நஞ் சுண்டான் றனக்கும்
இறையாவா னெங்கள் பிரான்.

இரண்டாந் திருவந்தாதி 96.

## 75. அட்டபுயகரம்.

தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தா னந்நான்று—குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்குச் சார்வு.

மூன்றுந்திருவந்தாதி 99.

## 76. திருத்தண்கா.

பொன்னைமாமணியை யணியார்ந்ததோர்
மின்னை வேங்கடத்துச்சியில்கண்டுபோய்
என்னையாளுடையீசனை யெம்பிரான்
றன்னை யாம்சென்றுகாண்டும்தண்காவிலே.

பெரியதிருமொழி. 10-1-2.

## 77. வேளுக்கை.

அன்றிவ் வுலக மளந்த வசைவேகொல்
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்—அன்று
கிடந்தானைக் கேடில்சீரானை முன்கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமேகாண்.

மூன்றம் திருவந்தாதி. 34.

## 78. பாடகம்.

உற்றுவணங்கித்தொழுமின்உலகேழும்
முற்றும்விழுங்கும்முகில்வண்ணன்—பற்றிப்
பொருந்தாதான்மார்பிடந்துபூம்பாடகத்துள்
இருந்தானைஏத்துமென்னெஞ்சு.

இரண்டாந்திருவந்தாதி. 94.

## 79. நீரகம். 80. நிலாத்திங்கள்துண்டம். 83. காரகம். 84. கார்வானம். 85. கள்வனூர்.

நீரகத்தாய் நெடுவரை யினுச்சிமேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய்!நிறைந்தகச்சி
ஊரகத்தாய்!ஒண்துறைநீர்வெஃகாவுள்ளாய்!
உள்ளுவாருள்ளத்தாய்!உலகமேத்தும்
காரகத்தாய்!கார்வானத்துள்ளாய்!கள்வா!
காமருபூங்காவிரியின்தென்பால்மன்னு
பேரகத்தாய்!பேராதென்னெஞ்சினுள்ளாய்!
பெருமானுன்திருவடியேபேணினேனே.

திருநெடுந்தாண்டகம். 8

## 81. ஊரகம்.

நின்றதெந்தையூரகத் திருந்ததெந்தைபாடகத்து
அன்றுவெஃகணைக்கிடந்த தென்னிலாதமுன்னெலாம்
அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன்
நின்றதும்மிருந்ததும் கிடந்ததும்மென்னெஞ்சுளே.

திருச்சந்தவிருத்தம். 64.

## 82. திருவெஃகா.

பொருப்பிடையே நின்றும்புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைக ளாய்ந்து.

மூன்றந்திருவந்தாதி 76.

## 86. பவளவண்ணம்.

வங்கத்தால்மாமணிவந்துந்துமுந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சியூராய்! பேராய்!
கொங்கத்தார்வளங்கொன்றையலங்கல்மார்வன்
குலவரையன்மடப்பாவையிடப்பால்கொண்டான்
பங்கத்தாய்பாற்கடலாய்பாரின்மேலாய்
பனிவரையினுச்சியாய்பவளவண்ணா
எங்குற்றாயெம்பெருமானுன்னைநாடி
யேழையேனிங்ஙனமேயுழிதருகேனே.

திருநெடுந்தாண்டகம். 9.

## 87. பரமேச்சுர விண்ணகரம்.

சொல்லுவன்சொற்பொருள்தானவையாய்ச்சுவையூறொலிநாற்றமும் தோற்றமுமாய், நல்லரன் நான்முகன்நாரணனுக்கிடந்தான் தடஞ்சூழ்ந்தழகாய கச்சி,பல்லவன்வில்லவனென்றுலகில் பலராய்ப் பலவேந்தர்வணங்குகழல், பல்லவன் மல்லையர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே.

பெரியதிருமொழி. 2-9-1.

## 88. திருப்புட்குழி.

அலங்கெழுதடக்கையாயன்வாயாம்பற் கழியுமாலென்னுள்ளமென்னும்,புலங்கெழுபொருநீர்ப்புட்குழிபாடும்போதுமோநீர்மலைக்கென்னும், குலங்கெழுகொல்லிக்கோமளவல்லிக் கொடியிடைநெடுமழைக்கண்ணி, இலங்கெழில்தோளிக்கென் னினைந்திருந்தாயிடவெந்தையெந்தைபிரானே.

பெரியதிருமொழி 2-7-8.

## 89. திருநின்றவூர்.

ஏற்றினையிமயத்துளெம்மீசனை
யிம்மையைமறுமைக்குமருந்தினை
ஆற்றலைஅண்டத் தப்புறத்துய்த்திடு
மையனைக்கையி லாழியொன்றேந்திய
கூற்றினை குருமாமணிக்குன்றினை
நின்றவூர்நின்ற நித்திலத்தொத்தினை
காற்றினைப்புனலைச்சென்றுநாடிக்
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே.

பெரியதிருமொழி. 7-10-5.

## 90. திருவெவ்வுள்.

முனிவன்மூர்த்திமூவராகி வேதம்விரித்துரைத்த
புனிதன் பூவைவண்ணனண்ணல் புண்ணியன்விண்ணவர்கோன்
தனியன்சேயன் தானொருவனாகிலும் தன்னடியார்க்கு
இனியனெந்தையெம்பெருமா னெவ்வுள்கிடந்தானே.

பெரியதிருமொழி. 2-2-8.

## 91. திருநீர்மலை.

மாலுங்கடலாரமலைக்குவடிட்டணைகட்டி வரம்புருவமதிசேர்
கோலமதிளாயவிலங்கைகெடப்படை தொட்டொருகாலமரிலதிரக்
காலமிதுவென்றயன்வாளியினால் கதிர்நீண்முடிபத்துமறுத்தமரும்
நீலமுகில்வண்ணரெமக்கிறைவற்கிடம்மாமலையாவதுநீர்மலையே.

பெரியதிருமொழி. 2-4-5.

## 92. திருவிடவெந்தை.

திவளும்வெண்மதிபோல்திருமுகத்தரிவை செழுங்கடலமுதி னிற்பிறந்தவவளும், நின்னாகத்திருப்பதுமறிந்து மாகிலுமாசைவிடா ளால்,குவளையங்கண்ணி கொல்லிபம்பாவை சொல்லு நின்தாள்நயந் திருந்த, இவளை உன்மனத்தாலென்னினைந்திருந்தா யிடவெந்தை யெந்தைபிரானே.

பெரியதிருமொழி 2-7-1.

## 93. திருகடன்மல்லை.

நண்ணாதவாளவுணரிடைப்புக்குவானவரைப்
பெண்ணாகியமுதூட்டும் பெருமானார்மருவினிய
தண்ணார்ந்தகடன்மல்லைத் தலசயனத்துறைவாரை
எண்ணாதேயிருப்பாரை யிறைப்பொழுதுமெண்ணோமே.

பெரியதிருமொழி 2-6-1.

## 94. திருவல்லிக்கேணி.

விற்பெருவிழவுங்கஞ்சனும் மல்லும்வேழமும்பாகனும்வீழ,
செற்றவன்றன்னை,புரமெரிசெய்தசிவனுறு துயர்களைதேவை
பற்றலர்வீயக்கோல்கையில்கொண்டுபார்த்தன்றன்தேர்முன்நின்றானை
சிற்றவைபணியால்முடிதுறந்தானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே

பெரிய திருமொழி 2-3-1.

## 95. திருக்கடிகை.

மிக்கானை மறையாய்விரிந்தவிளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர்பொலிகின்றபொன்மலையை
தக்கானைக் கடிகைத்தடங்குன்றின்மிசையிருந்த
அக்காரக்கனியை அடைந்துய்ந்துபோனேனே.

பெரியதிருமொழி 8-9-4.

## 96. திருவேங்கடம்.

அகலகில்லேனிறையுமென் றலர்மேல்மங்கையுறைமார்பா
நிகரில்புகழாயுலகமூன்றுடையா யென்னையாள்வானே
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே.

திருவாய்மொழி. 6-10-10.

## 97. சிங்கவேழ்குன்றம்.

அங்கண்ஞாலமஞ்ச அங்கோராளரியாய்அவுணன்
பொங்கவாகம்வள்ளுகிரால் போழ்ந்தபுனிதனிடம்
பைங்கணானைக்கொம்புகொண்டு பத்திமையால்அடிக்கீழ்ச்
செங்கணாளியிட்டிறைஞ்சும் சிங்கவேழ்குன்றமே.

பெரியதிருமொழி 1-7-1.

## 98. திருவயோத்தி

கற்பாரிராமபிரானையல்லால் மற்றும்கற்பரோ
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியொன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும்
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்றநாட்டுளே.

திருவாய்மொழி. 7-5-1.

## 99. நைமிசாரணியம்.

சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார்
திறத்தனாயறத்தையேமறந்து
புலன்படிந்துண்ணும்போகமேபெருக்கிப்
போக்கினேன்பொழுதினைவாளா

அலம்புரிதடக்கையாயனேமாயா
வானவர்க்கரசனேவானோர்
நலம்புரிந்திறைஞ்சும்திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்.

பெரியதிருமொழி 1-6-2.

## 100. சாளக்கிராமம்.

கலையுங்கரியும்பரிமாவும் திரியும்கானம்கடந்துபோய்
சிலையுங்கணையும்துணையாகச் சென்றான்வென்றிச்செருக்களத்து
மலைகொண்டலைநீரணைகட்டி மதிள்நீரிலங்கைவாளரக்கர்
தலைவன்தலைபத்தறுத்துகந்தான் சாளக்கிராமமடைநெஞ்சே.

பெரியதிருமொழி 1-5-1.

## 101. வதரியாச்சிரமம்.

ஏனமுனாகியிருநிலமிடந்தன்றிணையடியிமையவர்வணங்க, தானவனாகம்தரணியிற்புரளத்தடஞ்சிலைகுனித்தவென்தலைவன்,தேனமர் சோலைக்கற்பகம்பயந்த தெய்வநன்னறுமலர்கொணர்ந்து, வானவர் வணங்கும்கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளானே.

பெரியதிருமொழி 1-4-1.

## 102. கண்டங் கடிநகர்.

தந்தைகாலில்விலங்கற·... 

பெரியாழ்வார் திருமொழி 4-7-1.

## 103. திருப்பிரிதி.

பணங்களாயிரமுடையநல்லரவணைப்பள்ளிகொள்பரமாவென்று இணங்கிவானவர்மணிமுடிபணிதர விருந்தநல்லிமயத்து,மணங்கொள் மாதவிநெடுங்கொடிவிசும்புறநிமிர்ந்தவைமுகில்பற்றிப், பிணங்குபூம்பொழில்நுழைந்துவண்டிசைசொலும் பிரிதிசென்றடைநெஞ்சே.

பெரியதிருமொழி 1-2-6.

## 104. துவாரகை.

ஆவலன்புடையார்தம் மனத்தன்றி
மேவலன்விரைசூழ் துவராபதிக்
காவலன்கன்றுமேய்த்து விளையாடும்
கோவலன்வரில் கூடிடுகூடலே

நாச்சியார்திருமொழி 4-8.

## 105. வடமதுரை.

மற்றொன்றில்லைசுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்
சிற்றவேண்டா சிந்திப்பேயமையும்கண்டீர்களந்தோ
குற்றமன்றெங்கள்பெற்ற தாயன்வடமதுரைபிறந்தான்
குற்றமில்சீர்கற்று வைகல்வாழ்தல்கண்டீர்குணமே

திருவாய்மொழி 9-1-7.

## 106. திருவாய்ப்பாடி.

நாணியினியோர்கருமமில்லை நாலயலாருமறிந்தொழிந்தார், பா
ணியாதென்னைமருந்துசெய்து பண்டுபண்டாக்கவுறுதிராகில், மாணி
யுருவாயுலகளந்த மாயனைக்காணில்தலைமறியும், ஆணையால்நீரென்னை
க்காக்கவேண்டிலாய்ப்பாடிக்கேயென்னையுய்த்திடுமின்.

நாச்சியார்திருமொழி 12-2.

## 107. திருப்பாற்கடல்.

வேதனை வெண்புரிநூலனை விண்ணோர்பரவநின்ற
நாதனை ஞாலம்விழுங்குமநாதனை ஞாலந்தத்தும்
பாதனைப் பாற்கடல்பாம்பணைமேல்பள்ளிகொண்டருளும்
சீதனையேதொழுவார் விண்ணுளாரிலும்சீரியரே.

திருவிருத்தம் 79.

## 108. பரமபதம்.

தொண்டெல்லாம்பரவிநின்னைத்தொழுதடிபணியுமாறு
கண்டுதான்கவலைதீர்ப்பா னாவதேபணியாயெந்தாய்
அண்டமாயெண்டிசைக்கு மாதியாய்நீதியான
பண்டமாம்பரமசோதி நின்னையேபரவுவேனே.

திருக்குறுந்தாண்டகம் 11.

# அநுபந்தம் 1.

## ஆழ்வார்கள் ஒவ்வொருவரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதித்தொகை.

(1) திருமங்கையாழ்வாரால் மங்களாசாசநம்செய்யப்பட்டுள்ள திருப்பதிகள். ஸ்தலவரிசையில் 1, 2, 3, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 57, 62, 63, 65, 66, 72, 73, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98,99, 100,101, 103, 104, 105, 106, 107, 108. ... ... 85.

(2) நம்மாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 8, 14 16, 17, 41, 46, 49, 50, 51. 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 70, 71, 96, 98, 104, 105, 107, 108. ... ... ... ... 35.

(3) பெரியாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 6, 8, 14, 17, 41, 42, 48, 57, 96, 98, 100, 101, 102, 104, 105, 106, 107, 108. ... ... ... 19.

(4) திருமழிசையாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 4, 8, 14, 28, 42, 57, 78, 81, 82, 90, 94, 96, 107, 108. ... ... ... ... ... 15.

(5) பேயாழ்வாரால் மங்களாசாசநம்செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 14, 16, 41, 42, 75, 77, 78, 82, 94, 95, 96, 107, 108. ... ... ... ... ... 14.

(6) பூதத்தாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 3, 14, 41, 42, 45, 73, 74, 78, 91, 93, 96, 107. ... ... ... ... ... 13.

(7) குலசேகராழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 17, 23, 69, 96, 98, 107. ... ... 7.

(8) பொய்கையாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 73, 82, 96, 107, 108. ... ... 6.

(9) தொண்டரடிப் பொடியாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 98, 105, 107. ... ... 4.

(10) திருப்பாணாழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதிகள் :—1, 96, 108. ... ... ... ... 3.

---

## திருப்பதிகள் இன்னின்ன ஆழ்வாரால் மங்களாசாசநம் செய்யப்பட்டன என்பது.

(1) ஆழ்வார்கள் பதின்மர்களால் மங்களாசாசநம் செய்யப்பட்டுள்ள திருப்பதி. 1. ஸ்ரீரங்கம். ... ... ... 1

(2) தொண்டரடிப் பொடியாழ்வார் நீங்கலாக மற்ற ஆழ்வார்கள், ஒன்பதின்மர்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ளது. 96—திருவேங்கடம் 107-திருப்பாற்கடல். ... ... 2.

(3) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், ஆகிய எழுவர் மங்களாசாசநம். 108-பரமபதம். ... ... 1

(4) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், ஆகிய அறுவர் மங்களாசாசநம். 14—திருக்குடந்தை. ... ... ... 1

(5) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், பூதத்தாழ்வார். பேயாழ்வார், ஆகிய ஐவர் மங்களாசாசனம்.
41—திருமாலிருஞ்சோலைமலை. ... ... ... ... 1

(6) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய ஐவர் மங்களாசாசநம். 98- திருவயோத்தி. ... ... ... ... 1

(7) திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், ஆகிய ஐவர் மங்களாசாசநம்.
42—திருக்கோட்டியூர். ... ... ... ... ... 1

(8) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்மார், திருமழிசையாழ்வார், ஆகிய நால்வர் மங்களாசாசனம்.
8-திருப்பேர்நகர் 57—திருக்குறுங்குடி. ... ... ... 2

(9) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குல சேகராழ்வார், ஆகியநால்வர் மங்களாசாசநம்.
17-திருக்கண்ணபுரம். ... ... ... 1

(10) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், ஆகியநால்வர் மங்களாசாசநம்.
105-வடமதுரை. ... ... ... 1

(11) திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், ஆகிய நால்வர் மங்களாசாசனம். 78-பாடகம் 1.

(12) திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய நால்வர் மங்களாசாசநம்.
82–திருவெஃகா. ... ... ... 1

(13) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவர் மங்களாசாஸநம். 16-திருவிண்ணகர். ... 1

(14) திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், ஆகிய மூவர் மங்களாசாசநம். 73-திருக்கோவலூர்... 1

(15) திருமங்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய மூவர் மங்களாசாசநம். 94-திருவல்லிக்கேணி... 1

(16) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆகிய மூவர் மங்களாசாஸநம். 104-துவாரகை. ... 1

(17) திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், ஆகிய இருவர் மங்களாசாஸநம். 46-திருமோகூர். 62-திருமூழிக்களம். 63-திருப்புலியூர். 65-திருநாவாய். 66-திருவல்லவாழ். ... 5

(18) திருமங்கையாழ்வார், பூத்த்தாழ்வார், ஆகிய இருவர் மங்களசாசநம். 3-தஞ்சைமாமணிக்கோயில். 45-திருத்தண்கால். 91-திருநீர்மலை. 93-திருக்கடன்மல்லை. ... 4

(19) திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் ஆகிய இருவர் மங்களாசாசநம். 6-திருவெள்ளறை. 100-சாளக்கிராமம். 101-வதரியாச்சிராமம். 106-திருவாய்ப்பாடி. ... ... 4

(20) திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், ஆகிய இருவர் மங்களாசாசநம். 23-சித்திரகூடம். ... ... 1

(21) திருமங்கையாழ்வார், பேயாழ்வார், ஆகிய இருவர் மங்களாசாசனம்.. 75-அட்டபுயகரம். 77-வேளுக்கை. 95-திருக்கடிகை. ... ... ... ... 3

(22) திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், ஆகிய இருவர் மங்களாசாசநம். 81-ஊரகம். 90-திருஎவ்வுளூர். ... 2

(23) பூதத்தாழ்வார் ஒருவர் மங்களாசாசனம் 74-திருக்கச்சி 1

(24) திருமழிசையாழ்வார் ஒருவர் மங்களாசாசநம்.
4-அன்பில் 28-கவித்தலம். ... ... ... 2

(25) பெரியாழ்வார் ஒருவர் மங்களாசாசநம்.
48-ஸ்ரீவில்லிபுத்தூர். 102-கண்டமென்னும் கடிநகர். ... 2

(26) குலசேகராழ்வார் ஒருவர் மங்களாசாசநம்.
69-வித்துவக்கோடு. ... ... ... 1

(27) நம்மாழ்வார் ஒருவர் மங்களாசாசநம் :—40, 50, 51, 52, 53, 54, 55, 56, 58, 59, 60, 61, 64, 67, 68, 70, 71. ... 17.

(28) திருமங்கையாழ்வார் ஒருவர் மங்களாசாசநம்:– 2, 5, 7, 9, 10, 11, 12, 13, 15, 18, 19, 20, 21, 22, 24, 25, 26, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 43, 44, 47, 72, 76, 79, 80, 83, 84, 85, 86, 87, 88, 89, 92, 97, 99, 103 ... 48

ஆக மங்களாசாசனமுள்ள ஸ்தலங்கள் 108.

---

## திருநாகை.

அன்னமுங்கேழலும் மீனுமாய வாதியை நாகையழகியாரைக், கன்னிநன்மாமதிள் மங்கைவேந்தன் காமருசீர்க்கலிகன்றி குன்றா, இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலை யேழுமிரண்டுமோ ரொன்றும் வல்லார், மன்னவராயுலகாண்டு மீண்டும் வானவராய் மகிழ் வெய்துவரே.

பெரிய திருமொழி 9-2-10.

# அநுபந்தம் - 2.

## 108. திருப்பதிகளின் குறிப்புகள்.

அஷ்டசுயம்பு ஸ்தலங்கள்:—ஸ்ரீரங்கம், திருவேங்கடம், சாளக்கிராமம், வதரியாச்சிரமம், ஸ்ரீவரமங்கை, நைமிசாரணியம், ஸ்ரீமுஷ்ணம், புஷ்கரம். இவைகளில் கடையிரண்டும் மங்களாசாசநம் பெறாதவைகள்.

முத்திநகர் ஏழு:—அயோத்தியை, மதுரை, துவாரகை, காஞ்சி, அரித்துவாரம், அவந்திகை, காசி. கடைமூன்றும் மங்களாசாசனம் பெறாதவைகள்.

காவிரி நதிக்கரையின்மேலுள்ள திருப்பதிகள்:— திருவரங்கம், உறையூர், அன்பில், கரம்பனூர், திருப்பேர்நகர், இந்தளூர், தலைச்சங்க நாண்மதியம், திருக்குடந்தை, கண்டியூர், கூடலூர், கவித்தலம், புள்ளம்பூதங்குடி.

கங்கையின் கரைமேலுள்ள திருப்பதிகள்:—நைமிசாரண்யம், வதரியாச்சிரமம், கண்டங்கடிநகர், திருப்பிரிதி.

சமுத்திர தீரத்திலுள்ள திருப்பதிகள்:—திருவல்லிக்கேணி, திருவிடவெந்தை, திருக்கடன்மல்லை. திருநாகை, திருப்புல்லாணி திருவனந்தபுரம், துவாரகை.

மலைமேலுள்ள திருப்பதிகள்:—திருவேங்கடம், சிங்கவேழ்குன்றம், திருநீர்மலை, திருக்கடிகை, வதரியாசிரமம், திருப்பிரிதி, சாளக்கிராமம், கடிநகர், திருத்தண்கால், திருக்குறுங்குடி.

மலைஅடிவாரத்திலுள்ள தலங்கள்:—திருமாலிருஞ்சோலைமலை, திருமெய்யம், நைமிசாரணியம்.

கட்டுமலைமேலுள்ள திருப்பதிகள் :—அத்திகிரி, திருவெள்ளறை, திருப்பேர்நகர், திருநறையூர், திருக்கோட்டியூர், திருவாட்டாறு.

வடகலை திருமண்காப்பு பிரகாசிக்கும் திருப்பதிகள்:—அஹோபிலம், அத்திகிரி, திருத்தண்கா, திருவெவ்வுளூர், திருவயிந்திரபுரம், தேரழுந்தூர், திருக்குடந்தை ஆதனூர், புள்ளம்பூதங்குடி, திருவிண்ணகர், திருவெள்ளியங்குடி, திருக்கண்டியூர், தஞ்சை மாமணிக்கோயில்.

தாம்ரவர்ணி நதிக்கரை மேலுள்ள திருப்பதிகள்:—திருக்குருகூர், ஸ்ரீவைகுண்டம், தொலைவில்லிமங்கலம், திருக்கோளூர், திருப்பேறை, திருக்குளந்தை.

சிவன் கோயிலைத் தன்னுள்பெற்ற ஸ்தலங்கள்:—காம்பனூர், திருக்கோட்டியூர், திருக்குறுங்குடி.

சிவஸ்தலத்தினுள் ளிருக்கும் திருப்பதிகள் :—தில்லை திருச்சித்திரகூடம், நிலாத்திங்கள் துண்டம், திருக்கள்வனூர்.

சிவன்கோயில்களை வலமாகக்கொண்ட திருப்பதிகள்:—திருமெய்யம், திருத்தண்கானூர்.

திருவாலி திருநகரி 12 திருப்பதிகள்:—மணிமாடக்கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், திருத்தேவனார்தொகை, செம்பொன்செய்கோயில், திருமணிக்கூடம், திருத்தெற்றியம்பலம், காவளம்பாடி, திருவெள்ளக்குளம், பார்த்தன் பள்ளி, தலைச்சங்க நாண்மதியம்.

ஆழ்வார்திருநகரி நவத்திருப்பதிகள்:—திருக்குருகூர், ஸ்ரீவைகுந்தம், வரகுணமங்கை, திருப்புளிங்குடி, திருக்குளந்தை, திருக்கோளூர், திருப்பேரை, தொலைவில்லி மங்கலம். (2. திருப்பதி).

நாங்கூர் ஆறு திருப்பதிகள்:—மணிமாடக் கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், வண்புருஷோத்தமம், திருத்தெற்றியம்பலம், செம்பொன் செய்கோயில்

மண்டபசதுஷ்டயம்:—1. போகமண்டபம்—திருவரங்கம். 2. தியாகமண்டபம்—காஞ்சிபுரம். 3. புஷ்பமண்டபம்—திருவேங்கடம். 4. ஞானமண்டபம் - திருநாராயணபுரம். (இது மங்களாசாஸநம் பெறாதது.)

நாக சதுஷ்டயம்:—வடயானை—திருவேங்கடம். தென்யானை—திருமாலிருஞ்சோலைமலை. கீழ்யானை—திருக்கண்ணபுரம். மேல்யானை—திருமூழிக்களம்.

பரத்வாதிகளில் அநுபாவ்யமான குணங்களெல்லாம் பூர்ணமாய் அர்ச்சாவதாரத்தில் உண்டு மென்னுமிடம்.

1. கோயில்—வியூஹஸௌஹார்த ப்ரதானம்.
2. திருமலை—அந்தர்யாமி ப்ரதானம்.

3. திருக்குருகூர்—பரத்வலக்ஷணமான ஈச்வரத்வ ப்ரதானம்.
4. திருக்குறுங்குடி—விபவ ப்ராதாகம்.
5. சிரீவரமங்கலம்—திருவடிகளையே உபாயமாகக்கொடுக்குமிடம்.
6. திருக்குடந்தை—ரக்ஷகாந்தர ப்ரதிபத்தி நிவ்ருத்தி பிறந்தாரைச் சிதலராம்படி பண்ணுமிடம்.
7. திருவல்லவாழ்-அவனே ரக்ஷகனென்று அத்யவஸிக்கப்பண்ணுமிடம்.
8. திருவண்வண்டூர்—அநுகூலராலும் சகிப்பிக்க வொண்ணாதபடியிருக்கும் அவனுடைய ஸ்தைரியகுணம் தோற்றுமிடம்.
9. திருவிண்ணகர்—விளம்பிக்கையாலே வந்த ப்ரணயரோஷத்தை அழிக்கவும், விருத்தங்களைக் கடிப்பிக்கவும் வல்ல, சாமர்த்தியமுள்ள இடம்.
10. துலைவில்லிமங்கலம்—தந்தை தாயானபந்துத்வம் இரட்டித்திருக்கும் இடம்.
11. திருக்கோளூர்—ப்ராப்ய ருசி பிறந்தார்க்கு ப்ரவேஷ்டவ்யமாயிருக்குமிடம்.
12. திருப்பேரை—நெஞ்சை அபகரிக்கும் ஸௌந்தர்யமுள்ள இடம்.
13. திருவாறன்விளை—பரத்வத்தில் விமுகராகப் பண்ணுமிடம்.
14. திருக்குளந்தை—ஸ்திரீத்வ ப்ரகாரமான லஜ்ஜாதிகளை அழிக்குமிடம்.
15. திருவண்பரிசாரம்—ச்ரமத்தைக்கண்ட மநசானது ப்ரமிக்கும்படியான ஸௌகுமார்யம் தோன்றுமிடம்.
16. திருச்செங்குன்றூர்—பயசங்கிகளானவர்கள் நிர்ப்பயராய் ஹ்ருஷ்டராம்படியான ஸௌந்தர்யாதிகள் தோன்றுமிடம்.
17. திருக்கடிதானம்—க்ருதக்யதா பரிமளம்தாய ப்ராப்தமான குணம் தோன்று மிடம்.
18. திருப்புலியூர்—நாயகனுடை லக்ஷணம் காட்டுமிடம்.
19. திருப்புளிங்குடி, வரகுணமங்கை, வைகுந்தம்—பரமபக்தியாகிய பாகம் பிறக்குமளவும் அவனுக்கு உண்டானத்வரை தெரியும்படி செய்யுமிடங்கள்

20. திருகாட்கரை—போகத்தில் தட்டுமாறும் ஸௌசீல்யகுணம் தோன்றுமிடம்.

21. திருமூழிக்களம்—ஆச்ரிதருக்கு ஸம்பத்தான ஸ்வபாவம் காட்டு மிடம்.

22. திருநாவாய்—ஆச்ரித விஷயத்தில் க்ருபை தோன்றுமிடம்.

23. திருக்கண்ணபுரம்—சரண வரணார்ஹனுடைய மோக்ஷப்ரதத்வம் தோன்றுமிடம்.

24. திருமோகூர்—தாபஹரமான குளிர்ச்சியுண்டாகுமிடம்.

25. அநந்தசயநம்—தாரதம்யம் பராமே தகாட்டுகிற ஸாம்யம் தோன்றுமிடம்.

26. திருவாட்டாறு—ஆச்ரிதனுக்குப் பாதந்த்ரனுகைகாணுமிடம்.

27. திருமாலிருஞ்சோலைமலை—அக்யாநங்களைக்கடியு மிடம்.

28. திருப்பேர்நகர்:—அங்கீகரிக்கப் பார்க்கும் ஸ்வாமித்வம் தோன்று மிடம்.

---

சேதனனுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகள் பகவததீநங்களாயிருக்குமாப்போலே அர்ச்சாவதாரத்தினுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தியாதிகளும் ஆச்ரிதரிட்ட வழக்காயிருக்கும். பக்த பராதீனம், 'தமருகந்ததெவ்வுருவமவ்வுருவம் தானே' என்று ப்ரமாணம். தானுகந்த விக்ரஹத்தை யாராதிக்கும்போது ராஜவதுபசாரமும் புத்ரவத்ஸ்நேஹமும் ஸர்பவத்பீதியும்உண்டாகவேண்டும். அர்ச்சாவதாரமே பின்புள்ளவர்களுக்குமாச்ரயிக்கலாவது. பின்னானார் வணங்குஞ்சோதியென்று. பரத்வத்தில் ஈச்வரத்வமாகிற வழல் விஞ்சியிருக்கும். ஆகையாலே அர்ச்சாவதாரஸ்தலமே முக்கியமாகக்கடவது. பொய்யேயாகிலும் அவனுகந்தருளின திவ்யதேசங்களிலே புக்குத் திரிவார்க்கு அந்திமதசையிலே கார்யகரமாம்.

# அநுபந்தம் - 3.

## ஸ்டேஷன் ஸ்தலம் மைல் திசை காட்டும் பட்டி.

| ஸ்டேஷன். | ஸ்தலம். | மைல். | திசை. |
|---|---|---|---|
| **S. I. Ry.** | | | |
| சென்னை (எழும்பூர்.) | திருவல்லிக்கேணி ... | 3 | தெ-கி |
| | மயிலாப்பூர் ... | 5 | தெ-கி. |
| பல்லாவரம் ... | திருநீர்மலை ... | 3 | மேற்கு |
| வண்டலூர் ... | ஸ்ரீ பெரும்பூதூர் ... | 11 | வட-மே |
| | திருவிடந்தை ... | 17 | கிழக்கு |
| சிங்கப்பெருமாள் கோ | சிங்கப்பெருமாள் கோயில். | $\frac{1}{2}$ | ,, |
| செங்கற்பட்டு ... | திருக்கடன்மலை ... | 18 | ,, |
| சீவரம் ... | திருமுக்கூடல் ... | $1\frac{1}{2}$ | தெ-மே |
| காஞ்சீபுரம் ... | திருக்கச்சி. அத்திகிரி ... | 2 | தெ-கிழ |
| | திருவெஃகா ... | $1\frac{1}{2}$ | ,, |
| | அஷ்டபுஜம் ... | $1\frac{1}{2}$ | ,, |
| | திருத்தண்கா ... | $1\frac{1}{2}$ | ,, |
| | வேளுக்கை ... | 2 | ,, |
| | சிங்கப்பெருமாள்கோயில். | 2 | ,, |
| | பரமேச்சுரவிண்ணகரம் ... | $\frac{1}{2}$ | மேற்கு |
| | திருக்கள்வனூர் ... | $\frac{3}{4}$ | மேற்கு |
| | ஊரகம்<br>நீரகம்<br>காரகம்<br>கார்வானம் } ஒரே சந்நிதி. ... | $\frac{3}{4}$ | மேற்கு |
| | பாடகம் ... | 1 | மேற்கு |
| | பவழவண்ணம் ... | $\frac{3}{4}$ | ,, |
| | பச்சைவண்ணம் ... | $\frac{3}{4}$ | ,, |
| | நிலாத்திங்கள்துண்டம் ... | 1 | ,, |
| | திருப்புட்குழி ... | 7 | ,, |
| | திருப்பாற்கடல் ... | 15 | ,, |
| | கூரம் ... | 6 | வட-மே |
| ஈஞ்சம் பாக்கம் ... | கூரம் ... | 1 | மேற்கு |
| மதுராந்தகம் ... | மதுராந்தகம் ... | 1 | வட-மே |
| திண்டிவனம் ... | செஞ்சி (சிங்கவரம்) ... | 18 | மேற்கு |
| திருக்கோயிலூர். ... | திருக்கோவலூர் ... | 2 | தெ-மே |

| ஸ்டேஷன். | ஸ்தலம். | மைல். | திசை. |
|---|---|---|---|
| S. I. Ry. | | | |
| திருப்பாப்புலியூர் ... | திருவயிந்திரபுரம் ... | 3 | மேற்கு |
| சிதம்பரம் ... | திருச்சித்திரகூடம் ... | 1 | ,, |
| | காட்டுமன்னார் கோயில் ... | 16 | தெ-மே |
| | ஸ்ரீமுஷ்ணம் ... | 24 | மேற்கு |
| | குருகைக்காவலப்பன் கோயில் ... | 24 | தெ-மே |
| சீகாழி ... | காழிச்சீராம விண்ணகரம் ... | ½ | கிழக்கு |
| | திருவாலிதிருநகரி<br>காவளம்பாடி<br>குறையலூர்<br>திருமணிக்கூடம்<br>திருத்தேவனார்தொகை<br>திருவெள்ளக்குளம்<br>பார்த்தன்பள்ளி | 6 | கிழக்கு |
| | திருநாங்கூர் ... | 6 | கிழக்கு |
| வைதீச்சுரன் கோயில் | மணிமாடக்கோயில்<br>வைகுந்தவிண்ணகரம்<br>அரிமேய விண்ணகரம்<br>வண்புருஷோத்தமம்<br>செம்பொன்செய்கோயி<br>திருத்தெற்றியம்பலம் | 4 | வட-கி |
| | தலைச்சங்கநாண்மதியம் ... | 10 | தெ-கி |
| மாயவரம் ... | திரு விந்தளூர் ... | 3 | வட-கி |
| | தலைச்சங்கநாண்மதியம் ... | 12 | வட-கி |
| குற்றாலம் ... | தேரழுந்தூர் ... | 3½ | தெ-கி |
| திருவிடைமருதூர் ... | திருவெள்ளியங்குடி ... | 6 | வ-மே |
| | செங்கநல்லூர் ... | 7 | வ-மே |
| கும்பகோணம் ... | திருக்குடந்தை ... | 1 | வ-மே |
| | திருவிண்ணகர் ... | 3 | கிழக்கு |
| | திருநறையூர் ... | 6 | தெ-கி |
| | திருச்சேறை ... | 9 | தெ-கி |
| | நந்திபுரவிண்ணகரம் ... | 4 | தெ-மே |
| | ஆதனூர் ... | 5 | வ-மே |
| சுந்தரப்பெருமாள் கோயில் ... | புள்ளம்பூதங்குடி ... | 3½ | வடக்கு |
| | மண்டங்குடி ... | 3 | ,, |

| ஸ்டேஷன். | ஸ்தலம். | மைல். | திசை. |
|---|---|---|---|
| **S. I. Ry.** | | | |
| பாபநாசம் ... | பாபவிநாசம் ... | ... $\frac{1}{2}$ | வடக்கு |
| | கவித்தலம் ... | ... 2 | வடக்கு |
| அய்யம்பேட்டை ... | கூடலூர் ... | 3 | வடக்கு |
| திட்டை ... | கண்டியூர் ... | 7 | வ-மே |
| தஞ்சாவூர் ... | தஞ்சைமாமணிக்கோயில் . | $2\frac{1}{2}$ | வடக்கு |
| | கண்டியூர் ... | 6 | வடக்கு |
| ராஜமன்னார்கோயில் . | இராஜமன்னார் கோயில் ... | 1 | மேற்கு |
| குளிக்கரை ... | திருக்கண்ணமங்கை ... | 2 | வ-மே |
| கீழ்வேளூர் ... | திருக்கண்ணங்குடி ... | 2 | வட-கி |
| நாகப்பட்டணம் ... | திருநாகை ... | 1 | வ-மே |
| மங்கநல்லூர் ... | சிறுபுலியூர் ... | 3 | தெ-கி |
| பேரளம் ... | சிறுபுலியூர் ... | 3 | வ-கி |
| நன்னிலம் ... | திருக்கண்ணபுரம் ... | $4\frac{1}{2}$ | கிழக்கு |
| திருவாரூர் ... | திருக்கண்ணமங்கை ... | 5 | வ-மே |
| பூதலூர் ... | திருப்பேர்நகர் ... | 10 | வ-மே |
| | அன்பில் ... | 12 | வ-மே |
| திருச்சிறாப்பள்ளி (ஜங்ஷன்) ... | புதுக்கோட்டை ... | 33 | தெ-கி |
| | திருமெய்யம் ... | 45 | தெற்கு |
| திருச்சிறாப்பள்ளி | ஸ்ரீரங்கம் ... | 6 | வடக்கு |
| (கோட்டை) ... | ஸ்ரீரங்கம் ... | 3 | வடக்கு |
| | உறையூர் ... | 1 | மேற்கு |
| | கரம்பனூர் ... | 6 | வடக்கு |
| | திருவெள்ளறை ... | 13 | வடக்கு |
| எல்மனூர் ... | அகண்டகாவிரி ... | $\frac{1}{4}$ | வடக்கு |
| | குணசீகரம் ... | 1 | வடக்கு |
| மதுரை ... | திருக்கூடல் ... | 1 | கிழக்கு |
| | திருமோகூர் ... | 7 | வட-கி |
| | திருமாலிருஞ்சோலைமலை... | 12 | வட-கி |
| மானாமதுரை ... | திருக்கோட்டியூர் ... | 27 | வடக்கு |
| | திருமெய்யம் ... | 49 | வடக்கு |
| இராமநாதபுரம் ... | திருப்புல்லாணி ... | 5 | தெற்கு |
| இராமேச்சுரம் ... | இராமநாதர்கோயில் ... | $\frac{1}{2}$ | கிழக்கு |
| தனுஷ்கோடி ... | சேது ... | $1\frac{1}{2}$ | தெற்கு |
| சாத்தூர் ... | திருத்தண்காலூர் ... | 12 | வ-மே |
| | ஸ்ரீவில்லிபுத்தூர் ... | 25 | வ-மே |

| ஸ்டேஷன். | ஸ்தலம். | மைல். | திசை. |
|---|---|---|---|
| **S. I. Ry.** | | | |
| திருநெல்வேலி (பாலம்) ... | ஸ்ரீவைகுந்தம் ... | 15 | கிழக்கு |
| | ஆழ்வார்திருநகரி ... | 18 | ,, |
| | வரகுணமங்கை ... | 16 | ,, |
| | திருப்புளிங்குடி ... | 17 | ,, |
| | திருக்குளந்தை ... | 23 | ,, |
| | தொலைவில்லிமங்கலம் திருப்பேரை திருக்கோளூர் } ... | 20 | ,, |
| | வானமாமலை ... | 20 | தெற்கு |
| | திருக்குறுங்குடி ... | 28 | தெ-மே |
| | திருவண்பரிசாரம் ... | 51 | ,, |
| | கன்னியாகுமரி ... | 63 | ,, |
| | திருவாட்டாறு ... | 74 | ,, |
| | திருவனந்தபுரம் ... | 94 | ,, |
| சேர்மாதேவி ... | திருக்குறுங்குடி ... | 18 | தெற்கு |
| அம்பாசமுத்திரம் ... | பிரமதேசமன்னார்கோயில். | 1 | வடக்கு |
| கொட்டாரக்கரை ... | திருச்செங்குன்றூர் ... | 37 | வடக்கு |
| கொல்லம் ... | ஜனார்த்தனம் ... | 18 | தெ-கி |
| | திருவனந்தபுரம் ... | 40 | தெ-கி |
| | திருச்செங்குன்றூர் ... | 58 | வட-கி |
| | திருவாறண்விளை ... | 60 | வட-கி |
| | திருப்புலியூர் ... | 55 | ,, |
| | திருவண்வண்டூர் ... | 58 | ,, |
| | திருவல்லவாழ் ... | 60 | ,, |
| | திருக்கடித்தானம் ... | 62 | ,, |
| எடக்குளம் ... | திருநாவாய் ... | ½ | தெற்கு |
| இருஞாலக்குடா ... | திருவஞ்சிக்களம் ... | 4 | தெ-மே |
| அங்கமாலி ... | திருமூழிக்களம் ... | 4 | கிழக்கு |
| இடப்பள்ளி ... | திருக்காட்கரை ... | 2 | கிழக்கு |
| மங்களூர் ... | உடுப்பி ... | 30 | வடக்கு |
| **M. & S. M. Ry.** | | | |
| மதராஸ் (சென்ட்ரல் ஸ்டேஷன்) ... | திருவல்லிக்கேணி ... | 3 | தெற்கு |
| | மயிலாப்பூர் ... | 5 | தெ-மே |
| ஆவடி ... | பூவிருந்தவல்லி ... | 6 | தெ-மே |

| ஸ்டேஷன். | ஸ்தலம். | மைல். | திசை. |
|---|---|---|---|
| **M. & S. M. Ry.** | | | |
| ஆவடி ... | முதலியாண்டான்சந்நிதி ... | 7 | தெ-மே |
| | திருமழிசை ... | 8 | தெ-மே |
| தின்னனூர் ... | திருநின்றவூர் ... | 1 | தெற்கு |
| திருவள்ளூர் ... | திருவெவ்வுளூர் ... | 2 | வடக்கு |
| | ஸ்ரீபெரும்பூதூர் ... | 11 | தெ-கி |
| கடம்பத்தூர் ... | மதுரமங்கலம் ... | 2 | மேற்கு |
| சோளிங்கவரம் ... | கடிகாசலம் ... | 8 | வ-மே |
| பிரஞ்சுராக்ஸ் ... | திருநாராயணபுரம் ... | 18 | வட-கி |
| மைசூர் ... | மிதுனசாலக்கிராமம் ... | 36 | கிழக்கு |
| புத்தூர் ... | நாராயணவனம் ... | 3 | தெ-கி- |
| ரேணிகுண்டா ... | திருச்சானூர் ... | 5 | தெ-மே |
| | திருப்பதி (பட்டணம்) ... | 6 | மேற்கு |
| திருப்பதி ... | திருமலை ... | 7 | வடக்கு |
| | கீழ்த்திருப்பதி ... | ½ | ” |
| கமலாபுரம் ... | புஷ்பகிரி ... | 5 | வட-கி |
| எர்ரகுண்டலா ... | அஹோபிலம் ... | 32 | வடக்கு |
| நந்தியால் ... | அஹோபிலம் ... | 27 | தெற்கு |
| ஹாஸ்பெட் ... | கிஷ்கிந்தை ... | 8 | வட-கி |
| பொன்னேரி ... | பொன்னேரி ... | 2 | வட-மே |
| எல்லாண்டு ... | பத்திராசலம் ... | 56 | வடக்கு |
| இராஜமஹேந்திரம் ... | பத்திராசலம் ... | 60 | வட-மே |
| வால்டேர் ... | சிம்மாசலம் ... | 6 | வடக்கு |
| **B. N. Ry.** | | | |
| பூரி ... | ஜகந்நாதம் ... | 1 | வடக்கு |
| ஸ்ரீகாகுளம் ... | ஸ்ரீகூர்மம் ... | 16 | தெற்கு |
| சிம்ஹாசலம் ... | சிம்ஹாசலம் ... | 4 | கிழக்கு |
| இராம்டேக் ... | இராமக்ஷேத்திரம் ... | 1 | வடக்கு |
| ஜோரேபூர் ... | ஜோரேபூர் ... | 2 | ” |
| **G. I. P. Ry.** | | | |
| பண்டரிபுரம் ... | பண்டரீபுரம் ... | 1 | கிழக்கு |
| நாசிக் ... | பஞ்சவடி ... | 5 | வ-மே |
| பம்பாய் ... | துவாரகை ... | 180 | ஸ்டீமர் |

| ஸ்டேஷன். | ஸ்தலம். | மைல். | திசை. |
|---|---|---|---|
| **G. I. P. Ry.** | | | |
| உஜ்ஜினி ... | அவந்திகை ... | 1 | மேற்கு |
| மதுரா ... | வடமதுரை ... | 1 | மேற்கு |
| பிருந்தாவனம் ... | பிருந்தாவனம் ... | $\frac{1}{2}$ | கிழக்கு |
| குருக்ஷேத்திரம் ... | குருக்ஷேத்திரம் ... | 1 | மேற்கு |
| டில்லி ... | இந்திரப்பிரஸ்தம் ... | 3 | மேற்கு |
| சித்திரகூட் ... | சித்திரகூடம் ... | $3\frac{1}{2}$ | தெ-கி |
| குர்வி ... | சித்திரகூடம் ... | 5 | கிழக்கு |
| | சீதாப்பூர் ... | 5 | வடக்கு |
| **B. B. & C. I. Ry** | | | |
| மிழூலி ... | நாதத்துவாரம் ... | 1 | தெற்கு |
| பேடிபந்தர் ... | துவாரகை ... | 60 | தெற்கு |
| **O. & R. Ry.** | | | |
| பைசபாட் ... | அயோத்தி ... | 6 | வடக்கு |
| அயோத்தி ... | அயோத்தி ... | 2 | தெற்கு |
| சாண்டிலா ... | நைமிசாரண்ணியம் ... | 25 | வடக்கு |
| நிமிசார் ... | நைமிசாரண்ணியம் ... | 7 | கிழக்கு |
| அரித்துவாரம் ... | வதரியாச்சிரமம் ... | 164 | வட-மே |
| | கண்டமென் னுங்கடிநகர் ... | 53 | வட-மே |
| | திருப்பிரிதி ... | 146 | வட-மே |
| | அரித்துவாரம் ... | 3 | வட-மே |
| பெனாரஸ் (சிடி) ... | காசி ... | 1 | மேற்கு |
| **R. M. Ry.** | | | |
| ஆஜ்மீர் ... | புஷ்கரம் ... | 7 | தெ-மே |
| **E. I. Ry.** | | | |
| டில்லி ... | இந்திரப்பிரஸ்தம் ... | 1 | மேற்கு |
| ஆக்ரா ... | அஸ்தினபுரம் ... | 2 | மேற்கு |
| அலஹாபாத் ... | பிரயாகை ... | 3 | தெற்கு |
| கயா ... | கயை ... | $3\frac{1}{4}$ | மேற்கு |
| மோகல்சராய் ... | காசி ... | 7 | வட-மே |

## நூலகத்து விடப்பது.

### காலடி.

ப்ரபாவம்.—ஸ்ரீமத்சங்கர பகவத் பாதாசாரியர் அவதார ஸ்தலம் இங்கு ஒரு புராதன கண்ணன் நாராயணன் சந்நிதி இருக்கிறது. இங்கு பிரபலமான சிவஸ்தல மொன்று மிருக்கிறது.

மார்க்கமும் வசதிகளும்.—இது சோரனூர் எர்ணுகுளம் ரயில் பாதையில் ஆல்வாய் ஸ்டேஷனுக்கு கிழக்கே 6-மைலிலும், அங்கமாலி ஸ்டேஷனிலிருந்து 5-மைலிலு மிருக்கிறது. சத்திர மிருக்கின்றது. பிராம்மணர்களுக்கு மட்டும் ஊட்டுப்பிரை உண்டு.

---

### தஞ்சாவூருக்கும் கும்பகோணத்திற்கும் மத்தியிலுள்ள ஸ்தலங்களின் குறிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| தஞ்சாவூர் | ... | வெண்ணாற்றங்கரை | ... | 2-மைல். |
| வெண்ணாற்றங்கரை | ... | திருக்கண்டியூர் | ... | 3 ,, |
| திருக்கண்டியூர் | ... | திருவையாறு | ... | 1 ,, |
| திருவையாறு | ... | ஆடுதுரை பெருமாள் கோயில் | | 4 ,, |
| ஆடுதுரை பெ. கோயில் | ... | கபிஸ்தலம் | ... | 4½ ,, |
| கபிஸ்தலம் | ... | மண்டங்குடி | ... | 3½ ,, |
| மண்டங்குடி | ... | புளளம் பூதங்குடி | ... | 1 ,, |
| புள்ளம் பூதங்குடி | ... | ஆதனூர் | ... | ½ ,, |
| ஆதனூர் | ... | சுவாமிமலை | ... | 1 ,, |
| சுவாமிமலை | ... | கும்பகோணம் | ... | 4 ,, |

(ஆடுதுரை பெருமாள்கோயில் என்பது கூடலூர் என்னும் திவ்யதேசம்.)

கும்பகோணம் தஞ்சாவூர் மார்க்கம்:—

| கும்பகோணத்திலிருந்து | | | தஞ்சாவூரிலிருந்து | | |
|---|---|---|---|---|---|
| சுவாமிமலை | ... | 4—மைல் | வெண்ணாற்றறங்கரை | | 2-மைல் |
| கபிஸ்தலம் | ... | 8½ ,, | கண்டியூர் | ... | 5 ,, |
| ஆடுதுரை | ... | 13 ,, | திருவையாறு | ... | 6 ,, |
| திருப்பயணம் | ... | 19 ,, | திருப்பயணம் | ... | 7 ,, |
| திருவையாறு | ... | 20 ,, | ஆடுதுரை | ... | 13 ,, |
| கண்டியூர் | ... | 21 ,, | கபிஸ்தலம் | ... | 17½ ,, |
| வெண்ணாற்றங்கரை | ... | 24 ,, | சுவாமிமலை | ... | 22 ,, |
| தஞ்சாவூர் | ... | 26 ,, | கும்பகோணம் | ... | 26 ,, |

## திருநெல்வேலி அனந்தசயன மார்க்கம்.

திருநெல்வேலி பாலத்திலிருந்து.

| | | | |
|---|---|---|---|
| திருநெல்வேலிபட்டணம் | 2-மைல் | பாளயங்கோட்டை | 2-மைல் |
| வானமாமலை ... | 20 ,, | ஸ்ரீவைகுண்டம் ... | 15 ,, |
| திருக்குறுங்குடி ... | 28 ,, | ஆழ்வார்திருநகரி ... | 18 ,, |
| பணக்குடி ... | 37 ,, | திருச்செந்தூர் ... | 34 ,, |
| நாகர் கோயில் ... | 52 ,, | திருவண்பரிசாரம் ... | 54 ,, |
| தக்கலை ... | 62 ,, | சுசீந்திரம் ... | 55 ,, |
| மார்த்தாண்டம் ... | 70 ,, | கன்னியாகுமரி ... | 63 ,, |
| அனந்தசயநம் ... | 94 ,, | திருவாட்டாறு ... | 74 ,, |

---

## திருவனந்தபுரம் திருநெல்வேலி மார்க்கம் 94—மைல்.

| | | |
|---|---|---|
| திருவனந்தபுரம் ... | குளித்துறை | 23—மைல் |
| குளித்துறை ... | மார்த்தாண்டம் ... | 1 ,, |
| மார்த்தாண்டம் ... | தக்கலை ... | 8 ,, |
| தக்கலை ... | நாகர்கோயில் ... | 10 ,, |
| நாகர்கோயில் ... | பணக்குடி ... | 15 ,, |
| பணக்குடி ... | திருக்குறுங்குடி ... | 9 ,, |
| திருக்குறுங்குடி ... | நாங்குநேரி ... | 8 ,, |
| நாங்குநேரி ... | பாளையங்கோட்டை ... | 18 ,, |
| பாளையங்கோட்டை ... | திருநெல்வேலி ... | 2 ,, |

---

| | | |
|---|---|---|
| மார்த்தாண்டம் ... | திருவாட்டாறு ... | 4 ,, |
| நாகர்கோயில் ... | கன்னியாகுமரி ... | 11 ,, |
| | சுசீந்திரம் ... | 3 ,, |
| | திருவண்பரிசாரம் ... | 2 ,, |

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

## வடதேசத்தில் யாத்திரை செய்ய விரும்புவோர்க்கு சில குறிப்புகள்.

வடதேசத்தில் விசேஷமாக குளிரதிகமாகையால், குளிர்காலத்தைப் பார்க்கிலும் வெய்யற்காலமே யாத்திரைக்கு உத்தமம். மழைகாலத்தைவிடக் குளிர்காலம் மத்திபம். யாத்திரை செய்வோர் போதுமான தேகதாரூட்டியமும், திரவிய சகாயமும், புருஷசகாயமும் இருந்தால் மாத்திரம் போய்வருவது சுகம். பெண்டு பிள்ளைகள் வியாதியஸ்தர் விருத்தர்கள் இவர்களைக் கூட்டிக்கொண்டு போதல் கஷ்டம். நல்ல கம்பளி உடைகள், இரவில் உறங்க கம்பளி படுக்கை, போர்வைக்கம்பளம், பேதி, சுரம் முதலான வியாதிகளைக் கண்டிக்கும் க்ளோரடைன், கொயினு, சுக்கு, மிளகு, முதலான மருந்துகளையும் கூடக் கொண்டுபோதல் நல்லது.

தென்தேசத்து கரன்ஸி நோட்டுகள் வடதேசத்தில் விசேஷமாகச் செலவாவது கஷ்டசாத்தியமாகையால் கூடியவரையில் ரூபாய் பணங்களைக் கொண்டு போதல் நலம். கங்கை, யமுனை, சரயூ, முதலான நதிகளில் அடிக்கடி முழுகுதலும் நல்லதல்ல. தீர்த்தக் கரைகளிலும், ஸ்தலங்களிலும், பூஜாரிகள், பண்டாக்கள் அதிகமாக விருந்துகொண்டு பணங்களைப் பிடுங்கிவிடுவார்கள். ஜாக்கிரதையாக விருந்து சிக்கனமாகச் செலவு செய்தல் உத்தமம். யாத்திரைக்காரர் தங்கும் தருமசாலைகளிலும் சிலகட்டடங்களிலும் விபசார ஸ்திரிகளும், திருடர்களும் இருக்கிறார்கள். மேலும், அத்தருமசாலைக்கு அருகிலிருக்கும் கடைகளிலேயே போஜனாதி சாமான்களை வாங்கும்படி கட்டாயப்படுத்துவார்கள். அந்த சாமான்களோ அநியாயமும் அதிக விலையாகவுமிருக்கும். ஜாக்கிரதையாக விருத்தல்வேண்டும். பிரயாணம் செய்யும்போதும், மற்றவிடங்களில் தங்கும் போதும், பழைய சாதம், தயிர், மிட்டாய், கொய்யாப்பழம், இலந்தைப்பழம், மாம்பழம் நெல்லிப்பழம், அன்னசிப்பழம், முதலானதுகளை உண்டால் உடனே வியாதிவரும். மிளகுரசத்துடன் புதியசாதம், காப்பிநீர், ரொட்டிமுதலானதுகளை மிதமாகச் சாப்பிடுதல் நல்லது. இராக்காலங்களில் சீக்கிரம் சாப்பிட்டு கம்பளப்போர்வையுடன் படுத்துக்கொள்ளுதல் சுகம். நெருப்பு கனற்சட்டியில் குளிர்காய்வது நலந்தரும். காசி, ஆகிரா, டில்லி, முதலான சில பெரிய பட்டணங்களில், தாசி, வேசிகளும், சால்வை துப்பட்டாக்களும் சில்லரைச் சாமான்களும் அதிகம். அவைகளை விரும்புதல் நலமன்று

வடதேசங்களில் ஒத்தைக யாட்டு வண்டி ஜட்கா [illegible] கிடையா. எக்கா வண்டியும், கோச்சுவண்டிகளுந் தானிருக்கின்றன. கஷ்டத்துடன் கோச்சுவண்டிகளை வாடகைக்குக் கொண்டுபோய், வேலநந்தரும், வேடிக்கை, விசித்திரங்களையும், ஸ்தலமகத்துவங்களையும், அப்பவிருப்பில் அந்தந்த நாடுகளின் சுயபாஷை [illegible] இங்கிலீஷ்பாஷை முதலானதுகளைத் தெரிந்தவழிகாட்டிகளுக்கு [illegible] வது சிறிது பொருள் கொடுத்தால் கொண்டுபோய் காட்டுவார்கள். யாவரிடத்திலும் மரியாதையாகவும், அன்பாகவும் பேசினால் வேண்டிய உதவிகள் அடையலாம்.

வடதேசத்தின் புகைவண்டிகள் பெரும்பாலும் இராக்காலங்களில் போவதால் யாத்திரைக்காரர் வண்டி ஏறுவதற்கு அரைமணி நேரம் முந்தியே போய் டிக்கட்டுகளை வாங்கிக் கொள்ள வேண்டும். சில ஸ்டேஷன்களில் டிக்கட்டு கொடுப்போரும், போலீஸ்காரர் கொடுப்போரும் இனும் கேட்பார்கள், யாதாவது கொஞ்சம் சில்லரை கொடுத்தால் வேண்டிய உதவி செய்வார்கள். இது கெட்ட வழக்கமாயினும் விதியின்றி அனுசரிக்க வேண்டியிருக்கிறது. ஸ்டேஷன் மாஸ்டர் முதலான புகைவண்டி உத்தியோகஸ்தர்களிடம் மரியாதையுடன் பேசினால் அவர்கள் வேண்டிய உதவி செய்வார். யாத்திரை செய்வோர் தாம் விரும்பும் நாட்டின் வி[illegible] படம் முதலானவைகளை தன்னுடனேயே கொண்டுபோக வேண்டும். உஜ்ஜினி, குவாலியூர், ஹிந்தூர், ஜயப்பூர் முதலான விடங்களில் [illegible] வேறுவித நாணயங்கள் வழங்கிவருதலால், அந்த நாணயங்களையும் முன்னமே சம்பாதித்துக்கொண்டு போகுதல் சுகரமாம். வடதேசத்தில் ரெயில்வே சில்லரை சிப்பந்தி சேவகர்களும், போலீஸ்சேவகர்களும், வண்டிக்காரர்களும் பொதுவாக வடதேசத்தாரில் பெரும்பாலர் முரடர்களும் முன்கோபிகளுமானபடியால் அவர்களிடம் நயமாகவும் மரியாதையாகவும் பேசினால் நன்மையுண்டாகும்.